

மலர்ந்த
நேசப்பூவே!
உமா பாலகுமார்
JUN 13 2010

# மலர்ந்த நேசப்பூவே!

## 1

வானம், பூமிக்கு அனுப்பிய ரகசிய சிநேகிதனாய் மழைத்துளிகள் எங்கும் பரவ, நீர்ப் பூக்களின் தோரணங்களால் தன் காதலியை அலங்கரிக்க ஆரம்பித்தது மழை!

மண்ணை முத்தமிட்டு துள்ளிக் குதித்து தாளலயத்தோடு வெள்ளி மலர்த் தூவலுடன் சங்கீதம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தது சாரல்!

அந்த மழை நாளைய இளம் காலைப் பொழுதில், அந்த ஆர்க்கிடெக்ட் அலுவலகத்தில், தன் நண்பனுடன் தான் செய்யப் போகின்ற ஒரு பெரிய ப்ராஜெக்ட்டைப் பற்றிக் கலந்தாலோசித்துக் கொண்டிருந்தான் தீரேந்தர்.

கோயம்புத்தூரில் ஒரு பெரிய ட்ரேட் சென்டரும் ஷாப்பிங் மாலும் உருவாக்கும் பணி, அவனுடைய சத்யன் குரூப் ஆப் கன்ஸ்ட்ரக்ஷனுக்குத் தரப்பட்டிரு

JUN 13 2010

பல கோடி ரூபாய் ப்ராஜெக்ட் என்பதால் அதன் ப்ளான் மற்றும் டிசைன்களை இருவருமாகச் சேர்ந்து கலந்தாலோசித்து அப்ருவலுக்குத் தயார் செய்து கொண்டிருந்தனர்.

அப்போது அவனுடைய செல் ஒலிக்க எடுத்துப் பேசியவனுக்குள், பெரும் உற்சாகம் வருவதாய்!

அவனுடைய பள்ளித் தோழன் தன்ராஜ். இப்போது டாக்டராக சென்னையில் பணிபுரிந்து வருகிறான்.

அவனுடைய மருத்துவமனையைக் கட்டித் தந்ததும் சத்யன் குரூப் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்தான்!

பால்யத்தில், அவர்கள் கழித்த இனிய தருணங்கள், எங்கோ ஒரு ஓரத்தில் இன்னும் அழியாமல் புதைந்திருந்தன.

இப்போது அவன் எதற்கு அழைத்திருப்பான் என்ற யோசனையுடனே பேசியபோது, பெரும் பரபரப்புடனிருந்தான் அவன்.

"தீரேன்! ஒரு முக்கியமான விஷயம்! நீ உடனே கிளம்பி சென்னைக்கு வரணும்... இங்கே உனக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திட்டிருக்கு!" ஆவலுடன் கூறினான்.

"என்ன தன்ராஜ்... அப்படி ஒரு பிளசண்ட் சர்ப்ரைஸ்... இப்ப என்னால வர முடியாது... நான் ஒரு ப்ராஜெக்ட்டிலே ரொம்ப பிசியா இருக்கேன்... என்ன விஷயம்னு சொல்லு!"

"ம்... உனக்கு ஏஞ்சலினா ரோஸலின்னு யாரையாவது தெரியுமா?"

அந்த ஒற்றைக் கேள்வியில் விரைத்த நாண் போல் தேகம் நிமிர, தீரேந்தரின் கண்கள் இடுங்கின.

"ம்... தெரியும்! திடீர்னு ஏன் கேக்கறே?" சிறு தவிப்புடன் வினவினான் அவன்.



"அவங்க இப்ப என் ஹாஸ்பிடல்லேதான் அட்மிட் ஆகியிருக்காங்க... நீ உடனே கிளம்பி வா!"

"என்னாச்சு அவளுக்கு... ஏதாவது ஆக்சிடெண்டா?" பதட்டத்துடன் கேட்டான் தீரேன்.

"அதெல்லாம் இல்லை! ஷி இஸ் நார்மல் நௌ... ஆனா... அவங்க குழந்தைக்கு அப்பான்னு உன் பேரையும் அட்ரஸையும்தான் பர்த் சர்டிபிகேட்டுக்காகத் தந்திருக்காங்க!"

மறு கணமே உடல் ஆடிப்போனது தீரேனுக்கு...!

'இது நிஜமா...? இப்படி நடக்க வாய்ப்பிருக்கிறதா? நூற்றுக்கு ஒரு சதவீதமாக இது நடந்து விட்டிருக்குமா?'

மனதிற்குள்... சுனாமியாய் கேள்வி அலைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் துள்ளி எழும்பின.

"கடவுளே... இது எப்படி சாத்தியம்..? பதறித் தவித்த தீரேன், உடனே ஒரு விமானத்தில் சென்னைக்குக் கிளம்பினான்.

* * *

இதயம் பல மடங்கு வேகத்தில் துடிக்க... நினைவுகள் பின் சென்றன. பயணத்தில் பின் செல்லும் சிறு பிள்ளைகளின் இனிய கையசைப்பாய் ஞாபகங்கள்!

பத்து மாதங்களுக்கு முன்பு அவன் தாய் சிவபார்வதி திடீரென்று நோய் வாய்ப்பட்டுப் போன நேரம் அது!

திடீரென்று 'லங் கேன்சரால்' அவர் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்திருந்தது.

ஒரு நாளிரவு அவனை அழைத்தவர் "தீரேன், உங்கப்பாவோட கடை[illegible]யுமா? உன

JUN 13 2010

கும் அவரோட சித்தப்பா பேத்தி வாசுகிக்கும் கல்யாணம் செஞ்சு வைக்கணும். உறவுலதான்... அதுவும் தன் தங்கை மகளைத்தான் உனக்கு மணமுடிக்கணும்னு என்கிட்டே சத்தியம் வாங்கிட்டாரு!

"திடீர்னு நான் இப்படிப் படுக்கையில விழுந்துட்டேன்... அந்தக் கல்யாணத்தை நானாவது பார்க்கணும்னு ஆசைப்படறேன்ப்பா!"

அவர் விழிகளில் பெரும் ஒளியுடன் கூடிய நம்பிக்கை தெரிவதாய்!

இன்னும் ஒரு மாதத்திற்குள் இறந்து போய் விடுவாரென்று டாக்டர்கள் கை விரித்திருந்த நேரத்தில் அவர் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுவாரென்று அவன் கனவிலும் நினைக்கவில்லை!

"அதற்குள் எப்படி? திருமணம்... அதோடு இணைந்த பொறுப்புகள், கட்டுப்பாடுகளை வெறுப்பவன் அவன்!

அவனுடைய நண்பர்கள் அனைவரும் திருமணத்திற்குப் பிறகு பெரிதும் மாறிப் போனதையும் அவன் அறிந்தே இருந்தான்.

தன் சுதந்திரத்தையும், லட்சியத்தையும் தடை செய்வது எதுவாக இருந்தாலும் அது தனக்கு தேவையில்லை என்பதில் பெரிதும் உறுதியாக இருந்தான்!

அவனுடைய நண்பன் விசுவத்தின் இறப்பு வேறு, காதல், திருமணம் என்பனவற்றை கசப்பான ஒரு அனுபவமாகவே அவனுள் பதித்திருந்தது.

இப்போது அவன் தாய் சொல்வதைக் கேட்கும்போது, என்ன செய்வதென்று புரியாமல் திணறிப் போனான் அவன்.



அப்போது இன்னொரு குண்டையும் தூக்கிப் போட்டார் அவர்.

"அந்தப் பொண்ணு வாசுகியை ஏதோ ஃபங்ஷன்லே ரொம்ப சின்ன வயசுலப் பாத்தது! இப்ப எப்படி இருக்காளோ தெரியலை! சென்னையில தங்கி ஹாஸ்டல்லே தான் படிச்சிட்டிருக்காளாம்...

"நீ போய் பேசி அவளை இங்கே அழைச்சிட்டு வரியா? அவங்கப்பாவும் அம்மாவும், பெரிய பொண்ணு பிரசவத்துக்காக மலேஷியா போயிருக்காங்க. அவங்ககிட்டே எல்லாம் பேசிட்டேன்...

"அடுத்த மாசம் வராங்க! பாவம் அவங்களை எதுக்கு தொந்தரவு செய்யணும்! நீ போய் அந்தப் பொண்ணோட பேசி விபரம் சொல்லிக் கூட்டிட்டு வா... நான் என் மருமகளைப் பாத்தப்புறம் தான் கண் மூடுவேன்."

பிடிவாதமாகக் கூறிவிட்டுக் கண்களை இறுக மூடிக் கொண்டார்.

மகனைப் பற்றிய கவலை அவரை உள்ளூர அரித்துக் கொண்டிருக்கும் போதே திடீரென்று படுக்கையில் விழுந்தவருக்கு அவன் திருமணத்தைப் பார்க்க முடியவில்லை என்றாலும் அந்தப் பெண்ணையும் அவனையும் இணைந்தாவது கண்டுவிட வேண்டும் என்ற ஆவல்!

தன் கணவரின் கடைசி ஆசையை நிறைவேற்றும்படி அவர் தன் மகனுக்கு இன்று இறுதிக் கோரிக்கை வைத்திருக்கிறார்.

தனக்குப் பிறகு அவன் தனியாளாகவே நின்றுவிடக் கூடாதே என்ற கவலை அவருக்கு!

JUN 13 2010

ஆனால் தீரேனுக்குத்தான் இருதலைக் கொள்ளி எறும்பாய் ஒரு நிலை!

தந்தை இறந்து ஏழு வருடங்கள் கழிந்திருந்தாலும் தொழிலில் பொறுப்பேற்ற இந்த மூன்று வருடங்களாக அவனும் அவர் நச்சரிப்பை சுலபமாக சமாளித்தவன் தான்!

இன்றோ அவர் நிலையில் எதுவும் முடியாமல் போக என்ன செய்து இந்தப் ப்ரச்னையிலிருந்து விடுபடுவதென்று யோசிக்க ஆரம்பித்தான் அவன்.

மறுநாள் வந்த குடும்ப டாக்டரும் அவனை வற்புறுத்தி தாயின் கடைசி விருப்பத்தை நிறைவேற்றும்படி அறிவுரை கூற, வேறு வழியின்றிப் போனது!

அடுத்த நாளே கிளம்பி சென்னைக்குச் சென்றவனுக்கு அங்கு ஒரு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

## 2

அன்று ஞாயிறென்பதால், சிவபார்வதி கூறியபடி அவனுடைய ஹாஸ்டலுக்கு போன் செய்தபோது, அவளும் அவனிடம் முக்கியமாகப் பேச வேண்டுமென்று உரைத்து ஒரு ரெஸ்டாரண்ட்டிற்கு வரும்படிக் கூறினாள்.

அங்கு சென்றபோது அவளுடைய நண்பர்களும் அவளுடன் வந்திருந்தனர்.

தன்னை அறிமுகம் செய்து கொண்டு, நால்வருக்கென முன்பே பதிவு செய்திருந்த அந்த டேபிளில் அமர்ந்த போதுதான், அவர்களை அறிமுகம் செய்தாள் அவள்!



"மிஸ்டர் தீரேந்தர்! அப்பாவும் அம்மாவும் ரெண்டு நாள் முன்னாடிதான் இந்த விஷயத்தையே என்கிட்ட சொன்னாங்க. எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியலை!" தர்ம சங்கடத்துடன் நிறுத்தினாள்.

அந்தக் கணமே தீரேனுக்கும் தன்னைப் போலவே இந்தத் திருமணத்தில் அவளுக்கும் உடன்பாடில்லை என்பது புரிய வர, ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் நிமிர்ந்தான்.

அதற்குள் அந்த இளைஞனே பேச ஆரம்பித்தான்.

"ஹலோ சார்... நான் மைக்கேல்... நானும் வாசுகியும் மூணு வருஷமா ஒருத்தரை ஒருத்தர் டீப்பா விரும்பறோம்..."

"ரெண்டு பேருமே வேற வேற மதம்கிறதால ரெண்டு வீட்டிலேயுமே ஒத்துக்க மாட்டாங்கன்னு தெரியும். அதான் ஒரு கோவில்லே வெச்சி மோதிரம் போட்டு மாலை மாத்திக்கிட்டோம்!"

"மத்தவங்களுக்கு எப்படியோ எங்களைப் பொறுத்த வரைக்கும் நாங்க தம்பதிகள்தான்... எங்களைப் பிரிச்சிடாதீங்க சார்... ப்ளீஸ்!"

மைக்கேல் கேட்டதும் சட்டென்று சிரித்து விட்ட தீரேன், "தேங்க் காட்!" என்றதும் அனைவரும் அதிர்ந்தனர்.

இந்தத் திருப்பத்தை மூவருமே எதிர்பார்க்கவில்லை என்பதை அவர்களின் அதிர்ந்த முகபாவமே தெரிவிக்க, பேச ஆரம்பித்தான் தீரேன்.

"எனக்கும் இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லை."

JUN 13 2010

அவன் கூறியதும் "ஏன் சார் நீங்களும் எங்களை மாதிரியே வேற யாரையாவது விரும்பறீங்களா?" ஆவலுடன் வினவினான் மைக்கேல்.

"சர்ட்டென்லி நாட்! இந்தக் காதல், கல்யாணம்கிற முட்டாள் தனத்தை எல்லாம் நான் செய்ய மாட்டேன்!"

அலட்சியமாகத் தோளைக் குலுக்கி கூறியவன், "இப்ப என்ன செய்யறது? எங்கம்மா இன்னும் ஒரு மாசம்தான் இருப்பாங்கன்னு டாக்டர்ஸ்..." முடிக்க முடியாமல் அவன் முகத்தில் பெரும் இறுக்கம் வந்தது.

"இந்த விஷயத்துல என்னால உங்களுக்கு உதவ முடியாது... சாரி" மெல்லக் கூறினாள் வாசுகி.

"ம்... அம்மா நான் கல்யாணம் செஞ்சுக்கப் போற பொண்ணைப் பாக்கணும்னு ரொம்ப ஆசைப்படறாங்க... அவங்க கடைசி விருப்பம் இது... என்ன செய்யறது?"

அவன் தீவிரமாய் யோசிக்கும்போதே, ஒரு மென்மையான குரல் இடையிட்டது.

"நான் உங்களுக்கு உதவத் தயார் மிஸ்டர் தீரேந்தர்!" என்ற புதுக் குரலில் அவன் யோசனையுடன் நிமிர்ந்தான்.

அவர்களுடன் வந்திருந்த அந்தப் பெண் தான் அப்படிக் கூறினாள்.

அவனுக்கிருந்த பதட்டத்திலும் யோசனையிலும் அவளை ஏறிட்டுப் பார்க்காதிருந்தவன், முதன் முதலாகப் பார்த்தபோதே அவள் பேரழகி என்பது புரிவதாய்!

உடனே, இது போன்ற ஒரு அழகு தானே விஷக் கவர்ச்சியாய் என் நண்பன் விசுவத்தின் உயிரைப் பலி வாங்கியது என்ற சீற்றம் வந்தது.



ஏனோ அவன் முகம் உடனே இறுகியது.

அதற்குள் மைக்கேல்தான் அவளை குற்றவுணர்வுடன் அறிமுகப்படுத்தினான்.

"சாரி சார்... அறிமுகப்படுத்த மறந்திட்டேன்... இவ எங்க பேமிலி ஃப்ரெண்ட் பொண்ணு! அங்கிளோட பொண்ணு ஏஞ்சலினா ரோஸலின்... நாங்க இவளை ரோஸீன்னு கூப்பிடுவோம்! யு.எஸ்ஸிலேருந்து வந்திருக்கா..." பெருமையுடன் அறிமுகம் செய்தான்.

"ஹாய்..." என்று முறுவலித்தவளுக்கு பதிலாய் சிறு புன்னகையைப் பரிசளித்தவன், "மிஸ்.ரோஸலின்... நீங்க எப்படி எனக்கு உதவ முடியும்னு நான் தெரிஞ்சுக்கலாமா?" அழுத்தமான குரலில் வினவினான்.

"ம்! வாசுகிக்குப் பதிலா நான் வேணா மைக்கேலோட வரேன்... என்னை வாசுகின்னு அறிமுகப்படுத்துங்க... உடனே திரும்பிடப் போறோம்... அவ்வளவுதானே!

"உங்களுக்கும் கல்யாணம் இதிலெல்லாம் நம்பிக்கை கிடையாது... எனக்கும் அதுக்கெல்லாம் இப்ப நேரமில்லை... மேல படிக்கணும்... வேலை பாக்கணும்... என் ஆம்பிஷன்ஸ் வேற மாதிரி.

"எப்படியும் வாசுகியோட அப்பாவும் அம்மாவும் வர ஒரு மாசமாயிடும்... சாரி... அதுக்குள்ளே என்ன வேணாலும் நடக்கலாம்!"

"உங்களுக்கு சரின்னா, மைக்கேலுக்காக நான் இந்த உதவியை செய்யறேன்... எங்க அம்மா அப்பாவும் அடுத்த மாசம் வந்துருவாங்க... அப்புறம் நானும் ஸ்டேட்ஸ் போயிடுவேன்... எனக்கு இதிலே எந்த ப்ராப்ளமும் இல்லை!"

JUN 13 2010

அவள் கூறியதும், எல்லாமே சுலபமாகத் தோன்ற அவனும் சரியென்றான்.

உடனே வாசுகி உணர்ச்சி வசப்பட்டு அவனை அணைத்துக் கொள்ள, ''தேங்க்யூ ரோஸ்'' உணர்ச்சிகள் நிரம்பிய குரலில் நன்றியுரைத்தான் மைக்கேல்!

''ஓ... மைக்... இந்த ஃபார்மாலிட்டிஸ் நமக்குள்ளே எதுக்கு? நீ என் ஃப்ரெண்ட்... உனக்காக இதைக் கூட செய்ய மாட்டேனா என்ன?''

இலகுவாக முடித்தவளைப் பார்த்தபோது தீரனுக்கே பிரமிப்பாய்!

சில நிமிடங்களில் இப்படி ஒரு தீர்வைக் கூறி விட்டாளென்ற வியப்பு!

''ஆனா, ரொம்ப கேர்ஃபுல்லா இருக்கணும்... அம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்னாலும் ரொம்ப ஷார்ப்.

''அதனால, வாசுகியோட அம்மா அப்பா பேரு... வளர்ந்த ஊரு... மத்த டெடெய்ல்ஸ் எல்லாம் சரியாத் தெரிஞ்சு பேசணும்.'' யோசனையுடன் பகர்ந்தான்.

''அதெல்லாம் ரோஸ் பாத்துப்பா. அவ ரொம்ப ஷார்ப் அண்ட் ஸ்மார்ட்! இந்த ப்ராப்ளத்தை சரியா ஹேண்டில் பண்ணிடுவா!

''எங்க வீட்டிலேயே வந்தவுடனே அம்மாவையும் அப்பாவையும் தம்பியையும் உடனே கைக்குள்ளே போட்டு 'பெட்' ஆகிட்டா.''

பெருமையுடன் கூறிய மைக்கேலை வாஞ்சையுடன் தலையைக் கலைத்து விட்டாள் அவள்.

அவனுக்குள் சிறு வியப்பும் ஆர்வமும்.. ஆண் பெண் நட்பு இன்றும் புனிதமாய்த் தொடர்கிறதாவென்ற கேள்வி!



அவர்களின் செயல்களும் அன்யோன்யமும் ஆனால், இருவரின் தோழமையைப் புரிய வைப்பதாய்!

உடனே, ட்ரீட்டாக ஸ்வீட்டும் காரமும் வரவழைத்த வர்கள் ஐஸ்கிரீமுடன் அதைக் கொண்டாடி முடித்தனர்.

மறுநாளே, மைக்கேலும், ரோஸலினும் கோயம்புத் தூருக்கு தீரேனுடன் செல்வதென்று முடிவாயிற்று.

ஒரே நாளில் வாசுகியுடன் பழகி அவர்களது குடும்பம் பழக்க வழக்கங்கள் பற்றி ரோஸ் அறிந்து கொண்டதாகப் பெருமையுடன் கூறினான் மைக்கேல்.

அன்று மூவரும் கிளம்பி கோயம்புத்தூருக்குச் சென்ற பிறகுதான் அவன் வாழ்வில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

## 3

தீரேந்தர், தன்னை யாரோ அழைப்பது கேட்டு நிமிர்ந்த போதுதான், பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்த ஒரு மனிதர் அவனை சீட் பெல்ட் போடும்படிக் கூறுவது புரிந்தது.

பழைய நினைவுகள் பனிமூட்டமாய்க் கலைய... நிகழ்காலம் விடியலின் கதிர்களாய் உள்ளே கதகதப்பாய்ப் பரவின.

தன்ராஜ் கூறியது உடனே ஞாபகம் வர, எனக்கு ஒரு குழந்தையா... என் உயிரில் ஒரு ஜீவன் உதித்திருக் கிறதா... மென்மையாய் சிலிர்த்தது தேகம்!

இனம் புரியாத உணர்வில் ஒவ்வொரு செல்களும் துடித்தன.

JUN 13 2010

விமான நிலையத்தில் இறங்கிய உடனே எப்போதும் தங்குகின்ற ஓட்டலிற்கு சென்று குளித்துத் தயாராகி, மருத்துவமனைக்கு விரைந்தான்.

இது நிஜமா... புலன்கள் புரியா ஏக்கம் கொள்ள, இது நான்தானாவென்ற தகிப்பு!

காதல், திருமணம் அதனால் வருகின்ற தொந்தரவு களை வெறுத்தவன் இன்று ஏன் இப்படி மாறினேன் என்ற புதிர்க் கேள்வி அவனுள்!

மருத்துவமனையை அடைந்தபோது மாலையாகி விட்டிருந்தது.

நேரே தன்ராஜின் அறைக்குச் சென்றவனை ஆவ லுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தான் அவன்.

தீரேனுக்கோ கால்கள் தரையில் பாவாத ஒரு நிலை!

''வா தீரேன்... நீ வரப்போறது அந்தப் பெண் ரோஸலி னுக்குத் தெரியாது... அவங்கம்மா தான் கூடத் துணைக்கு இருக்காங்க!''

''எனக்குமே உங்கம்மா இறந்தப்ப அங்கே வீட்டிலே அவங்களைப் பாத்த ஞாபகம்... அதான் உடனே போன் பண்ணினேன்!'' என்றபடிக் கிளம்பினான்.

ரவுண்ட்ஸ் என்று நினைத்து உடன் வர முனைந்த நர்ஸை நிறுத்தியவன், ''இது பர்ஸனல் விசிட்! ரூம் நம்பர் 23லே கொஞ்ச நோத்துக்கு யாரும் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்.''

அமைதியாக ஆணையிட்டு விட்டு தீரேந்தரை அழைத்துக் கொண்டு வேகமாக நடந்தான்!

கால்கள் விரைந்து நடந்தாலும், இதயமோ பலமாகத் துடித்துப் பலவீனம் சுமந்தது.



ஏனோ, ஒரு புதிரை நோக்கி விரையும் தவிப்பும் பரவச மும்!

தொடுவானத்தைத் தொட்டுவிட்ட பிரமிப்பும்... இமயத்தின் விளிம்பை எட்டிய வெற்றி நிலையும்!

அறை எண் '23'க்கு முன்பு நின்று தன்ராஜ் கதவைத் தட்டியதும், சிறிது நோத்திற்குப் பிறகு கதவு திறக்கப் பட்டது.

ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி அவர்களை சிறு முறுவலுடன் வரவேற்றார்.

அவர்தான், ரோஸின் தாயென்பது புரிவதாய்!

எதிரே தெரிந்த கட்டிலில், ரோஸலின் சோர்வுடன் உறங்கிக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு மறுபுறம் ஒரு தொட்டில் தெரிய, இதயம் படபடத்து தீரேனுடைய பார்வை ஒரு வித அலைப் புறுதலுடன் ரோஸின் முகத்தில் பதிந்தது.

பிரசவத்திற்குப் பிறகும் வாடாத கொடியாய் தாய்மை அழகுடன் ஒரு மென்மையான மலராய்த் தெரிந்தாள் அவள்.

அவள் தாயின் கண்கள் யோசனையுடன் தீரேனை வருட, ''இவர்தாம்மா உங்க மாப்பிள்ளை'' என்று அறி முகப்படுத்தி விட்டான் தன்ராஜ்.

அவர் பார்வையில் கசிந்தது, மகிழ்ச்சியா வேதனையா வென்றே அறிய முடியாமல், கண்கள் பனித்திருந்தன.

தர்ம சங்கடத்துடன் அவரை வணங்கியவன், வேக மாகக் கட்டிலைத் தாண்டிச் சென்று சிறு தொட்டிலை நெருங்கினான்.



JUN 13 2010

அதில் இளஞ்சிவப்பு நிற டர்க்கி டவலில் சுற்றப் பட்டு துயில் கொண்டிருந்த அந்த சிறு பிஞ்சைக் கண்டதும், அவனுக்குள் புரியாத பல உணர்வுகள்!

துணிக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்த சிறு பிஞ்சுப் பாதங்கள், செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்த இலவம் பஞ்சாய் தெரிந்தன.

விழிகள் கனிந்து பளபளக்க, மெதுவாகக் குனிந்து அந்த சிசுவின் பாதத்தைத் தீண்டினான்.

மயிலிறகின் மென்மையாய் ஸ்பரிசித்த அந்தத் தொடுகை அவனை சிலிர்க்க வைத்தது.

இது என் குழந்தை... என் வாரிசு... என் உயிரில் ஜனித்த ஒரு ஜீவன்... உடல் முழுவதும் ஏதோ புது வித உணர்வில் துடித்தது.

மெல்லிய அனிச்ச மலராய் அழகுப் பூச்செண்டாய் சயனித்திருந்த அந்தக் குழந்தையின் செப்பு இதழ்கள் உறக்கத்திலேயே விரிந்து சிரித்தன.

''தீரேன்... கனவுல இவன் சிரிக்கறதைப் பாரேன்! அவனுக்கு நீ வந்தது தூக்கத்துல கூட தெரிஞ்சிருக்கு!''

தன்ராஜ் கூறியதும் முகம் மலர நிமிர்ந்தவன், ''பையனா தன்ராஜ்?'' ஆவலுடன் வினவினான்.

ஒரு விதத் தீவிரத்துடன் பளபளத்த நண்பனின் விழிகளைக் கண்டு புன்னகைத்த தன்ராஜ், ஆம் என்பது போலத் தலையசைத்தான்.

பிறகு ஒரு நாற்காலியை எடுத்துத் தொட்டிலின் அருகே போட்டு அதில் தீரேனை அமரும்படிக் கூறினான்.

மெதுவாக அமர்ந்தவன், குழந்தையின் முகத்திலேயே ஏக்கத்துடன் பார்வையைப் பதித்து, இருவரும் விழித் தெழக் காத்திருந்தான்.



அதே நேரம், அந்தப் பெண்மணியிடம் திரும்பினான் தன்ராஜ்.

''மேடம்! நாம இங்கே கொஞ்சம் நேரம் தேவையில்லைன்னு நினைக்கறேன். அவங்க பேசட்டுமே... நாம வெளியே போகலாமா?'' என்றான்.

அவரும், மறுப்பின்றி யோசனையுடன் இருவரையும் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வெளியேறினார்.

சில நொடிகளே கடந்திருக்க, தன் குழந்தையை பொக்கிஷமாகக் கண்ட உற்சாகத்தில் அவன் அமர்ந்திருந்தபோதுதான், மெதுவாக அசைந்த ரோஸ் சோம்பலுடன் கண் விழிக்க ஆரம்பித்தாள்.

* * *

விழியிமை திறந்தவுடன், சிறு பெருமிதமும், முறுவலுமாய் தொட்டிலின் புறம் திரும்பியவளின் பார்வை... தீரேனைக் கண்டவுடன் ஸ்தம்பித்துப் போனது!

விழிகளில் விரவிய விதிர்ப்புடன் அந்த ஏசியிலும் சன்னமாய் வியர்க்க ஆரம்பிக்க தேகம் மூங்கிலாய் விரைத்தது.

இவன் எப்படி... எப்போது இங்கு வந்தான். கடவுளே குழப்பமும் கோபமும் பல்கிப் பெருகின.

வேகமாக எழுந்து அமர முயற்சித்தவளால், சிசேரியன் ஆபரேஷன் என்பதால் முடியாது போக, ஒரு வித இயலாமையுடன் ''அம்மா...''வென்றழைத்தபடி மறுபுறம் திரும்பினாள்.

ஆனால் அங்கு அவரைக் காணாமல் கொதித்தவளின் கோபம் முழுவதும் தீரேனிடமே திரும்பிற்று!

''நீங்க ஏன் இங்கே வந்தீங்க? என் வாழ்க்கையை மேல மேல சீரழிக்கவா?'' குமுறலு[illegible]

JUN 13 2010

''இல்லை... அப்படி உன் வாழ்க்கை என்னால சீரழிஞ்சு துன்னு நீ நினைச்சா, அதை செப்பனிட்டு சரி செய்யத்தான் வந்தேன்!'' தீரேன் ஆழ்ந்த குரலில் முடித்தான்.

''இது என் வாழ்க்கை... அதை எப்படி வாழணும்னு எனக்குத் தெரியும்... யாரும் அதில் தலையிட வேண்டாம்!''

விழிகள் நிறைய, ஒரு வித வீம்புடன் கூறிவிட்டு வேறு புறம் திரும்பியவளைப் பார்வையால் அளவிட்டவன், சிறு கசப்புடன் பேச ஆரம்பித்தான்.

''நான் உன்னைப் பத்தி வேற மாதிரி நினைச்சிருந்தேன் ரோஸ்... வெளிநாட்டுல வளர்ந்தவ... பண்பு தெரிஞ்சவ...''

அவன் குரலை உடனே இடைமறித்தாள் அவள்.

''ஓ! வெளிநாட்டில வளர்ந்திருந்தா எப்படி வேணா இருப்பாங்கன்னா... நானும் ஒரு தமிழ்ப் பொண்ணு தான்!'' குரல் உடைந்திருந்தது.

''நான் அதைச் சொல்ல வரலை... என் குழந்தையோட பிறப்பை மறைக்கிற அளவு கல்நெஞ்சக்காரியா... பொய்களின் பிரதிநிதியா நான் உன்னை எதிர்பார்க்கலை... அதைச் சொன்னேன்!''

சிறு கடுமையுடன் வந்த அவன் குரலின் சீண்டலில் நகித்தவள், ''இது உங்க குழந்தைன்னு யாரு சொன்னா... எனக்கு வேற திருமணமாகி அதிலே பிறந்த குழந்தை யாவும் இருக்கலாமில்லையா?'' வார்த்தைகள் குரூரமாய் சிதறின.

மறுகணமே எரிமலையாகிப் போனான் அவன்.

''என்ன சொன்னே? அப்படியே ஒன்னு விட்டேன்னா ட்டுக் குட்டிக் கரணம் அடிச்சிக் கீழே விழுவே... கட்டின



மனைவியை அடிக்கக் கூடாது... அதுவும் அ
பேஷண்ட்ங்கிறதால பொறுத்துப் போறேன்.''

அடிக்குரலில் சீறியவனையே உறுத்து விழித்தவள், ''அது வெறும் நடிப்பு. உங்கம்மாவோட நிலைக்காக நாம எல்லாரும் சேர்ந்து நடத்தின ஒரு நாடகம்...!'' சுள்ளென்று முடித்தாள்.

''அது நாடகமா இருக்கலாம்... ஆனா, இது நிஜம்! இது என் குழந்தை... என்னால விட்டுத்தர முடியாது!''

''ஏன்? அந்த வாசுகி என்ன ஆனா? எங்க மைக்கேலையும் தவிக்க விட்டுட்டு உங்களையும் ஏமாத்திட்டுப் போயிட்டாளா?''

உடனே அவன் புருவங்களிரண்டும் சுளித்து நெறிந்தன.

''வாசுகியைப் பத்தி இப்ப என்ன? அவ என்ன ஆனான்னு எனக்குத் தெரியாது!''

''ஓ! அவளையும் யூஸ் பண்ணிட்டுக் கை கழுவியாச்சா?''

ஏளனத்துடன் வினவியவளை, அவனுடைய ஒற்றைப் பார்வையே அடக்குவதாய்!

சிவந்த விழிகளும், இறுகிய முகமும் அவன் நிலையைப் பறை சாற்றின.

''எப்படி ரோஸ் இவ்வளவு சாடிஸ்டா மாறினே நீ... பெண்களை யூஸ் பண்ணிட்டு கை கழுவற அளவு நான் கீழ்த்தரமானவன் இல்லைன்னு உனக்கே தெரியும்!''

உடனே உதடுகளை ஏளனமாகச் சுழித்தவள், ''ஓ! அதான்... என்னை உங்க அம்மாவுக்காக போலி நாடகம்

ஆடி கல்யாணம் செஞ்சுக்கிட்டாலும் ஒரே நாள் உபயோகிச்சிகிட்டு யூஸ் அண்ட் த்ரோ மாதிரி எறிஞ்சீங்களா?'' கூர்மையுடன் கேட்டாள்.

''ரோஸ்! இது தப்பான குற்றச்சாட்டு! நடந்தது என்னன்னு உனக்கே தெரியும். அம்மாவோட கவலையில இருந்த என்னை நீ ஆறுதல் சொல்லி சமாதானப்படுத்த... அதிலே நான் என்னையே...''

''ம்... அதைப் பயன்படுத்தி, என்னை... என் பெண்மைய சூறையாடிட்டீங்கன்னு சொல்ல வரீங்களா?'' நக்கலாகக் கேட்டாள்.

''இல்லை... அந்த நேரத்துல ஒருவித ஆறுதல் தேவையாயிருந்த நேரத்துல, நீயும் ஒத்துழைக்க நம்ம ரெண்டு பேருமே அறியாம நடந்த ஒரு தவறு அது!''

சிறு குன்றலுடன் அவன் முடிக்க, ''அப்போ அது ஒரு தவறுன்னு நீங்களே ஒத்துக்கறீங்க தானே? தவறுக்கு பிராயச்சித்தம்... ஒதுங்கிப் போறது... திரும்பவும் நோகடிக்கிறதில்லை!'' அழுத்தந்திருத்தமாக வந்தது அவள் குரல்!

உடனே சீற்றத்துடன் தன் ஆறடி உயரத்திற்கு நிமிர்ந்தவன், ''நான் ஒதுங்கிப் போக மாட்டேன்... நீ என்ன பேசினாலும், உன்னோடவும் என் குழந்தையோடவும் தான் நான் ஊருக்குத் திரும்புவேன்!'' உறுதியாக முடித்தான்.

''நான் வர மறுத்தா... அது உங்க குழந்தைங்க இல்லைன்னு நான் சொன்னா?'' கூர்மையுடன் கேட்டாள் அவள்.

''ம்... நீ குடுத்த என் பெயரும் முகவரியும் நான் தான் அப்பாங்கிறதை நிரூபிச்சிடுமே!''



அவள், குழந்தைகள் என்றதை அந்த அவசரத்தில அவன் கவனிக்கவில்லை.

ஆனால், அதிர்ச்சியும் வியப்புமாய் தவித்தவளுக்கு, அப்போதுதான் நேற்று சிசேரியன் முடிந்த அரை மயக்க நிலையில் தன் குழந்தைகளின் பிறப்பு சான்றிதழுக்காக அவன் பெயரையும் முகவரியையும் கூறியது நினைவிற்கு வருவதாய்!

''கடவுளே...'' இதயம் பதறித் தவிக்க, ஒரு வித இயலாமையுடன் விசும்பி அழ ஆரம்பித்தாள் அவள்.

உடனே பதறிப் போனவன், ''ரோஸ்... ப்ளீஸ் அழக் கூடாது... நேத்துதான் உனக்கு ஆபரேஷன் ஆகியிருக்கு... நம்ம குழந்தைக்காகவாவது...''

''போதும்... உங்க குழந்தைக்காகவாவது நான் இருக்கணும்... உங்க அம்மாவுக்காக நான் நடிக்கணும்... எனக்காகன்னு எதுவுமே கிடையாது... இல்லை?''

கசப்பும் விரக்தியுமாய் அவள் குரலை உயர்த்த, அந்த நொடி மெல்லச் சிணுங்கி வீறிட ஆரம்பித்தது குழந்தை!

உடனே செய்வதறியாது திகைத்தவன், வேகமாக வெளியேறி அவள் தாயை அழைத்தான்.

கடுத்து சிறுத்த முகத்துடன் அவன் அழைக்க, பதட்டத்துடன் உள்ளே சென்றார் ஜெசிந்தா.

தன்ராஜின் முகவரியே இல்லாமல் வெராந்தா வெறிச்சோடியிருக்க, மெதுவாக நடந்து அவனுடைய அறைக்குச் சென்றான் தீரேன்.

# 4

அறைக்குள் கவலையுடன் நுழைந்த ஜெசிந்தாவுக்கோ பெரும் சஞ்சலமாய்!

படுக்கையில் திரும்பி முகம் புதைத்து அழுது கொண்டிருந்த மகளைப் பார்த்தால் பெரும் பரிதாபம் எழ ஓடிச் சென்று அணைத்துக் கொண்டார் அவர்.

“குழந்தை பிறந்த பச்சை உடம்பு... அழக்கூடாது கண்ணம்மா! இனிமே என்ன செய்யலாமின்னு யோசி...” மெல்ல அறிவுறுத்தினார்.

சிறிது நேரம் கழித்து அவள் அழுகை குறையத் தொடங்கும்போதே, தன்ராஜும் தீரேனும் வந்து விட்டனர்.

“ரோஸலின்! ஏன் இவ்வளவு அழுகை? எல்லாப் பிரச்னைகளுக்கும் தீர்வு உண்டும்பாங்க... உங்களுக்கும் தீரேனுக்கும் இடையில என்னாச்சின்னு எங்களுக்குத் தெரியாது!”

“ஆனா இது நல்லதுக்குத்தான்! எனக்குத் தெரிஞ்சதும் கூட ஒரு வகையில ரெண்டு பேருக்குமே நன்மைதான்! உணர்ச்சி வசப்படாதீங்க... எதுவா இருந்தாலும் வீட்டுக்கும் போனப்புறம் பேசிக்கலாம்!”

ஒரு மருத்துவராக அவன் அறிவுரை கூற, “ஆமாம்... நம்ம வீட்டுக்குப் போனப்புறம்!”

ஆழ்ந்த குரலில் முடித்தான் தீரேன்.

அதே நேரம் மீண்டும் மெல்லச் சிணுங்கியபடி அழ ஆரம்பித்தது குழந்தை!



“நோ... நான் யார் வீட்டுக்கும் வரமாட்டேன்.”

வீம்புடன் வந்த வார்த்தைகளுக்கு அவன் பதில் கூறும் முன்பே, மெல்ல விழிகளாலேயே நண்பனை அடக்கினான் தன்ராஜ்.

“கண்ணம்மா! இப்ப நீ டென்ஷனாகக் கூடாது... அமைதியா இரு! உணர்ச்சி வசப்படறது, உன் உடம்புக்கு நல்லதில்லை... மத்ததை அப்புறமா யோசிக்கலாம்... ரெஸ்ட் எடு!”

மெதுவாகத் தன் மகளின் தலையை வருடி அமைதிப்படுத்திய ஜெசிந்தா “குழந்தை அழ ஆரம்பிக்குது பாரு! ஃபீட் பண்ண வேண்டாமா?” மெதுவாக நினைவுபடுத்தினார்.

உடனே ஆண்கள் இருவரும் வெளியே செல்ல, ஜெசிந்தா குழந்தையை எடுத்து அவளருகே படுக்க வைக்க, குமுறும் மனதுடன், அணைத்துக் கொண்டு பாலூட்ட ஆரம்பித்தாள் ரோஸ்!

* * *

அறையிலிருந்து வெளியே வந்த தன்ராஜ், “தீரேன்... உனக்கு இன்னொரு அதிசயத்தைக் காட்டறேன்... வரியா?” என்றபடி ஒரு பெரிய அறைக்குள் நண்பனை அழைத்துச் சென்றான்.

அங்கு, வரிசையாய் இன்குபேட்டரில் குழந்தைகள் உறங்கிக் கொண்டிருக்க ஒரு குழந்தையினருகில் சென்றவன்,

“உனக்கு இன்னொரு ப்ளசண்ட் சர்ப்ரைஸ் இவதான்!” நமட்டுச் சிரிப்புடன் நிறுத்தினான்.

JUN 13 2010

புரியாமல் விழித்த தீரேனிடம், "உன் மனைவிக்குப் பிறந்தது ட்வின்ஸ்டா! இவளும் உன் குழந்தைதான்!"

அவன் கூறியதும் வானமே வசப்பட்டாற்போல்... தேவதைகள் பூமழை பொழிந்ததைப் போன்ற ஒரு விதப் பரவச உணர்வில் தவித்துப் போனான் தீரேன்!

'இது... நிஜமா...?' அந்தக் குழந்தையை எடுத்து மார்போடு ஏந்த வேண்டும் போல்!

ஆனால் அவனுக்கு சிறு குழந்தைகளைத் தூக்கிப் பழக்கமில்லாததால் அந்த ஆசைக்கு அணையிட்டான்.

உடனே, ஏன் இந்தக் குழந்தையை மட்டும் தனியே வைத்திருக்கிறார்களென்ற பதட்டம் வர,

"குழந்தைக்கு பெரிசா வேற எதுவும் ப்ராப்ளமில்லையே?" கவலையுடன் வினவினான்.

"நோ.. நோ! இவ கொஞ்சம் அண்டர் வெயிட்... வீக்கா இருக்கா! அதான்! நாளைக்கே ரூமுக்குக் கொண்டு போயிடலாம். டோண்ட் ஒர்ரி!" தன்ராஜ் நண்பனை ஆதரவாக அணைத்தபடிக் கூறினான்.

வெகு நேரம் அங்கேயே நின்று அந்த சிசுவின் முகத்தையும் சின்னச் சின்ன அழகிய அசைவுகளையும் பார்வையிட்டவனுக்குள் வெகு பிரமிப்பாய்!

இது என் வாரிசு என்ற பெருமிதமும், புரியாத ஒரு சிலிர்ப்பும் இப்போதும் ஆக்ரமிக்க தன்னை மறந்து நின்றிருந்தவனை, தன்ராஜ் உசுப்ப வேண்டியதாயிற்று!

"தீரேன்! வா போகலாம்! எனக்கு ரவுண்ட்ஸ் போற நேரம் வந்துடுச்சி! நீ வேணா உன் ரோஸலினோட பேசிட்டிருக்கியா?"



அவன் ஆர்வத்துடன் கேட்க, உதடு கழிந்து ஒ...
விரக்திப் புன்முறுவல் படர்ந்தது தீரேனின் முகத்தில்!

"இல்லை... இன்னிக்கு வேண்டாம்... நாளைக்குப் பாக்கலாம்! அவ கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும்" யோசனையுடன் முடித்தான்.

பிறகு அவன் விடை பெற்றுக் கிளம்பியதும் நேரே ரோஸலினுடைய அறைக்குச் சென்றான் தன்ராஜ்.

அங்கிருந்த ஜெசிந்தாவை வெளியே அழைத்தவன்,

"அம்மா! தீரேன் கிளம்பிட்டான்... அவன் ரொம்ப நல்லவன்... நல்ல பாரம்பரியமான குடும்பம் அவங்களது... இவங்க ரெண்டு பேருக்கும் நடுவில என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியாது!

"ஆனா இனிமே உங்க பொண்ணு இருக்க வேண்டிய இடம் அவன் வீடுதான்... அதை எப்படியாவது அவங்களுக்குப் புரிய வைங்க! ப்ளீஸ்!"

அமர்ந்த குரலில் கூறிவிட்டு அவன் விலகிச் செல்ல ஜெசிந்தாவுக்கோ கடும் யோசனையாய்!

பிறகு உள்ளே சென்றபோதோ, ஓய்ந்து படுத்திருந்த மகளைப் பார்த்தால் பரிதாபமாய்!

வெகு நேரம் யோசித்தவர், ஒரு முடிவுடன் குழந்தையை மார்போடணைத்து உறங்க வைத்தார்.

## 5

ஓட்டலில் தன் அறைக்கு வந்த தீரேனோ பெரிதும் களைத்துப் போயிருந்தான்.

JUN 13 2010

தாங்க இயலாத மகிழ்ச்சியும், வார்த்தைப் போரில் மனைவியுடன் மல்லுக்கட்டியதும் சேர்ந்து அவனை ஓயச் செய்திருந்தன.

இரவு... மருத்துவமனையில் கண் மூடிப் படுத்திருந்த சோஸிற்குள் பல உணர்ச்சிகள் தளும்பலாய்!

பழைய ஞாபகங்கள் உலா வரும் ஊர்வலமாய் மனதில் தடம் பதிக்க, அதில் ஆழ்ந்த மனது மலரும் நினைவுகளைப் புரட்டிப் பார்க்க ஆரம்பித்தது.

சரியாக ஒரு வருடத்திற்கு முன்பு... இது போன்ற ஒரு பனி நாளில்தான் அமெரிக்காவை விட்டு சந்தோஷப் பறவையாய் சிறகடித்து தான் கிளம்பிய ஞாபகம்!

அவளுடைய தந்தை பென்னட், அங்கு ஒரு வங்கியில் உயர் அதிகாரியாகப் பணிபுரிய, எல்லா வசதிகளுடனும் மூவரும் ஒரு கூட்டுப் பறவைகளாய் மகிழ்ச்சியுடன் இணைந்திருந்த காலமது!

இந்தியாவில் பிறந்திருந்தாலும் ஒன்றரை வயதிலேயே அமெரிக்காவிற்குச் சென்று விட்டதால் அவளுக்கு இந்த ஊரைப் பற்றிய ஆர்வம் அதிகமிருந்தது.

அதுவும் ஜெசிந்தா, தான் பிறந்து வளர்ந்த தாய் நாட்டைப் பற்றிக் கூறும் போதெல்லாம் அவர் முகத்தில் தெரியும் தேஜஸும், விகசிப்பும், அவளுக்குள் ஒரு முறை தமிழ்நாட்டிற்கு சென்று வர வேண்டுமென்ற ஆர்வத்தை விதைத்திருந்தன.

விடுமுறையில் பல நாடுகள் சுற்றி வந்திருந்தாலும், மூவரும் இந்தியாவிற்கு மட்டும் சென்றதில்லை.

அவள் அப்பாவிற்கு மிகச் செல்லம் என்பதால் தனித்தும் தோழிகளுடனும் அவளை பென்னட் எங்கும் அனுப்பியதில்லை!



மற்றவர்களின் வீடுகளில் எப்படியோ, ஜெசிந்தாவும், பென்னட்டும் வீட்டில் தமிழ் மட்டுமே பேசுவது என்பதில் உறுதியாக இருந்ததால், நல்ல பேச்சுத் தமிழ் அவளுக்குக் கை வசப்பட்டிருந்தது.

அப்போது அவள் டிகிரி படித்துக் கொண்டிருந்தாலும் வளர்ப்பு முறையாலோ என்னவோ, அந்த மேல் நாட்டு வாழ்க்கை முறையும், டேட்டிங் கலாச்சாரமும் அவளுக்குள் தன் சுவடைப் பதிக்கவில்லை!

அந்தப் பனி நாளைய மாலை... இன்று நினைத்தாலும் இதயத்தை சிலிர்ப்பாய் நனைத்தது.

அமெரிக்காவின் அழகு ரம்யமாய் மனதை நிறைக்க பால்கனியில் நின்று வைர மணிகளாய் தூறல் போடும் பனி மழையை ரசித்தபடி நின்றிருந்தாள் அவள்.

அவளுடைய பெரிய வீட்டைச் சுற்றி விரிந்திருந்த பச்சைப் புல்வெளியும் அதில் வெண் முத்துக்களாய் தூவப்பட்டிருந்த பனித் திவலைகளும் மிக அழகாய் தெரிந்தன!

வெண்மையான பனியை முக்காடாய் அணிந்து மரங்கள் கிளைக் கரங்களில் வெண்பனிப் பூக்களை சுமந்து ஒற்றைக் காலில் நின்று ஆதவனின் வரவிற்காய் தவமிருக்கும் இந்தப் பனிக்காலம் அவள் மிகவும் விரும்பும் ஒரு பருவ காலம்!

அன்றும், குளிர்கால ஆடைகளை கனமாய் அணிந்து மூக்கிலும் வாயிலும் மெல்லிய புகை வர, கன்னங்கள் சிவந்து மேனி சிலிர்த்து சாரலில் நின்றிருந்தவளை அழைத்தார் பென்னட்!

"ஏஞ்சல்! உன் ட்ரெஸ் எல்லாம் பேக் பண்ணலாம்... வரியா?" மென்மையாக அழைத்தார்.

JUN 13 2010

அவளுடைய முழுப் பெயர் ஏஞ்சலினா ரோஸலின் என்பதில் பென்னட் மட்டுமே செல்லமாக அவளை ஏஞ்சல் என்று அழைப்பார்!

"வரேம்பா!" என்றபடி உள்ளே சென்றவள், தனக்கு ஒரு மாதத்திற்கு வேண்டியவற்றை எடுத்துத் தர இருவரும் அதை அடுக்க ஆரம்பித்தனர்.

இரண்டு நாட்களில் அவள் இந்தியாவிற்குச் செல்லப் போகிறாள்.

டிகிரி படிப்பை முடித்த பிறகு, ஒரு விடுமுறைக்காக ஆசைப்பட்டவளை பென்னட் தான் தமிழ்நாட்டிற்கு சென்று வரும்படிக் கூறினார்.

பென்னட்டின் குடும்ப நண்பர் ஜான் அங்கு சென்னையில் கிரானைட் பிசினஸ் செய்து வருகிறார்.

சிறு வயதிலிருந்தே நண்பர்களாக இருந்த இருவரும், இப்போதும் நல்ல தொடர்பிலிருந்தனர்.

இரு குடும்பத்தினருமே அவ்வப்போது தொடர்பு கொண்டு பேசுவது வழக்கம்!

மாதா மாதம் பேசுவது போல இந்த முறையும் இண்டர்நெட்டில் வெப் - கேமில் பேசியபோதுதான், ரோஸை இந்தியாவிற்கு அனுப்பும்படி அழைத்தனர் ஜானும், அவர் மனைவி சகாயமேரியும்!

"பென்னட்! எங்களுக்கும் பெண் குழந்தைங்க இல்லை... அவளை இங்கே ஒரு மாசம் தங்கற மாதிரி அனுப்பி வைப்பா! அவ இப்ப தானே படிப்பை முடிச்சிருக்கா...

"அப்புறம் கல்யாணமாயிடுச்சின்னா, வரது கஷ்டம்! இப்பவே வந்தாத்தான் என்ஜாய் பண்ணலாம்...



மைக்கேலும் இப்பதான் படிப்பை முடிச்சிருக்கான். பிசினஸிலே கொஞ்சம் கொஞ்சமா ஈடுபடுத்தணும்!"

"எங்க எல்லாருக்கும் உங்களை எல்லாம் நேரில பாக்கணும்னு ஆசையா இருக்கு... இருபது வருஷத்துக்கும் மேல ஆச்சே... நீயும் வா பென்னட்!" வாஞ்சையுடன் அழைத்தனர்.

ரோஸலினும் அதில் ஆர்வம் காட்டவே, முதலில் அவளை அனுப்பி விட்டு ஒரு மாதத்தில் தாங்களிருவரும் வருவதாக பென்னட் ஒப்புக் கொண்டார்.

நாளை மறுநாள் அவள் இந்தியா செல்லப் போகிறாள்.

ஒரு புரியாத எதிர்பார்ப்பிலும் உற்சாகத்திலும் ஆர்வத்துடன் தன் துணிகளை அடுக்கிக் கொண்டிருக்கும் மகளைப் பெருமையுடன் பார்த்தார் ஜெசிந்தா!

அழகிய முகத்தில் கருவண்டுகளாய் விழிகள் ஒளிர்ந்து சிரிப்பை சிந்த, சிற்பத்து முகவரியாய் கூரான மூக்கும், செப்பு இதழ்களும் செதுக்கப் பட்டிருக்க தோள் வரை படர்ந்த கூந்தலுடன் தந்த நிறத்தில் ஒரு தேவதை போலிருந்தவளை ரசித்தன அவர் விழிகள்!

* * *

ரோஸலின் இந்தியா கிளம்பும் நாளும் வர இருவரும் முதன் முறையாக மகளைப் பிரிந்து கண்ணீர் நிறைந்த விழிகளுடன் வழியனுப்பினர்.

"பை... மை ஏஞ்சல்" முன்னுச்சியில் முத்தமிட்டார் பென்னட்!

செக்-இன் முடிந்து இமிக்ரேஷன் செக்கிற்கு செல்லும் வரை திரும்பித் திரும்பித் தலையாட்டியபடிச் சென்றவள், தன் தந்தையை உயிரோடு பார்ப்பது இது தான் கடைசியென்பதை பாவம் அறியவில்லை!

JUN 13 2010

# 6

மும்பையிலிருந்து வேறு விமானம் மாறி ரோஸலின் சென்னையில் வந்து இறங்கியபோது, அவளை வரவேற்க ஜானுடைய குடும்பமே அங்கு வந்திருந்தது.

ஏற்கெனவே, வெப் கேமிராவில் நால்வரையும் பார்த்திருந்ததால், ஓடிச் சென்று மேரியை அணைத்துக் கொண்டாள் அவள்.

பிறகு ஜான், தன் மகன்கள் மைக்கேலையும் ராபர்ட்டையும் அறிமுகம் செய்ய, இருவரும் அவளை நட்புடன் வரவேற்றனர்.

அவர்களுடைய வீடு நீலாங்கரையில் கடற்கரையோரத்திலிருக்க, அந்த இடம் ரோஸிற்கு மிகவும் பிடித்துப் போனது.

அங்கு வந்து ஒரு வாரத்திலேயே அவர்களுடைய குடும்பத்தில் ஒருத்தியாய் மாறிப் போனாள் அவள்.

பெண் குழந்தையில்லாத அந்த வீட்டில் ஒரு தேவதையைப் போல் நுழைந்தவளை அந்தக் குடும்பமே பூவாய்த் தாங்கியது.

ராபர்ட்டுக்கு பன்னிரெண்டு வயதே ஆகியிருந்ததால் ஒரு குட்டித் தம்பியாய் அவளிடம் ஒட்டிக் கொண்டான் அவன்.

பரீட்சை விடுமுறை என்பதால் அவனுடன் சேர்ந்து கடலில் குதித்துக் குளிப்பதும் பின்புறமிருந்த ஊஞ்சலில் ஆடுவதுமென சிறு பிள்ளையாகவே மாறிப் போனாள் ரோஸ்!



அவனுடன் கார்ட்ஸ், கேரம், சைனீஸ் செக்கர்ஸ் விளையாடுவதும் வழக்கமாயிற்று.

தனிமையிலேயே ஒற்றைப் பெண்ணாய் வளர்ந்தவளுக்கு, ராபர்ட், மைக்கேலுடன் இனிய சகோதரப் பாசமும் பிரியமும் எழுந்தன.

அவளுக்கு சென்னையை சுற்றிக் காட்டும் பொறுப்பை மைக்கேல் ஏற்றுக் கொண்டான்.

அவளுக்கும் உடன் பிறந்த சகோதரர்கள் என்று யாரும் இல்லாததால், பிரியத்துடன் இருவரிடமும் ஒட்டிக் கொண்டாள்.

தினமும் ஊர் சுற்றுவதும், விதவிதமாகச் சாப்பிடுவதும் சர்ச்சுக்கு சென்று ப்ரேயர் செய்வதுமெனப் பொழுது இனிதாகப் போயிற்று!

ஒரு நாள் அது போல் ஒரு ரெஸ்டாரண்ட்டில் அமர்ந்திருக்கும் போதுதான் மைக்கேலின் செல்போன் அழைத்தது.

உணவு ஆர்டர் செய்யப்பட்டிருக்க, டாய்லெட்டிற்குச் சென்றிருந்த மைக்கேல், தன் செல்லை மேஜையில் வைத்து விட்டுப் போயிருந்தான்.

அழகிய ரிங் டோனுடன் அது ஒலிக்க, சுற்றியிருந்தவர்கள் அவளையே சுவாரசியத்துடன் நோக்க, சிறிது நேரமானதும், அவளே அதை எடுத்து உயிர்ப்பித்தாள்.

உடனே, படபடப்புடன் கோபமாக ஒலித்தது ஒரு குரல்!

"மைக்! நீ என்ன நினைச்சிட்டிருக்கே! எங்க வீட்டில எனக்கு கல்யாணத்துக்கு முடிவு செஞ்சிருக்காங்கன்னு நானே பதறித் தவிச்சிட்டிருக்கேன்... நீ கூலா இருக்கே!



JUN 13 2010

"ஒரு வாரமா உங்க வீட்டுக்கு வந்த கெஸ்ட்டோட ஊர் சுத்திட்டிருக்கே.. என்னைப் பாக்கவும் வரலை!" வேகமாகப் பொரிந்தாள் ஒரு பெண்!

உடனே, "சாரி... மைக் டாய்லட் போயிருக்கான்.. நான் அவங்க பேமிலி ஃப்ரெண்ட் ரோஸலின்! உங்களை இப்படி தவிக்க விட்டுட்டு அவன் என்கூட சுத்தினது தப்புதான்... இருங்க.. மைக்கேல் வந்தாச்சு" என்றபடி செல்லைக் குறும்புடன் அவன் கையில் கொடுத்தாள்.

பிறகு பேசிவிட்டு வைத்தவன், தர்ம சங்கடத்துடன் அவளிடம் திரும்பினான்!

"ரோஸ்... அவ என்.."

அவன் இழுக்கும்போதே கையமர்த்தியவள், "ம்... தெரியும்! உன் லவர் கேர்ள்தானே... அவ கோபமாப் பேசும்போதே புரிஞ்சிக்கிட்டேன்."

"என்னவோ கல்யாணம் அது இதுங்கிறாங்க என்ன?" ஆவலுடன் விசாரித்தாள்.

"அவ பேரு வாசுகி! நானும் அவளும் மூணு வருஷமா லவ் பண்றோம். அவ என்னோட ஜுனியர்... திடீர்னு முறை மாப்பிள்ளை வரவு.

"அவங்க அம்மாவோட கசின் பிரதராம். ரொம்ப நாளா தொடர்பு விட்டுப் போயிருந்ததாம்... அவர் இறந்தப்ப தன் மகனுக்கு இவளைத்தான் கல்யாணம் செய்யணும்னு கடைசி விருப்பத்தோட இறந்தாராம்!"

"இப்போ வாசுகியோட அம்மா அப்பா வேற ஊரில இல்லை. அவ ஹாஸ்டல்லே தான் இருக்கா! அவங்க ரெண்டு பேரும் அவளோட அக்கா டெலிவரிக்காக மலேஷியா போயிருக்காங்க!"



"இப்போ வாசுகியோட மாமா ஒய்ஃப் சீரியஸா இருக்கிறதால தன் கணவர் கேட்டுக்கிட்ட மாதிரி, மகனுக்கும் இவளுக்கும் கல்யாணம் செஞ்சு வைக்கணும்னு விரும்பறாங்களாம்!"

"அதான் அந்த மாமா பையன் வரப் போறதா சொன்னா! நாளைக்கே வரானாம்... அவளை அழைச்சிட்டுப் போயி அவங்கம்மாவுக்கு காண்பிக்கப் போறானாம்... அதான் இப்ப என்ன பண்றதுன்னு புரியலை!" பரிதவிப்புடன் முடித்தான்.

"அதுக்கேன் இவ்வளவு வருத்தம் மைக்? அந்த மாமா பையனோடப் பேசி உண்மையச் சொல்லிப் பாக்கலாமே? நானும் உங்களோட வரேன்... இன்னொருத்தர் விரும்பற பொண்ணை எப்படி வற்புறுத்த முடியும்...?"

அவனுக்கு தைரியம் கூறினாள் அவள்.

ஆனால் அன்று முழுவதும் கலக்கத்துடன் உடைந்து போயிருந்த மைக்கை சமாதானப் படுத்துவதிலேயே பொழுது சென்றது.

* * *

மறுநாள் காலையில் அவள் எழுந்த போது மைக்கேல் தீவிர யோசனையிலிருந்தான்!

இரவு முழுவதும் அவன் உறங்கவில்லை என்பதை கண்களைச் சுற்றியிருந்த கருவளையங்கள் அறிவித்தன.

ஜானும், மேரியும் பதறிப் போய் என்னவென்று விசாரிக்க, "ஒண்ணுமில்லைம்மா... லேசா கோல்ட்" என்று மறுத்தவன் மேல் பரிதாபமாய்!

அன்று இருவருமாகச் சென்று வாசுகியைப் பார்த்துப் பேசியபோது, அவளுக்கோ ரோஸலினைப் பார்த்தால் சிறு பொறாமையாய்!

JUN 13 2010

அதை வெளிப்படையாகவே கூறியவள், "ரோஸலின்! நீங்க ரொம்ப அழகு... மைக் சொன்ன மாதிரியே! எனக்கே கொஞ்சம் பொறாமையா இருக்கு... இந்தக் கடவுள் எவ்வளவு மோசம் தெரியுமா?" சிறு சலிப்புடன் கூறினாள்.

"ஓ.. தேங்க்யூ! ஆனா, மைக்கோட கண்ணுக்கு நீங்கதான் பேரழகியாம்... தேவதையாம். அது தெரியுமா? அது மாதிரி என்கிட்ட யாரும் புலம்பினதில்லை!

"பொய்! இவ்வளவு அழகா இருக்கீங்க. அதுவும் ஸ்டேட்ஸிலே... அங்கே டேட்டிங் எல்லாம் சகஜமாமே... உங்களை மட்டும் எப்படி?" கேள்வியாக நிறுத்தினாள்.

தன் கவலையை மறந்து அவள் பேசியது இவளுக்கும் இதமாய்!

"நிறைய பேர் ப்ரபோஸ் பண்ணியிருக்காங்க... கூப்பிட்டிருக்காங்க! எனக்கு டேட்டிங் இதிலெல்லாம் அவ்வளவு இன்ட்ரெஸ்ட் இல்லை... அப்பா ரொம்ப ஓபன் டைப்.. உன் துணையைத் தேர்ந்தெடுக்க உனக்குதான் முதல் உரிமை... ஆனா அது பெஸ்ட் சாய்ஸா இருக்கணும்னு சொல்லிட்டாங்க."

"அவங்க பர்மிஷன் குடுத்திட்டதாலேயோ என்னவோ, எனக்கு இந்த லவ், டேட்டிங் இதிலெல்லாம் பெரிசா ஆர்வமில்லை!"

"எனக்கு நிறைய படிக்கணும்... வாழ்க்கையில பெரிசா சாதிக்கணும். இது மாதிரி ஆம்பிஷன்ஸ் தான் அதிகம்!

"அதனாலே எப்பவுமே படிச்சிட்டே இருப்பேன்... எங்க யுனிவர்சிட்டியில ரேங்க் ஹோல்டர் நான்! இது வரைக்கும் உங்களை மைக் இம்ப்ரெஸ் பண்ணின மாதிரி



என்னை யாரும் ஈர்த்ததில்லை... சோ... நோ லவ்... நோ கமிட்மெண்ட்ஸ்!"

மென்குரலில் கூறிவிட்டு கன்னம் குழிய சிரித்தவளை வாஞ்சையுடன் ஆமோதித்தான் மைக்கேல்!

பிறகு அந்த மனிதனை சந்திக்கப் போகும்போது, அவன் தன்னை முதற் பார்வையிலேயே சரித்து வீழ்த்தப் போவதையும், அவனாலேயே தன் வாழ்க்கைப் பாதை தடம் புரளப் போவதையும் ரோஸ் அறியவில்லை!

# 7

அந்த ஹோட்டலில் அவனை சந்தித்த மறு நொடியே தனக்குள் பெரும் மாற்றம் வந்ததையும், இதயம் சிலிர்ப்புடன் படபடத்ததையும் ஒரு விதப் புது அவஸ்தையுடன் உணர்ந்தாள் அவள்.

அன்று அவர்கள் மூவரும் முன்பே பதிவு செய்யப்பட்ட மேசையில் அமர்ந்து அவனுக்காகக் காத்திருந்தனர்.

வாசுகியின் மாமா மகனை எதிர்பார்த்து காத்திருந்த நேரத்தில் பொழுது போவதற்காக பழச்சாறு அருந்தியபடி அமர்ந்திருந்தனர்.

மெதுவாக அந்த மாதுளம் சாறை ரசித்துப் பருகியபடி நிமிர்ந்தவளை அந்த ஹோட்டலுக்குள் கம்பீர நடையுடன் உயரமாய் வந்து கொண்டிருந்த அந்த இளைஞன் வெகுவாய் ஈர்த்தான்.

அவனுடைய அசாத்திய உயரமும், கர்வம் சுமந்த கம்பீர முகமும், தூரத்திலிருந்தே அதில் தெரிந்த ஒருவித

ஆளுமைத்தனமும், அனாவசிய அலட்டலின்றித் தெரிந்த அந்த நடையும் அவளுள் முதல் சலனத்தை ஏற்படுத்தியதுதான் உண்மையாய்!

''எத்தனையோ ஆண்கள் என்னிடம் பழக முயன்றபோதெல்லாம் மறுத்தவள்... எத்தனையோ காதல் தூதுகளை அலட்சியம் செய்தவள்... இன்று அவன் யாரென்றே தெரியாமல் ஈர்க்கப்படுவது ஏன்?''

அவள் யோசிக்கும்போதே, அந்த டேபிளை நோக்கியே அவன் வருவது தெரிய, ஒரு விதிர்ப்புடன் அமர்ந்திருந்தாள் அவள்.

நேரே அவர்களருகில் வந்தவன், தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அமர்ந்தபோது, தவித்துத் தான் போனாள் ரோஸ்!

வாசுகி அறிமுகம் செய்தும், அவள் எதிரிலிருப்பதையே உணராதவன் போல அந்தப் பக்கம் திரும்பாமல் அவன் பேச ஆரம்பித்தது வேறு, அவன் மீது பெரும் ஆர்வத்தையும் மரியாதையையும் தூண்டின!

தாங்கள் விரும்புவதையும் கோவிலில் மாலை மாற்றி மோதிரம் போட்டு, தம்பதிகளானதையும் இருவரும் கூறியதும், சட்டென்று சிரித்து ''தேங்க் காட்'' என்று அவன் கூற அவளுக்கோ சிலிர்ப்பாய்!

அவனுக்கும் இந்தத் திருமணத்தில் விருப்பமில்லை என்று கூறியதும் மன உணர்வுகள் வீணைத் தந்திகளாய் அதிர்ந்தன.

ஆனால், காதல், திருமணம் இதிலெல்லாம் தனக்கு ஆர்வமில்லை என்று அவன் பகர்ந்ததும் உடனே தொய்ந்து போனாள் அவள்.



பிறகு தன் அம்மாவை எப்படிச் சமாதானப்படுத்துவது... அவருடைய கடைசி விருப்பமாயிற்றே என்று அவன் தவித்தபோது, ''நான் உங்களுக்கு உதவத் தயார்,'' இதழ்கள் அவள் அனுமதியின்றியே ஒப்புதல் தந்தன!

உடனே அவள் புறம் திரும்பியவன், ஒரு கணம் யோசனையும் ரசனையுமாகவே அளவிட்டாலும், மறு கணமே இறுகிப் போக, தன்னையே தொலைத்துத் தவித்தாள் ரோஸ்.

பிறகு, தான் எப்படி உதவப் போகிறேன் என்பதை அவள் கூற, மெதுவாக யோசித்தபடி கேட்டவன் அவளுக்கும் திருமணத்தில் ஆர்வமில்லை என்றதும், சரியென்று ஒத்துக் கொண்டான்.

இருவரும் அவளுக்கு நன்றி கூற, அந்த நிமிடம் அவன் விழிகள் ஒளிர, அவளுக்குள் அது மத்தாப்பாய் வெடித்துச் சிதறி காதல் தீபம் ஏற்றியதை அவள் மட்டுமே அறிவாள்.

* * *

மறுநாளே இருவரும் கோயம்புத்தூரை சுற்றிப் பார்க்கப் போவதாகக் கூறிக் கிளம்பிய போது, ஜான் தடுக்கவில்லை!

அவருக்குள் வேறு ஒரு விருப்பம் மொட்டு விட்டிருந்ததையும் ரோஸை தன் வீட்டுக்கு ஒரு மருமகளாக ஏற்றுக் கொள்ள அவர் தீர்மானித்திருந்ததையும் அப்போது அவர்களும் அறியவில்லை!

விமானத்தில் சென்று இறங்கியதும், நேரே தன் வீட்டிற்கு அவர்களை அழைத்துச் சென்றான் தீரேந்தர்.

JUN 13 2010

கோயம்புத்தூரைத் தாண்டி உள்ளே ஒரு கிராமத்தில் சுற்றிலும் வயல் வெளியும் தூரத்து மலைத் தொடர்களுமாய். ஒரு குட்டி இளவரசியைப் போல் புதிதாய் கம்பீரமாய் இருந்தது அவனுடைய வீடு!

இவன் இவ்வளவு பணக்காரனாவென்று நினைக்கும் போதே அமெரிக்காவில் பரந்து விரிந்த ஒரு ஏக்கரின் நடுவே இருக்கும் தன் வீடும் ஞாபகம் வருவதாய்!

பிறகு, உள்ளே சென்று அவர்கள் தங்க வேண்டிய அறைகளை அவன் காட்டியவுடன், இருவரும் முகம் கழுவித் தயாராகினர்.

சிறிது நேரத்தில் அந்த வீட்டின் மேனேஜர் என்று ஒருவர் வந்து அழைக்க இருவரும் கீழே வந்தனர்.

அங்கு ஹாலில் அவர்களுக்காகத் தயாராகக் காத்திருந்தான் அவன்!

அவனுடைய தாயின் அறைக்குள் செல்லும்போதே, அவனுக்குள் சிறு பயமும் குற்றக் குறுகுறுப்புமாய்!

"மிஸ். ரோஸ்... எங்கம்மா ரொம்ப புத்திசாலி! அதனால ஜாக்கிரதையாப் பேசணும்! உள்ளே போறதுக்கு முன்னாடி நல்லா ஒத்திகை பாத்துக்கங்க. இப்ப நீங்க ரோஸ் இல்லை, வாசுகி!" அடிக் குரலில் அறிவுறுத்தினான் தீரேன்!

ஏனோ சுள்ளென்று பொங்கிய கோபத்துடன்,

"நானும் புத்திசாலிதான்! எனக்குக் குடுக்கப்பட்டிருக்க கேரக்டரை நான் சரியா செய்வேன்..." அவளும் பிடிவாதக் குரலில் பதில் கொடுத்தாள்.

"கடவுளே... இது என்ன சீரியலா... கேரக்டர் அது இதுன்னுட்டு... ம்... காப்பாத்துப்பா! எனக்கென்னமோ



பயமாருக்கு" என்றபடி அவன் உள்ளே செல்ல தோளைக் குலுக்கியபடி தொடர்ந்தாள் அவள்.

அந்தப் பெரிய அறையில் இரட்டைக் கட்டிலில் ஒரு உயர்ந்த பாரம்பரியம் மிக்க குடும்பத்துப் பெண்மணியின் உருவாய் சாய்ந்திருந்தார் சிவபார்வதி.

அவரருகே சென்று அமர்ந்த தீரேன், "அம்மா! இவதான் வாசுகி... அப்பா... சொன்ன அவரோட தங்கை பொண்ணு! அவர் என் ஃப்ரெண்ட் மைக்கேல்!" என அறிமுகப்படுத்தினான்.

அவருடைய முகத்தில் அவளைக் கண்டதும் பெரும் வாஞ்சையும் பிரகாசமும் தெரிந்தன.

"வாம்மா..." அந்த ஒற்றை வார்த்தைக்கே மூச்சு வாங்க, இரு கரம் நீட்டி அவளை அழைத்தார் அவர்.

உடனே சென்று அவரருகில் நின்றவளுக்கு, ஏனோ தன் தாய் ஜெசிந்தாவின் அன்பும், அரவணைப்புமே ஞாபகம் வந்தன.

மெல்ல அவருடைய கையைப் பற்றியபோது அவளுடைய கண்களிலிருந்து அருவியாய் கண்ணீர் சொரியத் துவங்கியது.

"அம்மா! ப்ளீஸ் அழாதீங்க... உணர்ச்சி வசப்படக் கூடாது. ரெஸ்ட் எடுங்க" பதறிப் போனான் தீரேன்.

"இது... ஆனந்தம் தீரேன்!" மூச்சு வாங்கக் கூறியவரின் விரல்கள், ரோஸின் முகத்தைப் பிரியத்துடன் வருடின.

இருவரையும் அருகில் சேர்ந்து நிற்கும்படிக் கூறிப் பார்த்து ரசித்தவர், மறுகணமே ஓய்ச்சலுடன் கண் மூடிக் கொண்டார்.

JUN 13 2010

பிறகு, மூவரும் வெளியே வந்தபோது, "சாரி... அம்மா என் பக்கத்துல நிக்க சொன்னவுடனே நீ எப்படி ரியாக்ட் பண்ணுவியோன்னு பயந்துட்டேன்! நல்லவேளை நீ சரியாவே நடிச்சிட்டே! தேங்க்ஸ்!"

ஆழ்ந்த குரலில் அவளைப் பாராட்டினான் தீரேன்.

அவளுக்கோ என்ன சொல்வதென்றே புரியவில்லை.

அவனைப் பார்த்ததிலிருந்து அவன் வசம் தன்னை இழக்கத் தொடங்கியிருந்த அந்தப் பெண்மை, இயல்பாகவே அவனருகில் சென்று நின்றதை மற்றவர்கள் அறியவில்லை!

ஆனால், அவன் அதற்கு நன்றி கூறியபோது தான் சிறு தவிப்பாய்!

மறுநாள் காலையிலும் மாலையிலும் சிவபார்வதியின் அறையிலேயே சிறிது நேரம் பொழுதைக் கழித்தாள் அவள்.

* * *

அன்றிரவு, மைக்கேலும், அவளும் தீரேனைத் தேடி அவனுடைய அறைக்குச் சென்றனர்.

கதவைத் தட்டியதும் சிறிது நேரம் கழித்துத் திறந்தவன், அவர்களை அங்கு எதிர்பார்க்கவில்லை என்பதை, அவனது புருவச் சுளிப்பும் இடுங்கிய கண்களுமே கூறின.

"உள்ளே வாங்க! என்ன... இந்த நேரத்துல?" யோசனையுடன் கேட்டான் அவன்.

"இல்லை! நாளைக்கு ராத்திரி நாங்க கிளம்பலாமா?" மெதுவாகக் கேட்டான் மைக்கேல்!

"ஓ! சாரி... நான் மறந்திட்டேன்... அம்மா வாசுகியை... ப்ச்... ரோஸை இங்கே ஒரு வாரம் தங்கியிருக்க சொல்லி



அவங்கப்பா அம்மாகிட்ட பர்மிஷன் கேட்டிருக்காங்களாம்.

"இப்பதான் படுக்கறதுக்கு முன்னாடி சொன்னாங்க... நானும் அதே யோசனையில் தான் இருந்தேன்."

"உங்ககிட்டே இதை எப்படிச் சொல்றதுன்னு!"

முகம் சுருங்கியிருக்க இருவரையும் ஒருவித எதிர்பார்ப்புடன் நோக்கினான் அவன்!

"ஓ! வாசுகி காலையில போன் செஞ்சிருந்தா.. ஆனா அவளுக்குத் தெரியாது போலருக்கு! பரவாயில்லை எங்கப்பா அம்மாவுக்கு சொல்லிடறேன்... இந்த வாரக் கடைசியில் நாங்க கிளம்பலாமா?" மைக்கேல் தான் கேட்டான்.

"சரி... நான் டிக்கெட்டுக்கு ஏற்பாடு பண்றேன்... குட் நைட்!" என்றபடி அவன் விடை தர, இருவரும் வெளியே வந்தனர்.

"மைக்! எனக்குத் தூக்கம் வரலை! நீங்க போய் படுங்க. நான் கொஞ்ச நேரம் தோட்டத்துல ரிலாக்ஸ்டா இருந்துட்டு வரேன்." என்றபடி கதவைத் திறந்து வெளியே சென்றாள் ரோஸ்!

* * *

இரவு நேர வானில் நட்சத்திரங்கள், உதிர்ந்த வெள்ளி மலர்களாய் கண் சிமிட்ட நிலவு மஞ்சள் மலராய் பவனி வந்து கொண்டிருந்தது.

தூரத்தில் தெரிந்த ஏரியிலிருந்து நீரின் செல்லச் சலசலப்பு சலங்கையாய்!

குளிர்ந்த காற்று சரசமாய் முகம் தீண்ட, மெல்லிய சிலிர்ப்போடு உள்ளே நுழைந்தன தீரேனுடைய ஞாபகங்கள்!

JUN 13 2010

மனம் முழுவதும் அவனே நீக்கமற நிறைந்திருக்க, இதயம் இன்பச் சுமையாய்!

அவளுக்கோ, மாயப் பரவசமாய்... எப்படி இந்தக் குறுகிய காலத்தில் அவன் தனக்குள் புகுந்து இவ்வளவு நேச இம்சைகள் செய்கிறானென்ற இனிய தவிப்பு!

எப்போது நிலத்தில் வீழ்ந்து, என்று துளிர்விட்ட தென்பதையே அறிய முடியாமல் துளிர்க்கும் சிறு துளிராய் ஆழ் மனதில் வேர்ப்பிடிக்க ஆரம்பித்திருந்தது காதல்!

இதை எப்படி தன் தாய் தந்தையிடம் கூறுவது... தன் மேல் படிப்பு என்னாவது... முதலில் இதற்கு தீரேந்தர் ஒப்புக்கொள்ள வேண்டுமே... பல குழப்பங்கள் உள்ளே ஊற்றாய்ப் பெருகின.

திடீரென்று யாரோ வருவதுபோல் பூமி அதிரத் திரும்பினால் அவள் கனவுகளின் நாயகனே வந்து கொண்டிருந்தான்.

வண்ணத்துப் பூச்சியாய் இமைகள் படபடக்க ஸ்தம்பித்து நின்று விட்டவளை அவன் குரல் உசுப்பியது!

"என்ன... இங்கே நின்னுட்டிருக்கீங்க... அதுவும் தனியா?" அந்த இரவில் அவன் குரல் சீறலாய்!

"இல்லை... தூக்கம் வரலை... அதான்!" தவிப்பும் காதலுமாய் மொழிந்தாள்.

"எனக்கும்தான்! அதான் கொஞ்ச நேரம் உலாவிட்டிருக்கலாமின்னு வந்தேன்..."

"அம்மாவுக்கு எப்படி திடீர்னு இந்த மாதிரி?" வருத்தத்துடன் வந்தது அவள் குரல்!



ஒரு பெருமூச்சுடன் நின்று விட்டவன், மெதுவாகத் தன் மன உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தான்.

"அம்மா நல்லாத்தான் இருந்தாங்க. கொஞ்ச நாளா அவங்களுக்கு மூச்சு வாங்க ஆரம்பிச்சது... வீசிங்குன்னு நினைச்சி டாக்டர்ஸ் மருந்து குடுத்தாங்க!"

"அப்புறம் ரொம்ப அதிகமானவுடனே எல்லா டெஸ்டும் செஞ்சா, அவங்க நுரையீரல் முழுக்க கேன்சரால பாதிக்கப்பட்டிருக்கறது தெரிஞ்சுது!

"அட்வான்ஸ் ஸ்டேஜுன்னுட்டாரு டாக்டர்... ட்ரீட்மெண்ட் பண்றப்பதான் அவங்களுக்கும் உண்மை தெரிய வந்தது!"

"ஆனா, சிகிச்சையில் எந்தப் பலனும் இல்லை... அவங்க உயிர் வாழப் போற கடைசி நாட்கள் இதுன்னு டாக்டர்ஸ் கைவிரிச்சிட்டாங்க.

"அப்பதான் அம்மா இந்தக் கோரிக்கையை என்கிட்ட சொன்னாங்க... அப்பா அம்மாவோட கடைசி ஆசையை ஒரு மகனா நிறைவேத்தறதுதான் முக்கியம்னு தான் மறுக்க முடியாம அரை மனசாக் கிளம்பி வந்தேன். அங்கே வந்தப்புறம்தான் தெரிஞ்சுது... வாசுகியும் மைக்கேலும் லவ் பண்றது!

"நல்லவேளை நீங்க எனக்கு ஹெல்ப் பண்ண வரேன்னீங்க! அம்மாவுக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்காம்... அதான் தங்க சொல்லிட்டாங்க! சாரி ஃபார் தி இன்கன்வீனியன்ஸ்!" கம்மிய குரலில் முடித்தான்.

உடனே அவனை அணைத்து ஒரு குழந்தை போல் சமாதானப்படுத்த வேண்டுமென்ற ஏக்க உணர்வு!

அதை மெதுவாக அடக்கியபடி நிமிர்ந்தவள், ஆறுதலாய்ப் புன்னகைத்தாள்.

''பரவாயில்லை... அம்மாவுக்காகத்தானே! நான் இருக்கேன்... சாகப் போற ஒருத்தருக்கு சந்தோஷத்தைத் தர்றதைவிட, இந்த உலகத்துல பெரிய விஷயம் வேறென்ன இருக்க முடியும்?''

இலகுவாகக் கேட்டவளையே ஒரு கனம் இமைக்காமல் ஊடுருவியவனின் விழிகள் பளபளத்துவிட சட்டென்று பார்வையை தழைத்துத் திரும்பி ''தேங்க்யூ'' முணுமுணுப்பாய் மொழிந்துவிட்டு நடக்க ஆரம்பித்தான்.

அவன் உள்ளே சென்று மறையும் வரை பார்த்திருந்தவளுக்கு, ஏனோ தன்னில் பாதியே தனைவிட்டு நீங்கிச் சென்ற உணர்வு!

''நீ இங்கு வாசுகிக்குப் பதிலாக நடிக்க வந்திருக்கிறாய்!'' புலன்கள் அறிவுறுத்தின.

ஆனால், அதை அடக்கி விருட்சமாய் உயர்ந்து நெஞ்சமெங்கும் பரவி நின்றது காதல்!

## 8

மறு நாளிலிருந்து, சிவபார்வதிக்குப் பிடித்தமான ஆன்மீகப் பாடல்களை சி.டி.யில் போட்டுவிட்டு அவர் கேட்கும்படிச் செய்தாள் அவள்.

அன்று மாலையில் அவருடைய கையைப் பிடித்தபடி அமர்ந்திருந்தபோது, ''வாசுகி! எனக்கு தேவாரம் படிச்சிக் காட்ட முடியுமாம்மா?'' வென்று சிவ பார்வதி கேட்க தூக்கி வாரிப் போட்டது அவளுக்கு!



''ம்... எனக்கு... தமிழ் படிக்கத் தெரியாதும்மா.''

அவள் கூறும்போதே உள்ளே வந்த தீரேனின் விழிகள் சட்டென இடுங்கிப் பளபளப்புடன் அவளையே ஊடுருவின.

உடனே தன் தாயிடம் திரும்பியவன், ''அவ செகண்ட் லேங்வேஜ் ஹிந்தி படிச்சிருக்காம்மா! தமிழ் பேச மட்டும்தான் தெரியுமாம்... இல்லை?''

அவளை நோக்கி அவன் உணர்ச்சிகளைக் களைந்த முகத்துடன் வினவ, ''ம்... ஆமாம்...மா! சாரி'' என்றாள் குற்றவுணர்வுடன்!

''பரவாயில்லைம்மா! இதுக்கு எதுக்கு சாரி எல்லாம்! அப்புறம் இன்னொரு கோரிக்கை...''

அதற்குள் அவருக்கு மூச்சு வாங்க, வேகமாக வந்து அருகில் அமர்ந்தவன், ''அதெல்லாம் அப்புறம் பேசலாம்மா! ரெஸ்ட் எடுங்க'' உரிமையுடன் செல்ல அதட்டல் போட்டான்.

பிறகு அவருடைய விரல்களை மென்மையாக வருடியவனை ஏறிட்டவர், ''அத்தைன்னு கூப்பிடச் சொல்லு!'' சன்னமாக முனகினார்.

''சரி... ரோ... ம்... வாசுகி... அம்மாவை இனிமே அத்தைன்னுதான் கூப்பிடணுமாம்... இது அவங்க ஆர்டர்... சரியா?'' சிறு முறுவலுடன் கேட்டான்.

அவள் மெல்லத் தலையசைக்க, சோர்ந்து உறங்க ஆரம்பித்தார் சிவபார்வதி.

பிறகு இருவருமாக வெளியே வந்ததும் நர்ஸும் பணிப்பெண்ணும் உள்ளே செல்ல, சிறு கோபத்துடன் அவளிடம் திரும்பினான் தீரேன்.

"ஒரு நிமிஷம் உளரப் பாத்தே... நான் வரலைன்னா, அமெரிக்காவிலப் படிச்சதாலதான் தமிழ் எழுத வராதுன்னு குட்டைப் போட்டு உடைச்சிருப்பே..." அடிக் குரலில் குற்றம் சாட்டினான்.

உடனே தன் தவறை உணர்ந்தாலும், "ம்... நீங்க கூடத்தான் அதே தப்பை செய்யப் பாத்தீங்க... ரோஸின்னு கூப்பிட வந்து, அப்புறம் திருத்தி வாசுகின்னீங்க!" அவளும் அதே குரலில் முடித்தாள்.

"ம்... எனக்கு நடிக்க வராது... அதான்!"

"ஆமாம்... நான் ஆஸ்கார் அவார்டு வாங்கின நடிகை... எனக்கு மட்டும் எல்லாம் வருமாக்கும்!"

அவள் கிண்டலாகக் கூறியதும், சட்டென்று சிரித்து விட்டான் அவன்.

இரு கைகளையும் விரித்து "ஒகே... ஒகே! ரெண்டு பேரும் அமெச்சூர் நடிகர்கள். அப்படிங்கிறதால இந்தச் சின்னத் தவறை மறப்போம்... மன்னிப்போம்!"

சீண்டலாக அவன் முடிக்க, விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள் அவள்.

"ரோஸ்... என்னாச்சு. ரெண்டு பேரும் காதல்னாலே முகம் திருப்பிக்கிட்டு பாம்பும் கீரியுமா நின்னீங்க... இன்னிக்கு இப்படி... பாத்து தீரேன் சார்... எங்க ரோஸோட அழகில மயங்கி தலை குப்புற விழுந்திடப் போறீங்க" கிண்டலடித்தான் மைக்கேல்!

"நெவர்!" என்ற ஒற்றைச் சொல்லுடன் வேகமாகத் திரும்பிச் சென்ற தீரேனுடைய இறுக்கமும், தீவிரமும் அவளைக் கொல்வதாய்!

* * *



அன்றிரவும் உறக்கமே வராமல் புரண்டிருந்தபோது, மெல்லிய உணர்வுகள் அவனைப் பற்றிய கவிதையைப் பிரசவித்தன!

இப்போதெல்லாம்...

என்

ஆழ்மனதில்...

உணர்வுகளின்

மௌன மறுகல்...

உள்ளே...

என் காதல்

உன் முகம் நோக்கித்

தவம் செய்கிறது!

நான்...

எத்தனை முறை

விழி நீராணேற்றினாலும்

முறிவதே இல்லை.

உன்

திமிரும், காதலும்!

சிறு வெட்கப் புன்னகையொன்று இதழ்களில் தோன்றி தேகம் முழுவதும் பரவி விகசிக்க வைத்தது!

அவன் நினைவுகளுக்கே இவ்வளவு சக்தியா?"

வியந்து சலித்தது இதயம்!

"ஏ... பெண்ணே எது உன்னை இப்படி ஒரு காதல் வலையில் சிக்க வைத்தது... ஆண்களையே கண்டதில்லையா என்ன...? எப்படி இது போல் தப்பிக்க முடியாமல் மாட்டிக் கொண்டாய்..."



JUN 13 2010

அவளுடைய மனசாட்சியே கேள்வி கேட்பது போல்!
காலையில் விழிக்கும் போதே, சிவ பார்வதியின்
நோயும், அதனால் அவர் படும் கஷ்டங்களும் பெரும்
பரிதாபத்தையும் சோகத்தையும் அவளுள் ஜனிக்கச்
செய்தன!

உடனே குளித்து விட்டு அவரிடம் சென்றபோது, ஒரு
சிறு கோரிக்கை விடுத்தார் அவர்!

"வாசுகி... உனக்கு சுடிதார் ரொம்ப நல்லாருக்கு...
ஆனா புடவை கட்டிப் பாக்கணும் போலருக்கு."

சிறு முணங்கலாய் கூறிவிட்டு மேலே பேச முடி
யாமல் அவர் தவிக்க, உடனே சரியென்றாள் அவள்.

பிறகுதான் ஞாபகம் வந்தது... சுடிதார்களே அவள்
இந்தியா வந்து தைத்ததுதான்.. லாங் ஸ்கர்ட்டும், ஜீன்ஸ்
டாப்புமே அவளுடைய உடைகள்!

புடவை என்று ஒன்று கூட அவளிடம் இப்போது
இல்லை... எடுத்து வந்திருந்த இரு டிசைனர் புடவை
களுமே, இப்போது சென்னையில்!

என்ன செய்வதென்று புரியாமல், அவள் விழிக்க,
அதே நேரம் தாயைப் பார்க்க வந்தான் தீரேன்.

"என்னம்மா... எப்படி இருக்கீங்க?" என்றபடி வாஞ்சை
யுடன் அவரருகில் அமர்ந்தவனைப் பார்த்தால் சங்கட
மாய்!

இந்தத் தாயின் இழப்பு இவனை எப்படி ஒடித்துப்
போடக் கூடும்... நினைத்தாலே மனதிற்குள் வேதனைக்
குமிழ்கள் உற்பத்தியாயின!

அவர் அவளுடைய புடவை விஷயத்தைப் பற்றி
மெதுவாக உரைக்க, அவளிடம் திரும்பினான் அவன்.



"அம்மாவுக்கு உன்னைப் புடவையிலப் பாக்கணும்னு
விருப்பம் போலருக்கு! புடவை... இருக்கா?"

அவள் பரிதாபமாக விழிப்பதைப் பார்த்தவுடனே
புரிந்து கொண்டு கேட்டான்.

"இல்லை..." அவள் தர்ம சங்கடமாகக் கூறும்போதே
தாயிடம் திரும்பினான்.

"அம்மா... அவ... ஹாஸ்டல்லே இருக்கறவ... சுரிதார்,
ஜீன்ஸ், இதெல்லாம் தான் இருக்கும். புடவைக்கு எங்கே
போறது?"

அவன் கேட்டதும் அவர் மெல்ல ஏதோ முனக, உடனே
யோசனையுடன் சரியென்றான் அவன்!

பிறகு ஒரு தலையசைப்பில் அவளை அழைத்து
விட்டு அவன் வெளியேற, ரோஸும் தொடர்ந்தாள்.

அங்கிருந்து வெளியே வந்ததும், "உனக்கு பட்டுப்
புடவை எடுக்கணும்... அம்மாவோட ஆர்டர்!" என்றான்
சுவாரசியமின்றி.

"வேண்டாம்... எனக்கு புடவை எல்லாம் கட்டத்
தெரியாது! ப்ளீஸ்... அதோட... புடவைன்னா, அது
எங்கப்பா எடுத்துத் தரலாம்... நீங்க எப்படி?"

அவள் மறுத்ததுமே, "ஒரு விஷயத்தை நீ மறந்திட்டே...
இப்ப நீ என்னோட ஃபியான்ஸி... நான் எடுத்துத் தராம
வேற யாரு எடுத்துத் தர முடியும்" சிறு குறும்புடன்
நக்கலும் இணைந்து தெரிந்தன அவன் குரலில்!

"அது... சும்மா நடிப்புக்காக... உண்மையில்லையே?"

அவள் குரல் தன்னையறியாமலே உயர்ந்து விட
மறுகணமே இறுகிக் கடுத்தது அவன் முகம்!

JUN 13 2010

"ம்... இப்படியே ஒரு தண்டோரா எடுத்துட்டு போய் இந்த ஊர் முழுக்க சொல்லிட்டு வந்துடு..."

"ம்... தண்டோரான்னா?" அவள் புரியாமல் கேட்க, சட்டென்று சிரித்து விட்டான் அவன்.

"ஓ! உனக்கு சில தமிழ் வார்த்தைகள் புரியாது இல்லையா? சரி அதை விடு! இப்படி சத்தமாப் பேசினா ஊருக்கே தெரிஞ்சிடும்கிறதைத் தான் அப்படிச் சொன்னேன்!"

"ஓ... சரி! இப்ப என்ன செய்யறது?"

"ம்... நான் வாங்கித் தர்ற புடவையைச் சமத்தா கட்டிக்க வேண்டியதுதான்!"

சாதுவாக சிரிக்காமல் அவன் கூற, பொய்க் கோபத்துடன் அவனை செல்லமாக அடித்து விட்டாள் அவள்.

மறுகணம், அவன் ஒரு வித விலகல் தன்மையுடன் திரும்பி நடக்க, அவன் தவறாக எண்ணி விட்டானோவென்று கலங்கிப் போனது உள்ளம்!

* * *

அன்று மாலையே அவளிடம் ஒரு அட்டைப் பெட்டியை அவன் நீட்டிய போது, குழப்பத்துடன் வாங்கிப் பிரித்தாள் அவள்.

அதற்குள், இளம் பன்னீர் ரோஜா வண்ணத்தில் அழகிய பட்டுப் புடவை ஒன்று நேர்த்தியுடன் தெரிந்தது.

அப்போது அங்கு வந்த மைக்கேல், அதைப் பார்த்து விட்டு, "தீரேன் சார்... உங்க சாய்ஸ் ஏ ஒன்! ரோஸுக்கு ஏத்த கலர்... ரோஜாப்பூ கலரே பாத்து பெயருக்குப் பொருத்தமா, வாங்கியிருக்காரு பாரேன்!" சிலாகித்துப் பாராட்டினான்.



அதற்குள் தீரேனுடைய முகம் உணர்ச்சிகளைத் தொலைத்து இரும்பாய் மாறியது.

"ஓ! அது எனக்குத் தோணலை. ஏதாவது நல்ல கலராக் குடுங்கன்னு சொன்னேன்... அந்தக் கடைப் பெண்ணே செலக்ட் பண்ணினா!"

அலட்சியமாக மொழிந்து விட்டு நடந்தவன், உடனே திரும்பினான்.

"காலையில லேடீஸ் டெய்லர் ஒருத்தங்க வருவாங்க... ப்ளவுஸ் தைக்கக் குடுத்துடலாம்" என்றபடி விலகிச் சென்று விட்டான்.

இரவின் தனிமையில் அந்தப் புடவையை கையில் ஏந்தியபோது, ஏனோ அவனே உடனிருப்பது போல்!

இது என்னுயிர்க் காதலன் எனக்கு அளித்த முதல் பரிசு... இதயம் குதூகலித்தது ஆர்ப்பரித்தது.

மறுநாள், ரவிக்கையை தைக்க ஒரு பெண்ணே வந்து, உடலளவை எடுத்துச் செல்ல, அதற்கு பாவாடை என்ற ஒன்று வேண்டும் என்பதே மறந்து போயிற்று!

அன்று சிவபார்வதிக்கு உடல்நிலை சற்று மோசமாக, வீட்டிலேயே ஆக்சிஜன் வைக்க ஏற்பாடு செய்தனர்.

ஒரு மானிட்டரும் உடனே வைக்கப்பட்டு விட, அன்று முழுவதும் அவளைத் தன்னருகிலேயே வைத்துக் கொண்டார் சிவபார்வதி!

ரோஸுக்கும் அவர் நிலை பெரும் வேதனையாய் இருக்க சாப்பிடும் நேரம் போக பக்கத்திலேயே அமர்ந்திருந்தாள்.

அவள் அருகிலேயே இருக்க, தீரேனும் பெரும்பாலான நேரத்தை மௌனமாக தாயருகிலேயே கழித்தான்.

இரண்டு நாட்கள் இப்படியே கழிந்தன... நாளை மறுநாள் அவர்களிருவரும் ஊருக்குக் கிளம்ப வேண்டும்.

அவரை இப்படியே விட்டுச் செல்லவும் மனமின்றி, எத்தனை நாட்கள் இப்படி இருப்பதென்றும் புரியாமல் அவள் தவித்துப் போனாள்.

அன்று காலையில்தான் ரவிக்கை தைத்து வந்திருந்தது!

சிவபார்வதியைப் பார்க்க வந்த டாக்டரிடம் பேசியபடி வந்த தீரேனின் முகமோ இருண்டிருந்தது.

நேரே அவளிடம் வந்த டாக்டரோ, ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்...

"அம்மா... இன்னும் ரெண்டு மூணு நாள் தான் தாங்குவாங்க போலருக்கு... அவங்க கடைசி விருப்பம் ஏதாவது இருந்தா உடனே நிறைவேத்துங்க" என்றார்.

ஒன்றுமே புரியாமல் தலையசைத்தவளின் விழிகள், கண்ணீரை சுமந்திருந்தன.

அதனாலேயோ, இல்லை அவன் மேல் கொண்ட காதலினாலோ என்னவோ, அன்று மதியம் அவளைத் தேடி வந்து தீரேனும் மைக்கேலும் வைத்த கோரிக்கையை அவளால் மறுக்க இயலாது போயிற்று!

## 9

அன்று மாலை, அவர்களை மாலையும் கழுத்துமாக சிவ பார்வதி உடனே பார்க்க விரும்புவதாக இருவரும் கூறினர்.



சினிமாவில் மட்டுமே பார்த்திருந்த இந்துத் திருமண முறைகள் நினைவு வர, மாலையோடு அவர் முன்னால் நிற்பதொன்றும் கடினமில்லை என்றே தோன்றியது!

அன்று மாலையில், ரோஜா வண்ணப் பட்டு அணியும் போதே, பாவாடை இன்றி பைஜாமாவின் மேல் உடுத்திக் கொண்டாள்.

சமையல்காரம்மாவும் வேலைக்காரப் பெண்ணும் அவளுக்கு புடவை கட்ட உதவி, தோள் வரை விரிந்திருந்த கூந்தலை, க்ளிப் செய்து பூச்சரம் வைத்து விட்டனர்.

சிறு பொட்டும், முத்துச் சரமுமாய் வானுலகத்து தேவதையே பூமிக்கு வந்தாற் போலிருந்தாள் அவள்.

அவளை அழைக்க வந்த தீரேனின் முகத்தில் ஒரு கணமே தெரிந்த சிறு அதிர்வு உடனே மாற, அதிலிருந்து எதையும் ஊகிக்க முடியவில்லை!

அவனும் பட்டு வேட்டி சட்டை அணிந்து ஒரு மணமகனைப் போல் மாறி இருக்க, இருவருமாக சிவ பார்வதியின் அறைக்குள் சென்றனர்.

மைக்கேலும், மேனேஜர் சிகாமணியும் பின் தொடர, பார்வதி பரமேஸ்வரனைப் போல் நடந்து வந்த மகனையும் மருமகளையும் கண்டவரின் முகம் பிரகாசமானது.

முகம் நிறைந்த புன்னகையுடன் இரு கை நீட்டி அவர்களை அழைத்தவரின் விழிகளில், கண்ணீர் சிதறல்கள்!

இருவரும் அருகில் சென்று நிற்க, மேனேஜரிடம் அவர் ஏதோ சைகை செய்தார்.

உடனே மேசையிலிருந்த மாலையை எடுத்து இருவர் கையிலும் கொடுத்தார் அவர்.

இருவருமே தயக்கத்துடன் அதை வாங்க, ரோஸின் முகத்திலோ சிறுபயமும் மிரட்சியும்!

அதைக் கண்ட தீரேன், சிறு முறுவல் ஒன்றை சிதற விட்டு அவளைக் குளிர்விக்க, சட்டென்று தெளிந்தது அவன் முகம்!

மறுகணமே இருவரும் ஒருவர் கழுத்தில் மற்றவர் மாலையிட... தன் மகனை அருகே அழைத்தார் சிவபார்வதி.

தன் கையிலிருந்த ஏதோ ஒரு பொருளை அவர் கொடுக்க, அவன் விழிகள் தெறித்து விடும் போல் விரிந்தன.

அவன் கையில் இருந்தது... ஒரு திருமாங்கல்யம் கோர்த்த மெல்லிய தங்கச் சங்கிலி.

அதைக் கண்டதும் பதறி நிமிர்ந்து அவளையே அவன் நோக்க, அவனோ சிறு முறுவலுடன் நின்று கொண்டிருந்தான்.

அப்போதுதான் புரிந்தது... அவள் ஒரு கிறிஸ்தவப் பெண்... அதுவும் வெளிநாட்டிலேயே வளர்ந்தவளுக்கு, இதன் புனிதமும், முக்கியத்துவமும் தெரியாதே என்ற நிஜம்!

அந்த உண்மை முகத்திலறைய, "இப்ப... இது..... எதுக்கும்மா இதெல்லாம்?" தன் தவிப்பை மறைத்தபடிக் கேட்டான்.

உடனே, சைகை செய்து ரோஸலினை அழைத்தார் அவர்.

அவனுடைய பதட்டத்திலேயே அதன் மதிப்பை உணர்ந்தவள், சிறு சஞ்சலத்துடன் அவரருகில் சென்றாள்.



"எம்மா வாசுகி... இவன் இவ்வளவு தயங்கறான்? உங்கம்மா... அப்பா வர வரைக்கும் நான் உயிரோட இருப்பேனான்னு தெரியல..."

மூச்சு வாங்கப் பேசியவரை உடனே இடைமறித்தது தீரேனின் குரல்!

"அம்மா... ப்ளீஸ்... இப்படி எல்லாம் பேசாதீங்க!"

காயப்பட்ட வலியுடன் வந்த குரல், அவன் தவிப்பையும் வேதனையையும் உணர்த்த அமைதியாக நின்றாள் அவள்.

"ப்ளீஸ்ப்பா!"

தன் தாயின் கெஞ்சலை மறுக்க இயலாமல் அவளருகில் வந்தவன், மெல்லக் காதோரம் குனிந்தான்.

"ப்ளீஸ் ரோஸ்... இதையும் ஒரு நடிப்பாவே ஏத்துக்க முடியுமா? இப்ப உன் முடிவில தான் இருக்கு?"

உலர்ந்த குரலில் வினவியவனின் குரலில் தெரிந்த மௌன யாசிப்பு. அவளை ஒடித்துப் போடுவதாய்!

"இதைத் தானே நான் விரும்பினேன்... இப்போது இவர்கள் முன்னிலையில் இந்த சடங்கு நடக்கட்டும்! பிறகு தாய் தந்தை வந்தவுடன் சர்ச்சில் மீண்டும் மணந்து கொள்ளலாம்!"

மனம் அவசரமாக யோசித்து ஒரு முடிவெடுக்க, மைக்கேல் பரிதாபத்துடன் இறைஞ்சியபடி அவளையே பார்த்தபடி சிலையாய் உறைந்திருந்தான்.

மெல்ல நிமிர்ந்தவள், 'சரி'யெனத் தலையசைத்த போது, அனைவரின் முகமும் மலர, தீரேன் மட்டும் ஸ்தம்பித்த விழிகளால் அவளையே ஊடுருவியிருந்தான்.

JUN 13 2010

அந்த ஒப்புதலுக்காகவே காத்திருந்தாற் போல சிவபார்வதி தலையசைக்க, உறைந்த நிலையிலேயே அவள் கழுத்தில் அந்தத் திருமாங்கல்யத்தை அணிவித்தான் தீரேன்!

சிவபார்வதியும், மேனேஜரும், உதிரிப் பூக்களைத் தூவி இருவரையும் வாழ்த்த மைக்கேலின் முகமோ தவிப்புடனிருந்தது.

ஆனால், ரோஸின் மென்னகையும், அமைதியும் அவனுக்குள் யோசனையைத் தூண்டின!

பிறகு, அவன் தன் தாயின் பாதம் தொட்டு வணங்க, அவளும் அதையே பின்பற்றினாள்.

மனநிறைவும், கனிந்த விழிகளுமாய் இருவரையும் அவர் வாழ்த்த, அந்த சூழலே பெரும் நெகிழ்ச்சியும் இதமுமாய்!

பிறகு சிறிது நேரம் சிவபார்வதியுடன் பேசிவிட்டுத் தன் அறைக்குள் சென்றாள் ரோஸ்.

அந்த திடீர் வைபவம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்க, வெளியே சென்று வருவதாகக் கூறிச் சென்றிருந்தான் மைக்கேல்!

அவனுக்குள், ரோஸ் தன்னிடம் ஏதாவது கேட்டு விட்டால் என்ன செய்வதென்ற பூகம்பம் பெரும் அதிர்வாய்!

அவன் தனக்காகவே உதவி செய்ய வந்து இந்த இக்கட்டில் மாட்டிக் கொள்ள, பெரும் சஞ்சலத்துடன் அருகிலிருந்த பார்க்கிற்குச் சென்றான் அவன்.

* * *



மணக்கோலத்துடன் சிறிது நேரம் இருக்கும்படி சிவபார்வதி கேட்டுக் கொண்டதால், அப்படியே அமர்ந்து யோசித்தவளுக்குள் தீரேனுடைய உருவம்!

அவனை நினைவுபடுத்திய திருமாங்கல்யத்தைப் பார்த்தாலே சிலிர்ப்பாய்!

உயிர் உலர்ந்து தவிக்க மழை மேகமாய் அவனை நாடியது உள்ளம்!

வசந்த காலத்தை, மலர்கள் எப்படி மறக்க முடியாதோ இந்த நாளைத் தன்னால் உயிருள்ளவரை மறக்க முடியாதென்பது புரிவதாய்!

யாரோ அறைக்கதவை தட்ட, திறந்தால் மைக்கேல் தான் சாப்பிட அழைத்தான்.

பிறகு, சிவபார்வதியிடம் சென்று 'குட்நைட்' கூறி விட்டு மாடியில் தன் அறைக்குச் சென்று அமர்ந்தவளை யோசிக்க விடாமல் உசுப்பியது அறைக்கதவு!

மெதுவாகச் சென்று திறந்தபோது, அங்கு நின்றிருந்தான் தீரேன்!

முதன் முறையாக தன் அறைக்கு அவன் வந்திருப்பது வியப்பைத் தர, மௌனமாய் பின் வாங்கினாள் அவள்.

தர்ம சங்கடத்துடன் உள்ளே வந்து கதவை மூடியவன், மெல்லப் பேச ஆரம்பித்தான்.

"சாரி ரோஸ்! அம்மா திடீரென்று தாலியெல்லாம் கட்டச் சொல்லுவாங்கன்னு நான் சத்தியமா எதிர்பார்க்கலை!

"சும்மா மாலை மாத்திக்கறதுதானேன்னு நினைச்சேன்... இப்படியாகும்னு தெரியாது... ரொம்ப தேங்க்ஸ்! நீ என்ன சொல்லுவியோன்னு பயந்தேன்...

JUN 13 2010

“நீ கிறிஸ்டியன்னாலும் இதை எப்படி எடுத்துப்பேன்னு தெரியலை.. பட் நான் உங்களுக்கு ரொம்ப கடன் பட்டிருக்கேன்.

“எங்கம்மாவோட கடைசி ஆசைய நான் பூர்த்தி பண்ண உதவினதுக்கு ரொம்ப நன்றி!”

அவன் கையைப் பிடித்தபடி அவள் நன்றி கூறி முடிக்கும்போதே, அவன் விழிகளில் பெரும் காயம்பட்ட வலியும் வேதனையும் கசிந்தன.

அந்த ஒரு கணம்... அவள் தன்னை இழக்கப் போதுமானதாய்!

உடனே அவன் முகத்தை தன் கைகளில் ஏந்தியவள், “ப்ளீஸ்... கவலைப்படாதீங்க... அம்மா சரியாயிடுவாங்க... அவங்களுக்கு ஒண்ணும் ஆகாது தீரேன்!”

மென் குரலில் மயிற்பீலியாய் அவனை ஆறுதல் படுத்தி அவன் மார்பில் சாய்ந்தாள்.

என்ன நிகழ்ந்ததென்றே புரியாமல், அந்த ஆறுதலுக்கு ஆட்பட்டவன் மெல்ல அவளை ஏந்த, அந்த ஒற்றை நொடி, பல மணித் துளிகளுக்கு இனிய பாலமாய்!

தொடர்ந்த கணங்களில், இருவருமே தன்னிலை இழக்க... அவளுடைய காதலும், அவனுடைய அலைப்புறுதலும் பெரும் தூண்டுதலாய்!

அந்த இளவேனில் இரவில் யாருமே எதிர்பார்க்காத ஒரு நிகழ்வாய் அவர்களுடைய திருமணத்தின் ஒப்புதலாய் நடந்தேறியது. இனிய இல்லறம்!

அவள் அவனிடம் தேடிய நேசத்தருணமாய்... அவன் அவளிடம் சரண் புகுந்த ஆறுதல் நிமிடமாய் மாற... அந்தப் புதிய அனுபவத்திற்கு முகவுரை முடிவுரை தேவையில்லாத ஒன்றாய்!



## 10

ஆழ்ந்த உறக்கத்திலிருந்து திடீரென்று கண் விழித்த ரோஸ், புரியாத ஏதோ சப்தங்களில் வேகமாக எழுந்து அமர்ந்தாள்.

இனம் புரியாத சோர்வில் உடல் தத்தளிக்க, விழித்த பிறகே, தன் நிலை உணரத் துவங்கியது நெஞ்சம்!

அவனுடைய முதல் முத்தம்... இன்று உயிர் வரை இனித்தது.

நேற்றைய இரவு... சுனாமியாய் வந்து மோக அலைகளால் வீழ்த்திச் சென்ற தீரேனை அருகில் காணவில்லை!

எல்லாம் ஒரு மாயக்கனவாய்... கனவில் வரும் தேவகுமாரனாய்... அவள் உணர்வுகளை சுகித்தவனாய்!

அந்த அழகிய ரக் அவள் மீது எப்போது போர்த்தப்பட்டது... அவன் ஏன் விலகிச் சென்றான்.

மனதிற்குள் ஆயிரம் கேள்விகள் படையெடுக்கும் போதே, அவளுடைய அறைவாசல் கதவு மெலிதாகத் தட்டப்பட்டது.

தலை கலைந்து... உடை நலுங்கி, தான் இருக்கும் நிலை உணர்ந்து தவிப்புடன் எழுந்து போர்வையைச் சுற்றியபடி கதவருகே சென்றாள்.

“யாரு...?” அவளுடைய கம்மிய கேள்விக்கு பதிலாய் மைக்கேலின் அவசரக் குரல்!

“ரோஸ்... சிவபார்வதி அம்மா இறந்திட்டாங்க... கீழே ஒரே களேபரமா இருக்கு... ஏதேதோ சடங்குகள் செஞ்சிட்டிருக்காங்க... ஃப்ரீஸர் பாக்ஸ் கூட வந்திருக்கு! எழுந்து வரியா?”

JUN 13 2010

அவன் கேள்வியில் அடிவயிற்றிலிருந்து ஒரு கேவல் எழ, வேகமாக குளியலறைக்குச் சென்றவளுக்கு, சரம் சரமாய் கண்ணீர் பொங்கிற்று!

''என் இப்படி...? நேற்றிரவுதானே தங்களை ஆசிர்வதித்தார்... அதற்குள் என் இந்த அவசரம்? இதற்காகத்தான் ஒருவேளை தன் உயிரை இழுத்துப் பிடித்து வைத்திருந்தாரோ? ஓ... ஜீஸஸ்!''

மனம் சோகமாய் முனகி வேதனையுடன் மன்றாடியது.

மணியைப் பார்த்தால் விடிகாலை ஐந்து என்றது சுவர்க் கடிகாரம்!

பிறகு அவசரமாகக் குளித்து விட்டு வெளியே வந்தபோது வெராந்தாவில் அவளுக்காகக் காத்திருந்தான் மைக்கேல்!

சிவந்த விழிகளும் அழுத முகமுமாய் வந்தவளை தோளோடு அணைத்து ஆறுதல் படுத்தி நிமிர்ந்தால், எதிரே தீரேன் நின்றிருந்தான்.

அவர்களிருவரையும் கண்டதும் ஒரு கணம் உறைந்து நின்று விட்டவன், அவளுடைய அழுகையைக் கண்டதுமே விஷயம் தெரியுமென்று உணர்ந்து வேகமாகத் திரும்பி மாடிப் படிகளில் இறங்க ஆரம்பித்தான்!

''தீரேன்!'' அவளுடைய மெல்லிய அழைப்பு காற்றில் கலந்து காணாமல் போக, மெதுவாக அவனைப் பின் தொடர்ந்து இருவரும் சென்றனர்.

அதற்குப் பிறகு எதற்குமே நேரம் இருக்கவில்லை.

உற்றார், உறவினர், நட்பு வட்டம், ஊர்க்காரர்களின் வரவினால், அந்தப் பெரிய வீடே நிற்க இடமில்லாமல் நிறைந்து போயிற்று!



தீரேனும் முன்புறத்திலேயே இருக்க, வருபவர்களெல்லாம் அவனிடம் துக்கம் விசாரித்து சென்று கொண்டிருந்தனர்.

வெளியே ஆண்கள் கூட்டம் முழுமையாக இருந்ததால், அதை மீறி தீரேனுக்கு ஆறுதல் சொல்லவும் முடியவில்லை!

அவளும், மைக்கேலும் விருந்தினர் அறையில் அமர்ந்திருந்தனர்.

பின்புறம் சாப்பாடு போடப்பட சில உறவுகள் எழுந்து சாப்பிடச் சென்று கொண்டிருந்தனர்.

குளிர்ப் பேழையில் வைக்கப்பட்டிருந்த சிவ பார்வதியின் முகம் எப்போதும் போல் அமைதியாய்... கருணையாய்த் தெரிய, உடைந்து அழ ஆரம்பித்தாள் ரோஸ்!

ஏனோ, வெகு நாள் பழகிய ஒருவரை இழந்த ஒரு உணர்வு அவளை உலுக்க, தனக்கே இப்படியென்றால் தீரேனுக்கு எப்படி இருக்கும்... இதயம் பதறித் துடித்தது.

ஆனால், அவன் அருகில் கூட செல்ல முடியாத ஒரு நிலை!

அவர்களுடைய திருமணம் வெளிப்படையாக நடக்காவிட்டாலும், சிறு திருமாங்கல்யம் மட்டும் நெஞ்சிற்குள் உறுத்தியபடியே இருந்தது.

* * *

மதியம் செல் ஒலிக்க எடுத்துப் பேசிய மைக்கேல் அவளிடம் திரும்பினான்.

''வாசுகியும் அவங்கப்பா அம்மாவும் கிளம்பி வராங்களாம்!'' என்றான் சோர்வுட

JUN 13 2010

"எப்படி... அவங்க மலேஷியாவுல இருந்தாங்களே?"

"விபரம் கேள்விப்பட்ட உடனே கிளம்பி சென்னைக்கு வந்து இப்ப வாசுகியையும் அழைச்சிட்டு ஃப்ளைட்டில கோயம்புத்தூருக்கு வராங்களாம்."

"இங்கே ஃப்யூநெரல் எப்போ வைப்பாங்க மைக்கேல்?"

"தெரியலை... நாளைக்குக் காலையில இருக்கும்னு நினைக்கிறேன்... எல்லாரும் வரணுமே!"

"ஓ! வாசுகி சாயந்திரம் வந்திடுவாங்களா?"

"ம்... வந்திடுவா! வந்தப்புறம்தான் புதுசா வேற என்ன ப்ரச்னை காத்திட்டிருக்கோ தெரியலை!"

ஒரு பெருமூச்சுடன் கூறியவன், "ரோஸ்... நானாவது டிபன் சாப்பிட்டேன்... நீ எதுவுமே சாப்பிடலை... காலையில ஒரு கப் காபி குடிச்சது... லன்ச்சும் நடந்திட்டிருக்கு... போய் சாப்பிட்டு வா!" உரிமையுடன் வற்புறுத்தினான்.

"இல்லை... எனக்குப் பசிக்கலை... முடிஞ்சா, நீ தீரேனுக்கு ஏதாவது சாப்பிட குடிக்கக் குடு மைக்!" என்று அவனை அனுப்பி வைத்தாள் அவள்.

* * *

அன்று மாலையில் வந்திறங்கிய, வாசுகியும் அவள் தாய் தந்தையும் உறவினர்களால் அழுகையுடன் வரவேற்கப்பட்டனர்.

தாய் தந்தையுடனே நின்றிருந்த வாசுகி, இரவானதும் தான் அவர்களை மாடியில் தனியே வந்து சந்தித்தாள்.

கீழே உறவுக் கூட்டம் நிறைந்திருக்க, அவர்களின் நடுவே எதுவும் செய்ய முடியாமல் இரவு பதினொரு



மணிக்கு மேல் ரோஸும் மைக்கேலும் தங்கள் அறைக்கு வந்தனர்.

எப்போதும் போல் குளித்து விட்டு வந்து அவள் படுக்கச் செல்லும் போதுதான், நேற்றைய நினைவில் கண்கள் கரித்தன.

தீரேனின் மீது கொண்ட தீராக் காதலால் தன்னையே பரிசளித்திருந்தவளால், அவன் துக்கம் போக்க எதுவுமே செய்ய இயலவில்லையே என்ற குமுறல், மீண்டும் அழுகையாய் மாறியது.

அப்போது அறைக்கதவு தட்டப்பட, யாராக இருக்குமென்ற யோசனையுடன் கதவைத் திறந்தால், எதிரே நின்றிருந்தாள் வாசுகி!

* * *

"வாசுகி..." தவிப்புடன் ரோஸ் அழைக்கும்போதே உள்ளே நுழைந்து கதவை மூடிவிட்டு அவளிடம் திரும்பினாள்.

"சாரி ரோஸ்! கீழே அம்மா அப்பா எல்லாரும் இருந்ததாலே என்னாலே பேசமுடியலை! அதான் இப்ப வந்தேன்..."

"பாவம் சிவபார்வதி அம்மா... இப்படி இறந்து போவாங்கன்னு நான் நினைக்கவேயில்லை!"

குமுறலுடன் கூறியவளையே ஒரு விதக் கூர்மையுடன் ஏறிட்டவள், "அது சரி... மைக் எங்கே?" அவசரமாகக் கேட்டாள்.

"பக்கத்து ரூமிலதான் இருக்காரு!"

ரோஸ் கூறியதும், "சரி... நான் உன் கூடக் கொஞ்சம் பேசணும் ரோஸ்... எனக்காக நீ மைக் கிட்ட இதைப் பேசி



JUN 13 2010

புரிய வைக்கணும்'' என்றவள் மேலும் பேசியது அவள் தலையில் பேரிடியாய்!

''எங்கப்பா, அம்மாவை என்னால கன்வின்ஸ் பண்ண முடியலை... அதுவும் ஒரு கிறிஸ்டியன் கூட எனக்கு கல்யாணமான்னு வர வழி முழுக்க ஒரே டார்ச்சர்!''

''இப்பவும் நான் அவங்களோட முடிவைத்தானே ஏத்தாகணும்... என்னால அவங்களை மீறி எதுவும் செய்ய முடியாது!''

''இங்கே இருக்கற உறவுக்காரங்க.. இந்த வீடு இதெல்லாம் பாத்தே இல்லியா? விஷயம் தெரிஞ்சா கோபத்துல மைக்கை ஏதாவது செஞ்சாலும் செஞ்சுடு வாங்கன்னு அப்பா சொன்னாரு!''

உடனே, அதிர்ந்து போன ரோஸுக்கோ என்ன பேசுவதென்றே புரியாமல் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டி வார்த்தை வராத பரிதவிப்பு!

''ஊர்க்காரங்க ஒண்ணு சேர்ந்தா அவ்வளவுதானாம்... இந்த மாதிரி மதம் விட்டு மதம் கல்யாணம் செஞ்சா அவ்வளவுதான்... நீ கூட நம்ம தமிழ் சினிமாவுல பாத்திருப் பியே! நம்ம மூணு பேரோட கதியும் அதோகதிதான்!''

அவள் நிறுத்தியபோது உணர்வுகள் சடசடக்க ''இப்ப என்ன செய்யறது வாசுகி? மைக் பாவம்... அதோட!'' தர்மசங்கடத்துடன் ரோஸ் தன் நிலையையும் எண்ணி நிறுத்தினாள்.

''அதான் புரியலை! நாளைக்கு காலையில ரெண்டு பேரும் ஃப்யூநெரல் முடிஞ்சதுமே கிளம்பிடுங்க! இங்கே நான் பாத்துக்கறேன்.''

''அப்பா ரொம்பக் கோபமா இருக்காங்க... நம்ம திட்டம் தெரிஞ்சதாலே... தீரேன் கிட்டயும் பேசிட்டாங்க...



இதெல்லாம் சரி வராதுன்னு அவரும் இப்பப் புரிஞ்சிக் கிட்டாராம்... சொன்னாங்க!''

''என்னது... தீரேன் என்ன சொன்னாராம்?'' பரிதவிப் புடன் கேட்டாள் அவள்.

''எங்க குடும்பத்துக்குள்ளே இந்த மாதிரி வேற மதத்தில் இருக்கறவங்களைக் கல்யாணம் பண்ணிக் கிட்டா ஒதுக்கி வெச்சிடுவாங்களாம்... திரும்பி சேத்துக்க மாட்டாங்களாம்...''

''என்னால எப்படி எங்கம்மா அப்பாவை முழுசா விட்டுத் தர முடியும்... மைக் குடும்பம் என்னை ஏத்துக் கிட்டாலும் பிறந்த வீடே இல்லாம நான் வாழ முடியுமா? நிறைய யோசிச்சேன்!''

''தீரேனும் இது மாதிரிப் பண்ணினது தப்புன்னு புரிஞ்சிக்கிட்டதா அப்பாவோடப் பேசினாராம்! அவருக் கும் பாவம்... அம்மாவோட இந்த நிலைமையால இப்படி நாடகமாட வேண்டியதாப் போச்சு... என்ன செய்யற துன்னு புரியாத ஒரு நிலைமை!

''அதான்... குடும்பப் பழக்க வழக்கங்கள் பாரம்பரியம் எல்லாம் புரிஞ்சிக்காம இப்படி நடந்துக்கிட்டதா வருத்தப் பட்டாரு!

''இப்ப இது மைக்கேலுக்குத் தெரிய வேண்டாம்! நீங்க கிளம்புங்க... நான் மெதுவாப் பேசிக்கிறேன்... முடிஞ்சா எங்கப்பா அம்மாவை சரி பண்ணப் பாக்கறேன்...''

''இல்லேன்னா... என் தலையெழுத்து இதுதான்னு நினைச்சி அவங்க சொல்ற வாழ்க்கைய ஏத்துக்க வேண் டியதுதான்!'' சிறு விம்மலுடன் முடித்தாள்.

JUN 13 2010

"அப்ப... என் நிலைமை... மைக் பாவமில்லையா?" தவிப்புடன் வினவினாள் ரோஸ்.

"பாவம்தான்... அதான் நானும் இங்கே அத்தை காரியம் வரைக்கும் தங்கியிருந்து எப்படியாவது அப்பா அம்மாவை, தீரேனை சரிக்கட்ட பாக்கறேன்..." கண்ணீருடன் முடித்தாள்.

"ம்... ஆனா எனக்கும் தீரேனுக்கும் நேத்துதான் மாலை மாத்தி கல்யாணம் நடந்தது. தாலிகூடப் போட்டாங்க."

அவள் தவிப்புடன் தான் அணிந்திருந்த தங்கச் சங்கிலியுடன் கோர்த்த திருமாங்கல்யத்தை வெளியே எடுத்துக் காட்ட விரக்தியாகச் சிரித்தாள் வாசுகி!

"தெரியும்! அம்மாவுக்காகத்தான் அங்கிள் தப்பு பண்ணிட்டேன்னு தீரேன் புலம்பியிருந்திருக்காரு."

அவள் கூறியதும், தன் உயிரில் பாதியை யாரோ பறித்து எறிந்த உணர்வு ரோஸுக்குள்!

உடல் முழுவதும் தீப்பற்றினாற் போல் தகித்து, விழிகள் எரிந்தன.

காதல், திருமணத்தில் எல்லாம் விருப்பமில்லாத தீரேனுடைய கொள்கையும் பேச்சும் நினைவு வர, தன் தாய்க்காகவே அவன் இதற்கு சம்மதித்ததும் புரிவதாய்!

"ஆனால்... நேற்றிரவு நடந்த அந்த நிகழ்வு... தங்கள் இருவருக்கு மட்டுமே தெரிந்த ஓர் நிஜமாயிற்றே!"

அதை தீரேனால் எப்படி மறுக்க முடியும்... இல்லை அவனால் தான் எப்படி மறக்க முடியும்...? உடல் குலுங்கியது!

இந்த நிமிடமே இறந்து விட வேண்டும் போல்!



"கவலைப்படாதே ரோஸ்... நீ ஃபாரின்லே வளர்ந்தவ... அதோட கிறிஸ்டியன் வேற... இந்தத் தாலி செண்டிமெண்டெல்லாம் உனக்குக் கிடையாதுன்னு எனக்கு நல்லாவே தெரியும்..."

"இல்லை... அதெல்லாம் எனக்குத் தெரியாது... ஆனா இது தீரேன் எனக்குக் குடுத்த கிஃப்ட்... அதை எப்படி?"

"பாவம் ரோஸ் நீ! அதை அவரே மதிக்கலை. அம்மாவுக்காக நடிச்சதாதான் அப்பாகிட்டே சொல்லி வருத்தப்பட்டாராம்! எப்படி அந்தத் தாலியை திருப்பிக் கேக்கறதுன்னு அம்மாகிட்ட கூட வருத்தப்பட்டாராம்!"

"அவருக்கு இந்த கமிட்மெண்ட்டில மாட்டிக்க இஷ்டமில்லைன்றதுதான் புரியுதே! நீயாவே குடுத்ததா சொல்லி நானே இதைக் குடுத்திடறேன்... ப்ளீஸ்!" வாசுகி கெஞ்சினாள்.

மனதிற்குள் தேங்கியிருந்த காதலும், நேசமும் அணை உடைத்துச் சிதற உறைந்து அவள் நின்றிருந்த போது தான், வாசுகி அந்தக் காரியத்தைச் செய்தாள்.

சட்டென்று அந்த சங்கிலியை அவளிடமிருந்து கழட்டி எடுத்தவள், "தேங்க்ஸ் ரோஸ்... இது வெறும் நடிப்பு தானே? நீ தூங்கு... காலையில எல்லாம் முடிஞ்சதும் கிளம்பலாம்!"

அவளைப் பேசவே விடாமல் வாசுகி திரும்பி வேகமாக வெளியேறி விட்டாள்.

"ஓ... ஜீஸஸ்! இது இந்து முறை என்றாலும், தப்பில்லையா? ஆனால் இந்தத் திருமணம் சந்தர்ப்பத்திற்காக நடந்த பொய்யான ஒரு சடங்காயிற்றே!

JUN 13 2010

மனதில் குழப்பங்கள் தலை விரித்தாட அழுகையிலேயே கரைந்தவள், விடியும் போதுதான் உறங்கவே ஆரம்பித்தாள்.

## 11

காலையில் யாரோ கதவைத் தட்டியபோதுதான் விழித்தவளுக்கு மணி ஒன்பதானதே தெரியவில்லை.

நேற்று முழுவதும் சரியாக சாப்பிடாததும் ஓய்வெடுக்காததும், அழுதழுது ஓய்ந்து போனதுமாய் சேர்ந்து அவளைச் சோர்வடையச் செய்திருந்தன.

மூளையோ மரத்துப் போய் எதையும் யோசிக்கும் திறனற்றிருந்தது!

மெதுவாக எழுந்து சென்று கதவைத் திறந்தால், மைக் கவலையுடன் நின்றிருந்தான்.

"ரோஸ்.... ப்யூநெரலுக்கான சடங்கெல்லாம் ஆரம்பிக்கப் போவுது! வரியா? வாசுகியைப் பார்த்து பேசவே முடியலை!" சோர்வுடன் அழைத்தான்.

உடனே குளித்து கீழே சென்றபோது, சட்டையில்லாமல் வெறும் வேட்டியும் துண்டும் அணிந்து குடத்திலிருந்த தண்ணீரை தன் தாயின் சடலத்தின் மேல் ஊற்றிக் கொண்டிருந்தான் தீரேன்!

கூட்டம் நிரம்பி வழிய, பல சடங்குகளுக்குப் பிறகு, பெரிய பூப்பல்லக்கில் சிவபார்வதியைக் கிடத்தி எடுத்துச் சென்றனர்.



உறவும் நட்பு வட்ட ஆண்களும் உடன் சென்று

வாசுகியின் தாய் அவளிடம் வந்தார்.

"கொஞ்சம் உன் கூடப் பேசணும்... வரியாம்மா?" என்று தனியே அழைத்துச் சென்றார்.

ஒரு அறைக்குள் சென்றதும், "சின்னப்பிள்ளைங்களா சேர்ந்து தப்பா ஒரு முடிவெடுத்து இப்படிச் செஞ்சிட்டீங்க. வாசுகி சொன்னப்புறம் தான் எல்லாம் தெரிஞ்சுது... மாப்பிள்ளையும் ரொம்ப வருத்தப் பட்டாங்களாம்...

"நீயும் அந்தப் பையனும் வாசுகிக்காகத்தான் உதவியிருக்கீங்க... மாப்பிள்ளைக்கு இதை எப்படி அறுத்து விடறதுன்னு புரியலை... இதெல்லாம் எங்க குடும்பத்துக்கு ஒத்து வராது!

"என் சொந்தக்காரப் பெண்ணுக்கு இது மாதிரி உதவப் போயித்தான், எங்களுக்கும் பெரியப்பா குடும்பத்துக்கும் பகையாயிடுச்சி..."

"ரொம்ப வருஷம் கழிச்சி எங்க அண்ணனோட விருப்பத்தை நிறைவேத்தி குடும்பம் ஒண்ணு சேரலாமின்னு பாத்தா இப்படி ஒரு தடை!

"ஆனா கூடிய சீக்கிரமே ரெண்டு பேருக்கும் கல்யாணம் நடக்கப் போவுது. தீரேன் கிட்ட பேசியாச்சு. அவரும் சரின்னுட்டாரு!

"ப்ளீஸ்... புரிஞ்சுக்கம்மா! அந்த மைக்கேலுக்கும் இதெல்லாம் சரிப்பட்டு வராதுன்னு எடுத்துச் சொல்லு... எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கிளம்பிடுங்க...

"இல்லை... உறவுக்காரங்களுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான்... எல்லாரும் கொஞ்சம் முரட்டு மனுஷங்க... அப்புறம் அந்தப் பையன் மைக்கேலுக்குத்தான் ஆபத்து!"

JUN 13 2010

கைகூப்பி விட்டு அவர் செல்ல, ஓய்ந்து போய் தன் அறைக்குச் சென்றவள், குளித்தவுடன் தன் பொருட்களை அடுக்கித் தயாரானாள்.

அதே நேரம் வாசுகியும் மைக்கேலிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

அவளும், எல்லா விஷயங்களையும் காரியத்திற்குப் பிறகு பேசலாமென்றாள்.

இன்று மதியம் அவர்களுக்கு சென்னைக்குச் செல்ல ஃப்ளைட்!

பிறகு இருவருமாகக் கிளம்பியபோது, ''வாசுகி, பதினைஞ்சாம் நாள் காரியமெல்லாம் முடிஞ்சிதான் அங்கே வருவாளாம். வந்தப்புறம் எல்லாம் பேசிக்கலாமின்னு சொன்னா!'' என்றான் மைக்கேல்.

மெல்லத் தலையசைத்த ரோஸுக்கோ, அவனை நினைத்தால் பரிதாபமாய்!

அதற்குள், அவன் குரல் இடைமறித்தது.

''நீ கூட அந்த செயினைக் கழட்டிக் குடுத்திட்டதா சொன்னா... வாசுகி! சாகப் போற அந்த அம்மாவுக்காகத்தானே எல்லாரும் இப்படி நடிச்சோம்... ம்... சாரி ரோஸ்... தேவையில்லாம இப்படி ஒரு 'க்ரைசிஸ்'லே உன்னை மாட்டி வச்சிட்டேன்!''

ஆத்மார்த்தமாய் வருந்தியவனிடம் தன் மனதைப் பற்றியோ, தான் இழந்ததைப் பற்றியோ கூற முடியாத ஒரு நிலை!

மெல்ல நடந்து ட்ராலி கேஸை இழுத்தபடி ஹாலுக்கு வந்தபோது, தரையெல்லாம் கழுவி விடப்பட்டிருந்தன.



''எனக்கு... தீரேன்கிட்ட கொஞ்சம் பேசணும்! அவர்கிட்ட சொல்லிட்டுக் கிளம்பலாம்!''

மைக்கிடம் அவள் கூற, உடனே இடைமறித்தாள் வாசுகி!

''ரோஸ்... அவர் இப்ப ரொம்ப டயர்டா இருக்காராம்... மைக்... நீ வேணா கூப்பிட்டுப் பாரு!'' என்றாள்.

அவனுடைய அறைக் கதவைத் தட்டி விட்டு மூவரும் நிற்க, சிறிது நேரத்தில் திறந்து அவர்களை உள்ளே அழைத்தான் அவன்!

* * *

மூவரும் உள்ளே சென்றபோது, அவனைப் பார்த்தால் ஒரே நாளில் பெரிதும் ஓய்ந்து, அடர்ந்த மீசை எடுக்கப் பட்டு முகம் கசங்கி பரிதாபமாய்!

ஒரு கணம் அவளையே கூர்ந்தவன், ''கிளம்பியாச்சா...?'' என்றான் பொதுவாக!

''ஆமாம் தீரேன்! சாரி... உங்களுக்கு இந்த இழப்பிலேருந்து மீண்டு வர தைரியத்தையும் தெம்பையும் அந்த ஜீசஸ் தான் தரணும்!''

அவனுடைய கைப்பிடித்து வருத்தத்துடன் விடை பெற்றான் மைக்கேல்!

ஆனால், அவன் பார்வை மட்டும் ரோஸிடமிருந்து விலகாமல் அவளிடமே பதிந்திருந்தது.

அதே நேரம் 'சாரி' என்று தீரேனிடம் அவன் பேச ஆரம்பிக்கும்போதே, வாசுகி அவனிடம் அந்தத் திரு மாங்கல்யச் சங்கிலியை எடுத்துக் கொடுத்து விட்டாள்.

"இதை உங்ககிட்டே அவளா எப்படித் தர்றதுன்னு ரோஸ்-க்குத் தெரியலை... நேத்தே என்கிட்ட குடுத்துட்டா... இப்ப 'பை' சொல்லிட்டுப் போகலாம்னு வந்திருக்கா!"

வாசுகி கூறியவுடன், நம்ப இயலா வியப்பும் தவிப்பும் காயப்பட்ட வலியும் அவன் விழிகளில் ஒரே நொடி கசிவது போல்!

மறுகணமே அது மறைந்து விழிகள் கூர்மையாகிவிட, தன் கையிலிருந்த திருமாங்கல்யத்தையே வெறித்தபடி, "இது... இதைப்பத்தி உனக்கு எந்த பாதிப்புமில்லையா?" ஆழ்ந்த குரலில் கேட்டான்.

இன்னொருத்தியை திருமணம் செய்ய சம்மதித்தவனிடம் ஒரு போலி வாழ்க்கையை நான் எதிர்பார்க்கவில்லை என்று கூற வேண்டும் போல்!

"உங்களைப் பொறுத்தவரைக்கும் இது வெறும் நாடகம் தானே! அத்தை... சாரி உங்கம்மாவை கன்வின்ஸ் பண்ணியாச்சு. அது போதும்.

"அவங்களுக்கு நிம்மதியான கடைசி நிமிஷங்களைத் தானே குடுத்திருக்கோம்... அதுக்காகத்தானே இவ்வளவும். அதனால... வருத்தமில்லை... பை!"

நடுங்கும் குரலில் கூறிவிட்டு அதற்கு மேல் தாங்க இயலாதவளாகத் திரும்பி விரைந்து வெளியே வந்தாள் ரோஸ்.

வாசலில் காத்திருந்த காரில் ஏறி இருவரும் கிளம்ப, வாசுகியும் அவன் குடும்பத்தினரும் வேலைக்காரர்களும் அவர்களை வழியனுப்பினர்.

நீரேன் வெளியே வரவேயில்லை!



காரில் அமர்ந்ததுமே வெடித்துச் சிதறிய அழுகையை அவளால் கட்டுப்படுத்த இயலாமல் போயிற்று!

பிறகு சென்னைக்கு வரும் வரை அவள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

## 12

ஏர்போர்ட்டிலிருந்து வெளியே வரும்போதே மைக்கேலின் செல் ஒலித்தது.

எடுத்துப் பேசியவனுடைய முகம் உடனே இருள, பதட்டத்துடன் அவளிடம் திரும்பினான் அவன்!

"ரோஸ்... பென்னட் அங்க்கிளுக்கு திடீர்னு ஹார்ட் அட்டாக் வந்து ஹாஸ்பிடல்லே அட்மிட் செஞ்சிருக்காங்களாம்! ரொம்ப கிரிட்டிகலாம்.

"உன்னை உடனே அனுப்பச் சொல்லி அப்பாவுக்கு போன் வந்ததாம்... ஏன் உன் செல்லுக்கு லைன் கிடைக்கலையாமே?"

அவன் கூறியதும் தான் இரு நாட்களாக செல்லை சார்ஜிலேயே போடாததும், தினமும் பேசுபவள், இரு நாட்களாகவே அமெரிக்காவிற்குப் பேசவில்லை என்பதும் நினைவு வந்தது.

குற்றக் குறுகுறுப்புடன் தந்தையின் ஞாபகத்தில் பதட்டமும் சேர்ந்து கண்களை இருட்டிக் கொண்டு வர அப்படியே சரிந்து விழுந்தாள் அவள்!

JUN 13 2010

பிறகு என்ன நடந்ததென்றே புரியாமல் கண் விழித்த போது, காரில் இருந்தனர்.

மைக்கேல் பெரும் பதட்டத்தில் அவளை எழுப்பிக் கொண்டிருந்தான்.

அவள் இமை திறந்ததும், ''தேங்க் காட்! ரோஸ்... அம்மா எல்லாம் பேக் பண்ணி வச்சிட்டாங்களாம்! நான் வேற, ஃப்ளைட் ஏறினவுடனே செல்லை ஆஃப் பண்ணிட்டேனா.. ட்ரை பண்ணிட்டே இருந்திருக்காங்க.''

''காலையில நான் அம்மாவோடப் பேசினேன். அப்ப நியூஸ் வரலை போலருக்கு! என் ஃப்ரெண்ட் ட்ராவல்ஸ் நடத்திட்டிருக்கான். உடனே உனக்கு டிக்கெட் எமர் ஜென்சி கோட்டாவில புக் பண்ணச் சொல்லியிருக்கேன்.

''வீட்டிற்குப் போனவுடனே சொல்லிட்டுக் கிளம்பிட லாம்... இந்தா இதிலே ஆண்ட்டியோடப் பேசு!''

தன் செல்லில் தொடர்பு கொண்டு அமெரிக்காவில் அவள் வீட்டிற்கு ஜெசிந்தாவிடம் பேசியவன், உடனே அவளிடம் கொடுத்து விட்டான்.

''அம்மா...'' அவள் விசும்பி அழ, அந்தக் கண்ணீர் தனக்காகவும் சேர்த்துதான் என்பதை அவள் மட்டுமே உணர்ந்திருந்தாள்.

''ரோஸ்... நீ உடனே கிளம்பி வாடா!'' ஜெசிந்தாவின் குரல் உடைந்திருந்தது.

''அப்பா எப்படி இருக்காங்கம்மா?'' ஒரு விம்மலுடன் வினவியவளை பெண்ணட்டின் நண்பர் குரல் தடுத்தது!

''ரோஸ் ஹி இஸ் ஓகே நௌ... நீ உடனே கிளம்பி கிடைக்கிற ஃப்ளைட்டில் வந்துடும்மா! ஜெசி ரொம்ப



லோன்லியா ஃபீல் பண்றா!'' என்றபடி லைனைக் க

செய்தார்.

* * *

பிறகு நடந்தவை எல்லம் வெறும் கனவாய்! ஏகாந்தத் தருணங்களாய்... மரத்துப் போன மனதின் எண்ணங் களாய் கடந்தன.

வீட்டிற்குச் சென்றது... ஜானும் மேரியும் அழுதபடி வழியனுப்பியது.

மைக்கேல் அவள் கையைப் பிடித்தபடி எப்போது வருவாய் எனக் கேட்டது... இனி இந்தியாவிற்கே வரமாட்டேன் என்று வேதனையும் விரக்தியுமாக விடைபெற்றது!

விமானத்தில் ஏறி அமர்ந்தது... சாண்டா குரூஸில் இறங்கியது... எல்லாமே ஒருவித மயக்க நிலையிலேயே முடிய, வீட்டிற்குச் சென்றாள்.

ஏர்போர்ட்டில் இறங்கியவுடன் போன் செய்தால், வீட்டில் பணிபுரியும் எலிசாதான் எடுத்தாள்.

''ரோஸ்! உன்னை அழைக்க மோசஸ் அங்கிள் ஏர்போர்ட்டுக்கு வந்திட்டிருக்காரு... அவரோட கிளம்பி வா மோளே!'' என்றார்.

''அம்மா எங்கே எலிஸா ஆண்ட்டி?'' அவள் கேள்விக்கு பதிலில்லாமல் லைன் துண்டிக்கப்பட்டது.

ஏதோ ஒரு பயமும், மிரட்சியும் உயிரையும் உடலை யும் உலுக்க வெளியே வந்தபோது, அவளுடைய தந்தையின் நண்பர் மோசஸ் அவளுக்காகக் காத்திருந்தார்.

அவளைக் கண்டதும் வாஞ்சையுடன் அணைத்தவர், ட்ராலியைத் தள்ளியபடிச் செல்ல ஆரம்பித்தார்.

''அங்கிள்... அப்பா எப்படி இருக்காங்க?'' கலங்கிய விழிகளுடன், உடைந்த குரலில் கேட்டாள்.

தான் இந்தியா கிளம்பும் போது, ''பை... மை ஏஞ்சல்'' என்று விடை கொடுத்த தந்தையின் குரல் எங்கோ ஒலிப்பது போல்!

''ம்... வீட்டிலதான் இருக்கான்! வா! ஹி இஸ் வெயிட்டிங் ஃபார் யூ!''

''இப்போ ஒண்ணும் ஹார்ட்டிலே ப்ராப்ளமில்லையே!''

''நோ ப்ராப்ளம் மை டியர். கம் லெட்ஸ் கோ!''

அவளை அணைத்தபடி காரில் ஏற்றி விட்டு ஓட்ட ஆரம்பித்தார் அவர்.

அவர்களுடைய வீட்டை நெருங்கும் போதே பெரும் கூட்டம் அங்கு நிறைந்திருக்க அந்த வித்தியாசத்தை உணர்ந்தவளாகக் காரிலிருந்து இறங்கி ஓடினாள் அவள்.

''கம்... மை ஏஞ்சல்...'' தொலை தூரத்திலிருந்து பென்னட்டின் குரல் அவளை அழைத்தது.

உள்ளே ஹாலில், ஒரு குளிர்ப் பேழைக்குள் கண் மூடி சயனித்திருந்தார் பென்னட்!

''அப்பா!'' என்றலறியபடிக் கீழே விழுந்தவள் மீண்டும் மயக்கமானாள்.

பிறகு தெளிந்து எழுந்தபோதுதான் தன் தாயை ஆறுதல் படுத்தவில்லையே என்ற எண்ணமே எழுவதாய்!

ஜெசிந்தா அவள் மடியில் சரிந்து அழத் துவங்க, பல அதிர்ச்சிகளை தொடர்ந்து சந்தித்தவளுக்கு உடலின் சக்தியே தொலைந்து போயிருந்தது.



பிறகு பென்னட்டின் இறுதிக் காரியங்கள் முடிந்து கிடைத்த தனிமை, பெரும் கொடுமையாய்!

நண்பர் கூட்டமும் விடைபெற்றுச் செல்ல, எதனால் தன் தந்தைக்கு திடீரென்று இப்படி ஒரு மேஸிவ் அட்டாக் வந்ததென்று விசாரிக்கவே, அப்போதுதான் தோன்றியது.

ஜெசிந்தா ஓய்ந்திருக்க, எலிஸா தான், நடந்ததை அவளிடம் கூறினார்.

* * *

அமெரிக்காவில் திடீரென்று வந்த பொருளாதார நெருக்கடியில், பென்னட்டின் பேங்க்கும் தப்பவில்லை!

ஒரே வாரத்தில் வேலையும் போய், பணமும் இழந்து... சொத்துக்களும் பாதி விலைக்கு மேல் சரிந்ததை அவரால் ஜீரணிக்கவே முடியவில்லை.

இரண்டு நாட்களாக பெரும் மன உளைச்சலில் இருந்த வரை ஜெசிந்தா எவ்வளவு தேற்றியும் பலனில்லை!

அதுவே அவருடைய இந்த திடீர் மரணத்திற்குக் காரணமானதாக எலிஸா கூறியபோது, குலுங்கி அழ ஆரம்பித்தாள் அவள்.

''ஓ... ஜீஸஸ்! அந்த இரண்டு நாட்கள் தானும் மிகப் பெரிய மாய வலையில் சிக்கி தந்தையுடன் பேச மறந்தது நினைவிற்கு வர, குற்றவுணர்ச்சி அவளைக் கொல்வதாய்!

இரு கைகளிலும் முகம் புதைத்து அழ ஆரம்பித்தவள், சமாதானமாக அன்று வெகு நேரமாயிற்று!

ஜெசிந்தாவால், தன் கணவர் வாழ்ந்த வீட்டில் அவரில்லாமல் வாழ முடியவில்லை.

பிறகு பென்னட்டின் நண்பர்களின் உதவியுடன் மீதமிருந்த அந்த வீட்டை விற்றுப் பணமாக்கி இருவரும் இந்தியாவிற்குக் கிளம்பினர்.

மோசஸின் நண்பர் சென்னையில் அவர்களுக்கென்று ஒரு வீடு பார்த்து வைத்திருந்தார்.

கடந்த இரு மாதங்கள்... இருவருமே நேரத்திற்கு உண்ணவில்லை... சரியாக உறங்கவில்லை...

ஒரு பயங்கரக் கனவிற்கு பின் வருகின்ற விதிர்ப்பு நிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறி இருவரும் நிகழ் காலத்திற்கு வந்தனர்.

அதற்குப் பிறகு யோசித்து வீட்டை விற்று இந்தியாவிற்குக் கிளம்பிய போது தான், ஜான் குடும்பத்தினரின் நினைவே வந்தது.

பென்னட்டின் இறுதிச் சடங்கிற்குப் பிறகு போன் செய்து விசாரித்ததோடு சரி... அதற்குப் பிறகு அவர்களும் ஏன் பேசவில்லை என்ற கேள்வி ரோஸின் உள்ளத்தில்!

இந்தியாவிற்குக் கிளம்புவதற்கு முன்பு ஜானுக்கு போன் செய்தபோதுதான், இடியாய் அந்த செய்தி அவர்களின் தலையில் இறங்கியது.

மைக்கேல், காதல் தோல்வியால் இரண்டு மாதம் முன்பு தற்கொலை செய்து கொண்டதாக மேரி கூறிய போது உடைந்து போனாள் அவள்.

முதலில் அவளின் இழப்பு, பிறகு தந்தையின் மரணம், இப்போது மைக்கின் மறைவு... எனக்கு மட்டும் ஏன் இப்படி... மனம் துவண்டு போனது!



## 13

ஜெசிந்தாவைத் தேற்றி இந்தியாவிற்கு அழைத்துச் சென்று, அங்கு கால் பதித்தபோது, மோசஸுடைய நண்பர் மணி அங்கு காத்திருந்தார்.

பிறகு தாம்பரத்தில் இருக்கும் அவருடைய வீட்டிற்குச் சென்று பார்த்து நன்றி கூறி விட்டு, தங்களுக்கென அவர் பார்த்து வைத்திருந்த வீட்டில் இருவரும் குடியேறினர்!

முன்பே அவர் பெயரில் 'மணி ட்ரான்ஸ்ஃபர்' செய்திருந்ததால் வீடு பார்த்து பால் காய்ச்சிக் குடித்திருந்தனர்.

சோபா, டைனிங் டேபிள், கட்டில், பீரோ, சமையல் சாமான்கள் என்று அனைத்தையும் மணியும் அவர் மனைவி கமலமுமே தயாராக வாங்கி வைத்திருந்தனர்.

நட்பு மட்டுமே ஒவ்வொரு காலத்திலும் தங்களுக்கு உதவுவது புரிந்து, ஜெசிந்தாவின் மனதில் உறவுகளின் நினைவில் பெரும் ஏக்கம் வந்தது.

அவர்கள் இருவரும் காதல் மணம் செய்து கொண்டு ஊரை விட்டுக் கிளம்பிய பிறகு, பிறந்த வீட்டுத் தொடர்பே இருவருக்கும் அற்றுப் போய்விட்டது.

அமெரிக்க வாழ்க்கை... நண்பர்கள் அங்குள்ள தமிழர்கள் என்று வருடங்களும் வேகமாக ஓடிவிட்டன.

ஒரு பெருமூச்சுடன் அமர்ந்திருந்தவரை ஏதோ புரியாத ஒரு சப்தம் கலைத்தது.

என்னவென்று பதறிப்போய் ஓடிச் சென்று பார்த்தால், குளியலறையில் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள் ரோஸ்!



JUN 13 2010

"என்னம்மா! ஜெட்லேகா? இன்னிக்கு முழுக்க ரெஸ்ட் எடுடா... சரியாயிடும்'' என்றபடி தலையைப் பிடித்து விட்டார்.

பிறகு, அவனைப் படுக்க வைத்தவர், ''என்டா ஃப்ளைட்டில் சாப்பிட்டது எதுவும் ஒத்துக்கலையா?'' பரிவுடன் விசாரித்தார்.

அப்போதுதான், தான் மூன்று மாதங்களாகத் தன்னைப் பற்றியே நினைக்கவில்லை என்பதே அவளுக்கு உரைத்தது.

இந்த மூன்று மாதங்களாக வீட்டு விலக்காகி அமர வில்லையே என்ற கேள்வி விஸ்வரூபமெடுத்து எழ, உள்ளே உடைந்து சிதறி பெரும் குரலெடுத்து அழ ஆரம் பித்தாள் அவள்.

"என்னடா... ஏன் இப்படி திடீர்னு அழறே?''

ஒன்றும் புரியாமல் கேட்டவருக்கு அவள் கூறிய பதில் பேரிடியாய்!

அப்படியே சரிந்து அமர்ந்தவர், வெகு நேரம் கழித்தே எழுந்தார்.

அழகிய நீரோடையாய்... சென்று கொண்டிருந்த அவள் வாழ்க்கைப் பாதை ஏன் திடீரென்று இப்படி சகதியாய் முட்கள் நிறைந்த புதர்க்காடாய் மாறியது... மௌனமாய் மறுகியது அந்தத் தாயுள்ளம்!

பிறகு, அவள் விபரம் கூற அந்தக் குழந்தையைக் கலைத்து விடலாமென்றார் ஜெசிந்தா!

ஆனால் அது தன் உயிரில் கலந்த தீரேனின் ஜீவனா யிற்றே... தன் முதல் காதலின் பரிசாயிற்றே...



அவள்தான் ஒத்துக் கொள்ளவில்லை... பிடிவாதமாகத் தன் கருவை சுமக்க முடிவெடுத்தாள்.

வண்டிடம் சம்மதம் கேட்டா மலர்கள் கனி சுமக் கின்றன..!

இனி, தன் வாழ்வில் இன்னொருவனுடன் திருமணம்... இணைவு இதெல்லாம் நினைத்துப் பார்க்க முடியாத கனவாகிவிட தனக்கு இந்தக் குழந்தையே துணையிருக் கட்டும் என முடிவெடுத்தாள்.

ஜெசிந்தாவிற்கோ, உலகே இருண்ட ஒரு நிலை!

அன்றே, மைக்கேலின் வீட்டிலிருந்து ஜானும் மேரியும் ராபர்ட்டும் அவர்களைப் பார்க்க வந்திருந்தனர்.

பரஸ்பரம் துக்க விசாரிப்பிற்குப் பிறகு மைக்கேல் விரும்பிய வாசுகி என்ற பெண்ணுக்கு வேறு ஒருவருடன் திருமணம் முடிவாகி பத்திரிகையும் வந்ததால், அவன் உடைந்து போய் தூக்கில் தொங்கி விட்டதாக மேரி கூறினார்.

மைக்கேலுக்காக, தான் பட்ட கஷ்டத்திற்குப் பலனே இன்றி, இப்படியானதை நினைத்து முடங்கிப் போனாள் அவள்.

பிறகு அவள் விஷயம் பற்றிக் கேள்விப்பட்ட ஜானும், மேரியும் அவர்களிடம் மன்னிப்பையே யாசித்தனர்.

தன் மகனால்தானே அவள் இப்படி ஒரு இக்கட்டில் மாட்ட நேர்ந்ததென்ற குற்ற உணர்வும் வாட்ட, இன்று வரை அவர்களுக்கு உதவியாக இருக்கின்றனர்.

இரு குடும்பமும் ஒவ்வொரு வகையில் பாதிக்கப்பட் டிருக்க, நாட்கள் விரைந்து செல்லும் வேகப் பறவையாய் பறந்தன.

JUN 13 2010

பிறகு ஸ்கேன் செய்த போதுதான், ரோஸின் வயிற்றிலிருப்பது 'ட்வின்ஸ்' எனத் தெரிய வந்தது.

வலி வருவதற்கு முன்பே, சிசேரியன் செய்யத் திட்டமிடப்பட்டு, ஆபரேஷனும் நடந்து முடிந்து விட்டது.

இன்று... எங்கிருந்தோ முளைத்த காளானாய் திடீரென்று வந்திருக்கிறான் தீரேன்.

அவனுடைய வாழ்க்கை, எதிர்கால லட்சியம், கனவுகள் எல்லாவற்றையும் குழி தோண்டிப் புதைத்தவன், இன்று அதை செப்பனிடுகிறேன் என்கிறான்.

அவள் வாழ்க்கையில் தென்றலாய் வந்தவன், இன்று ஊழிக்காற்றாய் புகுந்து, குழந்தைகளையும் அவளையும் தன்னோடு அழைக்கிறான்!

வாசுகி என்ன ஆனாள்... அவர்களுக்கிடையே நடக்கவிருந்த திருமணம் என்னாயிற்று? ரோஸின் மனதில் பல கேள்விகள்!

"ரோஸ்..." தாயின் மெல்லிய அழைப்பில் கண் திறந்த போது, குழந்தையுடன் நர்ஸ் நின்றிருந்தாள்.

இன்குபேட்டரில் இருக்கும் குழந்தைக்கு பாலூட்ட எடுத்து வந்திருந்தாள்.

பழைய நினைவுகள் காற்றில் கலையும் மேகமாய் கலைய உடலும் மனமும் ஓய்ந்திருந்தன.

அதே நேரம் தொட்டிலிலிருந்த குழந்தையும் சிணுங்க ஆரம்பிக்க, அவளுக்கு பவுடர் பாலை பாட்டிலில் கரைத்து புகட்ட ஆரம்பித்தார் ஜெசிந்தா!



## 14

மறுநாள் காலையிலேயே வந்து விட்டான் தீரேன்!

அவன் வந்ததுமே அந்த அறையே சூடாய், புழுக்கமானதைப் போல்!

அவனைக் கண்டதும் கண்களை இறுக மூடிக் கொண்டு திரும்பிப் படுத்த ரோஸைக் கண்ட போது, சட்டென்று ஒருவித இறுக்கம் வந்தது அவனிடம்!

"வாங்க" என்று வரவேற்று அமர வைத்தார் ஜெசிந்தா.

"ஆன்ட்டி! இன்னிக்கு நான் ஊருக்குப் போறேன்... முக்கியமான ப்ராஜெக்ட்! இன்னும் ஒரு வாரம் கழிச்சிதான் டிஸ்சார்ஜ் பண்ண முடியும்னு தன்ராஜ் சொல்றான்.

"அதனால அடுத்த வாரம் வரேன்... ப்ளைட்டிலேயே கோயம்புத்தூருக்குப் போயிடலாம். நீங்களும் எங்களோட அங்கே நம்ம வீட்டுக்கே வந்திடுங்க!"

அவன் முடிப்பதற்குள், "அம்மா! நான் அவங்க வீட்டுக்கு வரமுடியாதுன்னு சொல்லுங்க!" சுள்ளென்று சீறினாள் ரோஸ்!

உடனே, அவள் புறம் திரும்பியவனின் விழிகளில் பெரும் கடினம் தெரிவதாய்!

"ரோஸ்! நான் எது செஞ்சாலும் அது உன் நல்லதுக்குத் தான்... தெரியுமா?" அடிக்குரலில் அறிவுறுத்தினான்.

"ஓ... அப்படியா? என்னை நடிக்க வச்சி, தாலி கட்டி அனுப்பி வெச்சது கூட என் நல்லதுக்குத்தானா? உங்களாலே... என் வாழ்க்கையே அழிஞ்சு போச்சு!"

JUN 13 2010

அவளுடைய குற்றச்சாட்டில் இறுகி நிமிர்ந்தவன், "நான் உன் வாழ்க்கையை அழிக்கலை... வாசுகியா நடிக்க வரேன்னு சொன்னது நீ... தாலியைக் கழட்டிக் குடுத்துட்டு என்னை விட்டுப் பிரிஞ்சு போனது நீ... இப்ப என்னைக் குத்தம் சொல்றியா?" கூர்மையுடன் கேட்டான்.

"உங்களுக்கும் வாசுகிக்கும் நடக்கவிருந்த கல்யாணம் என்னாச்சி? ரெண்டாவது மனைவியா இருக்க எனக்கு இஷ்டமில்லை! மைக்கேலை ஏமாத்தின மாதிரி என்னையும் முடியாது!"

"ஓ! எனக்கும் வாசுகிக்கும் கல்யாணம்னு யார் உன் கிட்ட சொன்னா?"

"ம்... எனக்குத் தெரியும்!" விம்புடன் நிறுத்தினாள் அவள்.

"ஜுக்..... ஃபார் யுவர் இன்பர்மேஷன்... எனக்கும் வாசுகிக்கும் கல்யாணம் நடக்கலை... நான்தான் அதுக்கு ஒத்துக்கலை!"

"ஏன்? அதுக்குள்ளே வேற ஒரு கேர்ள் ஃப்ரெண்ட் கிடைச்சிட்டாங்களா?" நக்கலாக வினவினாள்.

"இல்லை... எனக்கு அது மாதிரி யாரையும் பிடிக் காதுன்னு உனக்கே தெரியும்!"

"ஆமாமாம்... அம்மாவை திருப்திப்படுத்த போலியா ஒரு கல்யாணம் செஞ்சுக்க மட்டும் பிடிக்கும்... இல்லையா?"

"ரோஸ்! என் இடத்தில நீ இருந்திருந்தாலும் இதைத் தான் செஞ்சிருப்பே! எனக்கே அம்மா தாலி கட்ட சொல்வாங்கன்னு தெரியாது..."



குத்தலாக வந்தது அவள் குரல்.

"தெரிஞ்சிருந்தா...?"

"ம்... தெரிஞ்சிருந்தா தடுத்திருப்பேன்... அம்மாவோட கடைசி விருப்பத்தை நிறைவேத்த நடந்த ஒரு விஷயம் அது!"

"ஏன்... நாடகம்னே சொல்லலாமே! ரெண்டு பேரும் நடிச்சோம்... ஆனா, பாதிக்கப்பட்டது நானும் மைக்கும் தான்... பாவம் அவன்... நானாவது உயிரோட செத்துட்டிருக் கேன்..."

"அவருக்கு என்ன ஆச்சு?" புரியாமல் கேட்டான் அவன்.

"ப்ச்... எப்படி உங்களால இப்படி நடிக்க முடியுது...? வாசுகி தனக்குக் கிடைக்க மாட்டான்னு தெரிஞ்சவுடனே அவன் சூசைட் பண்ணிட்டு இறந்தது உங்களுக்குத் தெரியாது? பொய் சொல்லாதீங்க."

அதைக் கேட்டதும் அவன் முகமே இருண்டுவிட "எனக்குத் தெரியாது!" தவிப்புடன் பகர்ந்தான்.

"தெரிஞ்சா மட்டும் என்ன? உங்களை ஒரு இக்கட்டி லிருந்து காப்பாத்த வந்த நான், என் வாழ்க்கையை இழந்தேன்... மைக் தன் உயிரையே இழந்திட்டான்."

பெரும் கசப்புடன் வந்த அவளது குரலில் ஒரு கணம் அமைதியாய் நின்றவன், "ரோஸ்! என்னால இப்படி ஒரு தவறு நடந்ததுக்கு நான் வருத்தப்படறேன். உன் வாழ்க்கையை நீ இழக்கலை! சரிப்படுத்த முடியாத தவறுங்கறதும் உலகத்துல இல்லை!

"அதனாலதான் உன் முன்னாடி இப்ப நான் நிக்கறேன்... உன்னை என் கூட அழைச்சிட்டுப் போகணும்கிறதிலே தீவிரமாவும் இருக்கேன்!" உலர்ந்த குரலில் முடித்தான்.

JUN 13 2010

"நான் வர முடியாது. என் உயிரையே என் கிட்டருந்து பிரிக்கிற மாதிரி இருந்தாலும் ஒத்துக்கறேன்... வேணும்னா ஒரு குழந்தைய... இவனை நீங்க எடுத்துக்கங்க... என் பொண்ணை நான் தரமாட்டேன்!"

"முடியாது! எனக்கு நீயும் வேணும்... நம்ம குழந்தைகளும் வேணும்!"

அந்த வார்த்தைகளின் தாக்கத்தில் உடனே முகம் சிவந்து கூடாகிவிட, "அது... வெறும் நடிப்புக்காக நாம ஒத்துக்கிட்ட வேஷம்... அதிலே அறியாம நடந்த ஒரு தப்பால ஜனிச்சவங்க இவங்க. இவங்க பிறந்ததே உங்களுக்குத் தெரியாம போயிருந்தா?

"ஓகே! இது வேஷமாகவே இருந்தாலும், ஒரு தவறால இவங்க பிறந்திருந்தாலும், எனக்குத் தெரிஞ்சப்புறம், நான் சும்மா விட முடியாது...

"செஞ்ச தப்பை சரி செய்ய நாம ரெண்டு பேருமே சேர்ந்து இவங்களை வளர்க்கலாமே... அதானே சரி...?"

"ஹும்... தப்பு செஞ்சது நீங்க... ஆனா அதுக்கான பலனை தீக்குளிச்சா மாதிரி அனுபவிச்சது நான்தானே!"

விரக்தியுடன் உதிர்க்கப்பட்ட வார்த்தைகள், அவனுள்ளும் தணலை விதைப்பதாய்!

"அப்போ... என் குழந்தைகளை சுமந்தது உனக்கு அவ்வளவு தகிப்பா வெறுப்பா இருந்தா என்கிட்டேயே குடுத்துடு... நானே வளத்திடறேன்..." பெரும் கசப்புடன் கூறினான்.

"தோ... இவங்க... நான் பத்து மாசம் சுமந்து பெத்த என் பிள்ளைங்க... இதுலே வேற யாருக்கும் உரிமை கிடையாது!"



"ஏய்! உனக்கு தாலி கட்டினவன் நான்! அதைக் கழட்டிக் குடுத்துட்டுப் போயிருந்தாலும், இவங்க என் குழந்தைகள்தான்னு 'டிஎன்ஏ' டெஸ்ட் மூலமா நிரூபிச்சி என்னால உரிமை கொண்டாட முடியும்" அடிக்குரலில் கர்ஜித்தான்.

"ஏன் இப்படி என்னை டார்ச்சர் பண்றீங்க... அம்மா இவரைப் போகச் சொல்லுங்க... எனக்கு யார் துணையும் வேண்டாம். என்னால தனியா வாழ முடியும்...!" கதறலும் விம்புமாய் உரைத்தாள்.

அந்த நொடி. முதன் முதலாக வாய் திறந்தார் ஜெசிந்தா.

"ரோஸ்! இந்த விஷயத்துல நான் மாப்பிள்ளை பக்கம்தான்! தனியா இருந்து நீ என்ன சாதிக்கப் போறே? என் பேரப்பசங்க அவங்க அப்பாவோட வளர்றதைத்தான் நானும் விரும்பறேன்! ப்ளீஸ்... எனக்காக ஒத்துக்கடா!

"எந்த ஒரு பொருளையும் தொலைச்ச இடத்துலதான் தேடணும்னு ஒரு பழமொழி உண்டு! அது மாதிரி நீ உன் வாழ்க்கையத் தொலைச்ச இடம் அவர் வீடுன்னு தானே என்கிட்ட சொன்னே!

"இப்ப அதை அங்கே தானே தேடணும்! அதுதானே முறை! என் பொண்ணு முறை தவறி குழந்தை பெத்தவன்னு யாரும் சொல்லக்கூடாது!

"அவரோட வீடுதான் உன் இடம்... அங்கேதான் நீ இருக்கணும்!" பிடிவாதக் குரலில் முடித்தார்.

உடலெங்கும் நரம்புகள் அந்த வார்த்தைகளால் துடிதுடித்து அதிர்ந்தன. அதற்கு மேல் அவளால் மறுத்து ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை!

உடனே ஜெசிந்தாவிடம் திரும்பியவன், "ரொம்ப நன்றி ஆன்ட்டி! நான் ஊருக்குப் போயிட்டு இந்த வாரக்

JUN 13 2010

கடைசியில வந்துடறேன். டேக் கேர் ரோஸ்! குழந்தை களை பத்திரமா பாத்துக்க! அவங்களுக்கு ஏதாவது ஒண்ணுன்னா என்னாலத் தாங்க முடியாது! பை!'' வேண்டுமென்றே உதட்டு சுழிப்புடன் சீண்டி விட்டு விடைபெற்றான்.

''ம்... ரொம்பத்தான் அக்கறை! இத்தனை நாளா இருக் கோமா இல்லையான்னு கூடத் தேடலை! இப்ப திடீர்ப் பாசம் வந்துடுச்சி.. ப்ச்!''

அவள் கோபமாக முணுமுணுத்து விட்டுத் திரும்பிக் கொண்டாள்.

சிறு முறுவலுடன் ஜெசிந்தாவிடம் விடைபெற்று வெளியே வந்தவனுக்குள், பெரும் நிம்மதி!

இந்த அளவுக்காவது அவள் இறங்கி வந்தாளே என்று தோன்றினாலும், நீறு பூத்த நெருப்பாய் அவள் மீது கனன்றிருந்த கோபம் மட்டும் அடங்க மறுப்பதாய்!

அன்று தாலியை கழட்டிக் கொடுத்து விட்டு அவள் சென்றதையும்... பிறகும் தான் கருத்தரித்ததைப் பற்றி மறைத்ததையும் அவனால் ஜீரணிக்கவே இயலவில்லை.

* * *

தீரேன், கிளம்பும் போதே ஒரு செல்போனை வாங்கி ஜெசிந்தாவிடம் கொடுத்துவிட்டு சென்றிருந்தான். தினமும் இருவேளையும் அதில் பேசி நலம் விசாரித்தான்.

ஒரு வாரம் கழிந்ததே தெரியாமல் வேகமாய் விரைந் தோட, ரோஸின் மனம் தான் பெரும் பாரமாய்!

இந்த ஒரு வாரத்தில் தாயுடன் எவ்வளவோ பேசிப் பார்த்து விட்டான்... ஆனால், அதற்கு அவர் மசிந் தால்தானே?



கடைசியாக அவர் உதிர்த்த வார்த்தைகள் அ வாய் மூடி மௌனியாக்கின.

''ரோஸ்! இது வரைக்கும் நீ கேட்டு நான் எதுவுமே மறுத்ததில்லை! உன் நல்லதுக்காக... நம்ம பிள்ளை களோட வளமான எதிர்காலத்துக்காக!''

''நம்மகிட்ட பணமிருந்தாலும், ஒரு அப்பா இல்லாம, அப்பா முகம் பாக்காம குழந்தைங்க வளர்றது எவ்வளவு கொடுமை தெரியுமா?

''அது என் பேரக் குழந்தைகளுக்கு வேண்டாம்! இது நீயே எடுத்த ஒரு முடிவு! நீ சொன்னியே தப்பு நடந்த துன்னு... அதுவும் உன் பரிபூரண சம்மதத்தோட முடிஞ்ச ஒரு விஷயம்! இப்போ அதை சீர் செய்ய உன் கணவரே முன் வந்திருக்காரு!''

''அம்மா... அது ஒரு பொய்யான கல்யாணம்!'' அவள் குறுக்கே புகுந்து நினைவு படுத்தினாள்.

''ஹூம்... ஒரு பெரியவங்க... அவரோட அம்மா ஆசியோட நடந்த ஒரு கல்யாணம்... அது நாலு சுவத்துக் குள்ளேயே நடந்திருந்தாலும் என்னைப் பொறுத்த வரைக்கும் அது நிஜம்தான்!''

''எனக்குத் தெரிஞ்சு மாப்பிள்ளையைத் தப்பா நினைக்க முடியலை. சந்தர்ப்பம், சூழ்நிலை இதெல்லாம் தான் உங்களுக்கு எதிரா இருந்திருக்கு... எல்லாத்தையும் மறந்துட்டு அவரோட நீ சந்தோஷமா இருக்கணும்!

இதுதான் என்னோட ஒரே ஆசை! நான் இது வரைக்கும் உன்கிட்டே எதுவுமே கேட்டதில்லை... முதல் தடவையா கேக்கறேன்... என் ஆசைப்படி நடந்துப்பியா?''

JUN 13 2010

உடைந்த குரலில் அவர் முடித்ததும், மறுத்து எதுவுமே சொல்ல முடியாமல் நாவடைத்துப் போனது.

தன் தந்தை இறந்த துயரத்திலிருந்து மீண்டு வர ஆரம்பித்தவருக்கு... தன் உணர்வுகளை மதித்துக் கூடவே இருந்து கண்ணும் கருத்துமாய் கவனித்த வருக்கு... இது கூட செய்யவில்லை என்றால் மனிதத் தன்மைக்கே இடமில்லை என்று தோன்றியது!

''வருவது வரட்டும்... என் குழந்தைகளும் தந்தை யாரென்ற முகவரியின்றி நின்று விடக்கூடாது! ஆனால், தீரேனை என்னால் கணவனாக ஏற்றுக் கொள்ள முடியாது...

''என் மனதில் பொங்கிய முதல் காதல் உணர்வு சிதைந்து விட்டது... இனி அதை உயிர்ப்பிக்க முடியாது! அதற்கும் மேல் என்னை வற்புறுத்தினால் நான் பிரிந்து சென்று விடுவேன்!'' முடிவு செய்த மனம் சூளுரைத்தது.

# 15

அந்த ஞாயிறன்று காலையிலேயே வந்து விட்டான் தீரேன்.

குழந்தையைக் குளிக்க வைப்பதற்காக நர்ஸ் எடுத்துச் சென்றிருக்க, டவல், சோப் எடுத்துக் கொண்டு உடன் சென்றிருந்தார் ஜெசிந்தா!

ஒரு குழந்தை தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தது.

இப்போது, நன்றாக நடக்க ஆரம்பித்து விட்டதால், அறைக்குள்ளேயே மெதுவாக நடந்து கொண்டிருந்தாள் ரோஸ்!

அப்போது அறைக் கதவு மெலிதாகத் தட்டப்பட, ''யெஸ்... கமின்'' என்றபோது, மெதுவாக உள்ளே நுழைந்த தீரேனை அவள் அந்த நிமிடம் எதிர்பார்க்கவில்லை!



அதனாலேயே சட்டென்று திரும்பியவளுக்குத் தலை சுற்றிவிட, உடனே சுவரை ஆதாரமாகப் பற்றியபடி கண் மூடிச் சாய்ந்து கொண்டாள்.

மறுகணமே பதறி வந்து அவளைப் பிடித்து தன்னோடு அணைத்து அவன் துணையாய் நிற்க, எதிலிருந்தோ அவளைக் காப்பது போலிருந்தது அவன் செய்கை!

''எங்கே ஆண்ட்டி... உன்னை இப்படி தனியா நடக்க விட்டுட்டு இந்த நர்ஸெல்லாம் என்ன செய்யறாங்க?''

பதட்டமும் கோபமுமாய் அவன் வினவியபோது தான், தன்னிலை உணர்ந்து தலை சுற்றல் குறைந்து அவனிட மிருந்து வேகமாக விலகினாள் அவள்.

ஆனால், உடல் பலவீனத்தால் மீண்டும் தலை சுற்ற தடுமாறியபோது அவளை இழுத்து, தன் கையணைப்பில் நிறுத்தி, ''இப்பக் கூட ஏன் இவ்வளவு பிடிவாதம் ரோஸ் உனக்கு? நீ ஒரு பேஷண்ட்... அது ஞாபகமிருக்கட்டும்! குழந்தைகளை வேற பாத்துக்கணும்... இப்படிப் பொறுப் பில்லாம இருந்தா?''

அக்கறையுடன் கூறியபடி அழைத்துச் சென்று அவளைப் படுக்க வைத்தான்.

''ஓ! அதானே... என்னடா என்மேல பாசம் பொத்துக் கிதேன்னு பார்த்தேன்... குழந்தைகளை வளர்க்க, நான் உயிரோட இருக்கணும்... இல்லையா?'' ஏளனமாகக் கேட்டு உதடுகளைச் சுழித்தாள்.

அவளையே சிறு கடுமையுடன் வெறித்தவன், ''நீ சொன்னாலும் சொல்லாட்டாலும் உன் மேல எனக்குப் பாசம் உண்டு ரோஸ்! என் அம்மா பாத்து இவதான் உன் மனைவின்னு சொல்லி, நான் தாலி கட்டினவ நீ!''

JUN 13 2010

அதற்குள் இடைமறித்தவள், "அதான் அதுக்கு இப்ப அர்த்தமே இல்லாமப் போச்சே! அந்தத் தாலியே உங்க கையிலதானே இருக்கு!" எங்கோ பார்த்தபடிக் கூறினாள்.

"என்னைப் பாத்துக் கூடப் பேசலாம் ரோஸ்! ஆனா உண்மையப் பேசணும்னா என் கண்ணை நேருக்கு நேராப் பாத்து சொல்லணுமேன்ற பயம் உனக்கு... இல்லை?"

"இல்லை... இது பயம் இல்லை... கிட்டத்தட்ட ஒரு வருஷமா என் மனசுல தணலா எரிஞ்சிட்டிருக்கற வெறுப்பு!"

உடனே அவன் முகம் கசங்கி கண்கள் இடுங்கின.

"முதல்லே ஒண்ணைப் புரிஞ்சிக்க ரோஸலின்! இது ஆதாரமில்லாத வெறுப்பு! நீயா விரும்பித்தான் என் கூட நடிக்க வந்தே! நீயாத்தான் அந்த திருமாங்கல்யத்தையும் என்கிட்ட திரும்பக் குடுத்தே! இது ரெண்டுமே உன் சுய விருப்பத்தோட நடந்த செயல்கள்! என்னைக் குத்தம் சொல்ற பழக்கத்தை முதல்லே விடு!" அடிக்குரலில் எச்சரித்தான்.

"ஓ... இது ரெண்டும் நான் விரும்பி செஞ்சது... ஆனா... உங்கம்மா இறந்து போறதுக்கு முதல் நாள் நடந்தது... அது யார் விரும்பிப் பண்ணின தப்பாம்?"

கோபத்துடன் குமுறினாள்.

"ரோஸ்! அது தப்பில்லை! நாம ரெண்டு பேருமே கணவன் மனைவியா உணர்வு பூர்வமா உணர்ந்து நடத்தின ஒரு தாம்பத்யம்... அதைக் கொச்சைப்படுத்தாதே... ப்ளீஸ்!



"அன்னிக்கு அதை நீ தடுக்கவும் இல்லை. என்னை வெறுக்கவும் இல்லை. மறந்திடாதே!"

அவன் முடித்தவுடன் கழிவிரக்கத்துடன் அவள் தன் பார்வையைத் தழைக்க, அறைக்கதவு திறக்கப்பட்டு அந்த நிமிடம் குழந்தையுடன் உள்ளே வந்தார் ஜெசிந்தா!

அவனைக் கண்டதும், "வாங்க மாப்பிள்ளை... நல்லவேளை... குழந்தைங்க பர்த் சர்ட்டிபிகேட்ஸ் ரெடியாம்... பெயர் கேட்டாங்க... உங்களைக் கேக்கணுமேன்னு நினைச்சேன்!" புன்னகையுடன் வரவேற்றார்!

"அம்மா... நான் என் குழந்தைகளுக்கு பெயர் செலக்ட் பண்ணியாச்சு!" வீம்புடன் குறுக்கிட்டாள் ரோஸ்...!

சிறு நமட்டுச் சிரிப்புடன் அவளிடம் திரும்பியவன், "சரி! நீ என்ன பெயர் செலக்ட் பண்ணியிருக்கே... சொல்லு?" மென் குரலில் கேட்டான்!

"ம்...! அதை... உங்ககிட்டே சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை!"

அலட்சியமாக மொழிந்தவளை கோபத்துடன், "ரோஸ்... என்ன இது... இவ்வளவு சில்லியா? இது என் பெண்ணாத் தெரியலையே?" அதட்டினார் ஜெசிந்தா.

"விடுங்க ஆன்ட்டி... அவ சொல்லட்டும்!"

உதட்டோரம் சிறு குறும்பில் துடித்தபடி அவன் கூற, அவளுக்கோ தாய் அவனுக்குப் பரிந்து, அதட்டியது எரிச்சலாய்!

"ம்... பென்னட்...... ப்ரயன்னா!"

அவள் அழுத்தமாகக் கூற, "ஓகே! ஒரு சின்னத் திருத்தம் வெச்சுக்கலாமா... சத்யன் பென்னட்.... ப்ரயன்னா பார்கவி! ஓகே!"

JUN 13 2010

ஆழ்ந்த குரலில் கேட்டவனிடம் ஏனோ மறுக்க இயல
வில்லை!

ஜெசிந்தாவிற்கோ அவன் அமைதியாய் ஒத்துக்
கொண்டது பெரும் வியப்பாய்... ஊடே, வேறு ஒரு
எண்ணமும் மின்னலாய் வந்தது!

"இவ பேரும் எஞ்செலினா ரோஸலின் தான்! இரண்டு
பேரா வரும்! இவங்கப்பா கூட 'எஞ்சல்'னுதான் இவளைக்
கூப்பிடுவாரு!''

அதே நிமிடம் வேறெதையும் யோசிக்கவே இடம்
தராமல், குழந்தை பசியில் சிணுங்க, இங்கிதமாக அங்
கிருந்து வெளியேறினான் தீரேன்!

## 16

அன்று மாலையே டிஸ்சார்ஜ் செய்து அவர்கள்
குடியிருந்த ஃப்ளாட்டிற்கு அழைத்துச் சென்றவன்,
மறுநாள் மதியமே கிளம்ப வேண்டுமென்றான்.

மறுநாள் காலையிலிருந்தே எல்லாத் துணிகளையும்
அடுக்கும் வேலையில் ஆழ்ந்திருந்தார் ஜெசிந்தா.

நேற்றே விபரம் அறிந்திருந்ததால் ஜானும், மேரியும்
விடை கொடுக்க வந்திருந்தனர்.

அவர்கள் விடைபெறும்போது, பழையவற்றை மறக்க
இயலாது ரோஸ் தவிப்பதை மேரியிடம் கூறினார் ஜெசிந்தா.

உடனே அவளிடம் வந்த ஜான், ''ரோஸ்! மனுஷன்னா
கஷ்டங்கள் வரும் போகும்... எல்லாத்தையும் மறக்கக்



கத்துக்கணும்! ஒரு மனிதன் தனக்கு வர்ற சோதனைகளை
எதிர்நோக்கி வெற்றி கொள்றதுதான் சரி!''

''உன்னைதான் என் வீட்டு மருமகளாக்கணும்னு நான்
நினைச்சேன்... ஜீஸஸ் வேற மாதிரி நினைச்சிட்டாரு!''

''இப்போ இந்த ஒரு வருஷத்தில நாங்க கொஞ்சம்
தேறிட்டோம் இல்லையா? இனிமே எங்க உலகமே
ராபர்ட்தான்... எங்களைப் பத்தி கொஞ்சம் கூடக் கவலைப்
படாம சுயநலமா தன்னைப் பத்தி மட்டுமே நினைச்சி
உயிர்விட்ட மைக்கேலை விட இப்போ ராபர்ட் தான்....
அவன் எதிர்காலம்தான் எங்களுக்கு முக்கியம்!

''அது மாதிரி இனிமே உனக்கு இந்த குழந்தைங்க
ஃப்யூச்சர்தான் முக்கியம்!

''வாழ்க்கையில, ரெண்டே துன்பங்கள் தான் உண்
டுன்னு பெர்னார்ட்ஷா சொல்லியிருக்காரு! உன் இதயம்
விரும்புவதை நீ அடையாமல் இருப்பது ஒன்று... அதை
அடைவது மற்றொன்றுன்னு!

''வாழ்க்கை இதுதான் ரோஸ்... அதை அதன் போக்கி
லேயே போகவிட்டுத் தான் ஜெயிக்கணும்... ஆல் தி
பெஸ்ட் மை டியர்!'' கைப்பிடித்து வாழ்த்தி விடை
பெற்றார்.

பிறகு காலையிலேயே வந்து விட்ட தீரேனிடம் ஒரு
குழந்தையை மடியில் கிடத்தி விட்டு, வேலைகளைப்
பார்க்கச் சென்றார் ஜெசிந்தா.

சிறிது நேரம் கழித்து அந்த அறைக்கு குழந்தையின் சில
பொருட்களை எடுப்பதற்காகச் சென்ற ரோஸ், வாசலி
லேயே திகைத்து நின்று விட்டாள்.



JUN 13 2010

மடியிலிருந்த குழந்தையின் மேல் தீரேனுடைய பார்வை பிரியத்துடன் பதிந்திருக்க, முகம் கொள்ளா ரசனை சிரிப்புடன், ஒரு புதையலைப் பார்ப்பது போல் பிரமிப்பாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு, அவனுடைய விரல்கள் குழந்தையின் மென் பஞ்சுக் கால்களை மெதுவாய் வருட, உறங்கிக் கொண்டிருந்த மகன் விழிக்காமலே அவனுடைய பிஞ்சு விரல்களில் மென்மையாக முத்தமிட்டான்

அவனுடைய முகம், விழிகளின் பளபளப்பு, ரசனையுடன் விரிந்திருந்த உதடுகள், பூவினும் மெல்லிய உணர்வுடன் தன் குழந்தையை வருடிய விதம், செல்ல முத்தம்... எல்லாமே அவனுடைய ஆழ்ந்த பிரியத்தை உணர்த்தின.

தன் கணவன், குழந்தையை கொஞ்சும் அழகை அங்கிருந்தே ரசித்தவளின் விழிகளில் அழகிய குறுஞ்சிரிப்பு தடம் பதிக்க, அந்த நிமிடமே நிமிர்ந்தவன் அவளைப் பார்த்து விட்டான்.

'இங்கே வா...' என்பது போல் அவன் கண்ணாலேயே அழைக்க, மந்திரத்திற்கு கட்டுண்டது போல அவள் அருகில் செல்ல, சிறு மலர்ச்சி அவனிடம்!

''தேங்க்யூ... உன் கண்கள் இன்னிக்குதான் அழகா சிரிச்சது... நான் முதல் நாள் உன்னைப் பாத்த மாதிரி! நீ மாற ஆரம்பிச்சிருக்கே ரோஸ்!'' மென் குரலில் நிறுத்தினான்.

''இல்லை! பொய்! என் கண்ணிலே இருந்த சிரிப்பெல்லாம் தொலைஞ்சு போய் ரொம்ப நாளாச்சி... நான் போன முறை இந்தியாவுக்கு வரதுக்கு முன்னாடி என் ஃப்ரெண்ட்ஸ் சொல்லிக் கேட்டதுதான்!''



அவள் வீம்புடன் மறுத்தாள்.

''ஹூம்... இப்போ கொஞ்ச நேரம் முன்னாடி நான் பாத்தேன்! பழைய சிரிப்பு உன் கண்ணிலே கசிஞ்சது!''

''நோ... வீண் கற்பனை! கற்பனை எல்லாம் உண்மையாகிடாது!''

''கற்பனை இல்லை... நிஜம்! அந்த சிரிப்பை மீட்டெடுத்து நிரந்தரமா அங்கேயே தக்க வைக்க என்னால முடியும்...''

''ஹூம்... மேற்கே சூரியன் உதிக்கட்டும்... அப்போ பாக்கலாம்!''

''ம்... பாப்போம்... என்னடா செல்லம்?

''உங்கம்மாவை மாத்த என்னால முடியும்தானே?''

அப்போதுதான் விழிக்க ஆரம்பித்திருந்த குழந்தையிடம் செல்லமாகக் கேட்டான் அவன்.

''ப்ச்...'' என்றபடித் திரும்பிய வெளியேறிய மனைவியையே தாபத்துடன் தொடர்ந்தன அவன் விழிகள்!

* * *

பிறகு குழந்தை அழ ஆரம்பிக்க, ஜெசிந்தா தான் வந்து குழந்தையை எடுத்துச் சென்றார்.

மதியம், கிளம்பும் வரை அவனருகிலேயே ரோஸ் வரவில்லை!

அந்த வீட்டிலுள்ள பொருட்களை எல்லாம் ஒரு ஏஜெண்ட்டின் மூலம் விற்று விட ஏற்பாடு செய்துவிட்டு, மூன்று மாத வாடகையையும் உரிமையாளரிடம் அளித்தான் தீரேன்.

JUN 13 2010

சாமான்களை எடுத்த பிறகு அவர் வாடகைக்கு விட்டுக் கொள்ளலாம் என்றதும், அவர் மகிழ்ச்சியுடன் சம்மதித்தார்.

பிறகு, அட்வான்ஸை ஜெசிந்தாவின் பெயரில் வங்கியில் கட்டி விடும்படி கூறி விட்டு பக்கத்து வீடுகளில் விடைபெற்று இருவரும் வந்தனர்.

விமானத்தில் கிளம்பி கோயம்புத்தூரில் தரை இறங்கியபோது, ஏர்போர்ட்டில் அவர்களுக்காகக் காருடன் சிகாமணி காத்திருந்தார்.

பிறகு காரில் பயணித்த போதுதான், மெதுவாக தீரேனிடம் விசாரிக்க ஆரம்பித்தார் ஜெசிந்தா!

"மாப்பிள்ளை! உங்க வீடு மெயின் கோயம்புத்தூரிலேயேவா?" ஆவலுடன் கேட்டார்.

"இல்லை ஆன்ட்டி! பக்கத்தில ஒரு அஞ்சு கிலோ மீட்டர் தான் போகணும்!" என்றான் அவன்.

ஆனால், அவர்களின் கார் செல்லச் செல்ல, ஜெசிந்தாவைப் பெரும் பரபரப்பும் தவிப்பும் தொற்றிக் கொண்டன!

அந்த ஊரின் பெயரைப் பார்த்ததுமே, அவர் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் அருவியாய் வழிய ஆரம்பித்தது.

"என்னம்மா? ஏன் அழறீங்க?"

ரோஸ் பதட்டத்துடன் கேட்க, தீரேன் பின்புறம் திரும்பினான்.

அவர் புடவையில் முகம் புதைத்து அழுவதைக் கண்டதுமே பதறிப் போனான்.

"காரை ஒரு நிமிஷம் நிறுத்துங்க அண்ணன்!" என்றபடி இறங்கி வந்தான்.



"இல்லை! ஒண்ணுமில்லை... ஏதோ பழைய ஞாபகங்கள்... நிறுத்த வேண்டாம் தம்பி.. கிளம்பலாம்! இந்த ஊரிலே நீங்க யார் வீடு... உங்க அப்பா அம்மா?" கம்மிய குரலில் கேட்டார் அவர்.

உடனே பின்புறம் அமர்ந்திருந்த சிகாமணி தான் அதற்கு பதில் கூறினார்.

"ஞான தேசிகன் அய்யாவோட குடும்பம்மா இது! சின் சத்யேந்திரன் அய்யாவோட பிள்ளைதான் நம்ம சின்னய்யா!" என்றதும் விழிகள் தெறித்து விடும்போல் நோக்கியவர் "அண்ணா!" வென்று அலறினார்.

ஒன்றும் புரியாமல் ரோஸ் விழிக்க, சிகாமணிதான் உடனே கண்டு பிடித்து விட்டார்.

"அம்மா! நீங்க... நம்ம சின்னம்மா மல்லிகா இல்லை?" பரபரப்புடன் கேட்டார்.

"ஆம்" என்பது போல் தலையசைத்து அழுத ஜெசிந்தாவை தீரேனும் ரோஸும் வியப்புடன் பார்த்தனர்.

"நீங்க... சிகாமணி அண்ணன் தானே?"

உடனே அடையாளம் தெரிந்து அவர் கேட்க தீரேனுக்கோ குழப்பமாய்!

"என்ன அண்ணன்... யாரு இவங்க?" வியப்புடன் வினவினான்.

"இவங்க உங்க சொந்த அத்தை தம்பி! சத்யேந்திரன் அய்யாவோட தங்கச்சி! சின்ன வயசுலப் பாத்தது... அதான் சட்டுன்னு அடையாளம் புரியலை!"

அவர் கூறியதும், நம்ப முடியாமல் அவரையே ஆழ்ந்து நோக்கினாள் ரோஸ்!

JUN 13 2010

தீரேனுக்கோ தன் சிறு வயதில் ஒரு முறை, தன் தாயிடம் பேசியது உடனே நினைவுக்கு வந்தது.

''அம்மா... அப்பாவும் என்னை மாதிரியே ஒரே செல்லப் பையனா பாட்டிக்கு?''

ஆவலுடன் வினவியவனுக்கு பதிலாக ''இல்லைடா கண்ணா! உனக்கு ஒரு அத்தை இருக்காங்க!'' என்றார் சிவபார்வதி!

''எங்கே பாட்டி?''

அவன் பாட்டியிடம் கேட்க, ''ம்... சீமையில இருக்கா! பார்வதி சும்மா இருக்க மாட்டியா? இவன் வேற உன் புருஷன்கிட்ட போய் கேட்டுடப் போறான். அவன் கோபம் தெரியாதா உனக்கு?''

அதற்கு மேல் இருவரும் ஒன்றுமே பேசவில்லை. பிறகு அவனும் அதை மறந்திருந்தான்.

இப்போது அவன் யோசிப்பதற்குள் வீடு வந்திருக்க, வாசலிலேயே ஆரத்தி எடுக்க சுமங்கலிப் பெண்கள் காத்திருந்தனர்.

காரிலிருந்து இறங்கும் முன்பே குழந்தையை ஒரு பெண்மணி வாங்கி தீரேனிடம் தந்தார்.

அவனும், ரோஸுமாக இரு குழந்தைகளையும் சுமந்தபடி நிற்க, ஆரத்தி எடுத்து இருவரையும் உள்ளே அழைத்தனர்.

அதில் ஒருவர் அடையாளம் கண்டு கொண்டு, ''நீங்க... மல்லிகாக்கா இல்லை?'' ஆர்வத்துடன் கேட்டார்.

ஜெசிந்தா ஆமென்றதும் ஓடி வந்து அணைத்துக் கொண்டார்.

ரோஸ் பெரும் குழப்பத்திலிருக்க, தீரேனோ மிகுந்த உற்சாகத்திலிருந்தான்.



தன் தந்தையின் கடைசி விருப்பமாய்... அ[illegible] தங்கை பெண்ணையே அந்த வீட்டு மருமகளாகக் கொண்டு வந்த மகிழ்ச்சி அவனிடம்!

உற்சாகத்துடன் கவனித்தால், ஜெசிந்தா வேகமாக வீட்டினுள் செல்வது தெரிந்தது.

குழந்தைகளையும் ரோஸையும் கீழே இருந்த ஒரு பெரிய அறைக்கு அவன் அழைத்துச் செல்ல, அப்போது தான் அது ஒரு விருந்தினர் அறை என்பதே ரோஸின் நினைவிற்கு வருவதாய்!

அந்தப் பெரிய அறையில் இப்போது இரட்டைக் கட்டிலுடன் ஜெசிந்தாவிற்காக தனியாக ஒரு கட்டிலும் போடப்பட்டிருந்தது.

இரு பெரிய மரத் தொட்டில்கள் கட்டிலின் இருபுறமும் தெரிந்தன.

குழந்தைகளை அவற்றில் படுக்க வைத்ததும் ரோஸிடம் திரும்பியவன், ''நீ நல்லா ரெஸ்ட் எடு! இவங்க பேரு மரிய புஷ்பம்... நர்ஸ்... குழந்தைகளைப் பாத்துட்டு உன் கூடவே துணையா இருப்பாங்க!'' என்றவன் ஏர்பேகை எடுத்து வந்த பெண்மணியிடம் திரும்பினான்.

''அலமேலு அக்கா... போய் சூடா ஏதாவது குடிக்க எடுத்து வந்து உங்க எஜமானிக்குக் குடுங்க! அவ ரொம்ப டயர்டா இருக்கா!''

அக்கறையுடன் கூறிவிட்டு அவளிடம் வந்தான்.

''உனக்கு ஹெல்ப்புக்கு அலமேலு அக்காவை வெச்சிக்கலாம்! சாப்பாடு எடுத்து வந்து தர, மத்த உதவிகள் செய்ய, குழந்தை துணிகள் தனியா வாஷ் பண்றதெல்லாம் அவங்களை செய்யச் சொல்லியிருக்கேன்!''

JUN 13 2010

...பதிலை எதிர்பாராதவன் போல் வெளியே சென்றவன், அலமேலுவிடம் பேசுவது கேட்டது.

"அவளுக்கு, ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை தனியா ஏதாவது வெரைட்டியா லிக்விடா குடுத்திட்டே இருங்க... ஓட்ஸ் சூப், ஜூஸ், பால் இது மாதிரி! சாப்பாடும் நல்ல நியூட்ரிஷியஸா இருக்கட்டும்... நான் சமையல் காரம்மாகிட்டே சொல்லியிருக்கேன்!"

அவன் குரல் தேய்ந்து மறைந்தது.

அந்த வீட்டையே அவர்களுக்காக பெரிதும் மாற்றி விருந்தான் அவன்.

"இவனுக்கு என்மேல் இவ்வளவு அக்கறையா?" எண்ணிய மறுகணமே உள்ளம் நொந்தது.

இது அவன் குழந்தைகளுக்காக எடுத்துக் கொள்கின்ற கரிசனம் என்பது உடனே புரிவதாய்!

## 17

ஜெசிந்தாவைத் தேடி அவன் ஹாலுக்கு வர, அவர் பூஜையறையில் இருப்பதாக சிகாமணி கூறினார்.

உடனே அங்கு சென்றால், தன் தந்தையின் புகைப் படத்தின் எதிரே நின்று அவர் அழுவதைக் கண்டான் அவன்.

"அண்ணா! சாரிண்ணா" அவருடைய உதடுகள் தொடர்ச்சியாக முணுமுணுத்தன!



சமையல் செய்யும் அன்னம்மா, "மல்லிகா... அழாதீங்க" என்றபடி தேற்றிக் கொண்டிருந்தாள்.

அவரருகில் சென்று "அத்தை..." என்று அழைத்த வனை உடனே திரும்பிப் பார்த்தவர் "தீரேன்..." என்றபடி அவன் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

"அழாதீங்க அத்தை! எனக்கு ஒரு அத்தை இருக்கறதா சின்ன வயசில ஒரு தடவை அம்மா சொன்னாங்க... அப்ப... பாட்டி அவங்களை அடக்கிட்டாங்க... அதுக்கு மேல நானும் எதுவும் கேட்டதில்லை!" மெல்லிய குரலில் கூறினான்.

"ஆமாம்! அண்ணன் தான் எனக்கு எல்லாமே! சின்ன வயசுல அப்பா இறந்ததிலேருந்து நான் அண்ணனோட செல்லம்!

"ஆனா என்னை நம்பி காலேஜிக்கு அனுப்பினவர், நான் ஒரு கிறிஸ்டியனை லவ் பண்ணுவேன்னு நினைக் கலை!

"விஷயம் தெரிஞ்சவுடனே அவர் என்னைக் கூப் பிட்டு கேட்டார். நானும் தைரியமா பென்னட்டைத் தான் கல்யாணம் செஞ்சுப்பேன்னு சொன்னேன்!"

"அம்மாவும் அவருமா சேர்ந்து என்னை அடிச்சிப் போட்டுட்டாங்க! வெளியே போக முடியலை! அப்பதான் என் சித்தப்பா பொண்ணு கற்பகம் எனக்கு உதவி செஞ்சா"

"அவ மூலமாத்தான் ஒரு நாள் பென்னட் எனக்காகக் காத்திட்டிருக்கறதைத் தெரிஞ்சிக்கிட்டேன்... கொஞ்சம் துணி மட்டும் எடுத்துக்கிட்டு பின் வழியா அவ துணை யோடதான் கோயம்புத்தூருக்குப் போனேன்!"

JUN 13 2010

"அப்புறம் நேரா மெட்ராஸுக்குப் போயி கல்யாணம் செஞ்சுக்கிட்டோம்... நான் ஜெசிந்தாவா மாறினேன்...

"அஞ்சு வருஷம் எங்களுக்கு குழந்தை இல்லை! அப்புறம்தான் ரோஸ் பிறந்தா... நான் இங்கிருந்து போனப்ப அண்ணி வயித்துல நீ ஏழு மாசக் கருவா இருந்தே!"

"என்னை என் வீட்டில இருக்கறவங்க முழுசாத் தலை முழுகிட்டாங்க! ஜான் அண்ணனும் மேரி அண்ணியும் தான் எனக்குத் துணையா இருந்தாங்க!

"அப்போதான் அவருக்கு அமெரிக்காவுல வேலை கிடைச்சது... அப்ப ரோஸ் ஆறு மாசக் குழந்தை... அவர் போயி ஒரு வருஷம் கழிச்சி எங்களை அங்கேயே அழைச்சிக்கிட்டாரு!

"பிறந்த வீட்டுத் தொடர்பே எனக்கு அறுந்து போச்சு! ஜான் அண்ணா மூலமா அம்மா, அண்ணா இறந்ததுகூட லேட்டாத்தான் தெரிய வந்தது.

"எந்த முகத்தை வச்சிக்கிட்டு இங்கே வருவேன்! அதான் வரலை! இருபத்தேழு வருஷமா வராத என்னை இன்னிக்கு என் பிறந்த வீட்டுக்கு உங்க மூலமாதான் ஜீஸஸ் கூப்பிட்டிருக்காரு!"

ஒரு கதறலுடன் முகத்தை மூடி அவர் அழ ஆரம்பிக்க அப்போதுதான் பூஜையறையின் வாசலில் உறைந்து நின்றிருந்த ரோஸைக் கவனித்தான் அவன்.

நம்ப முடியாத ஏதோ ஒரு அதிசயம் நிகழ்ந்தது போல் அனைத்தையும் கேட்டு விட்டு கால்கள் வேரோடி நின்றிருந்தான் அவன்.



முகம், வானவில்லாய் பல வர்ண ஜாலங்களை உணர்வுகளாய்க் காட்டின.

ஆனால், ஜெசிந்தா அழுவதைக் கண்டதும், சிறிது தெளிந்தாற்போல் ஓடி வந்து தாயை ஆதரவுடன் அணைத்துக் கொண்டாள்.

* * *

பழைய கதைகள்... பால்ய நினைவுகள்தான் எவ்வளவு சுவாரசியம் மிகுந்தவை என்று அன்று தான் உணர்ந்தான் தீரேன்.

பிறகு இருவருமாகச் சேர்ந்து அவரை சமாதானம் செய்து தேற்றினர்.

அவருக்குதான், தன் பிறந்த வீட்டிற்கே மீண்டும் வந்து சேர்ந்த சந்தோஷமும் நிம்மதியும்!

இந்த எதிர்பாராத நிகழ்வால், உறவுக் கூட்டத்தின் வருகை வேறு ஜெசிந்தாவையும் ரோஸையும் பார்க்க அதிகமாயிற்று!

ஆனால், அவர்களின் வருகை எந்த விதத்திலும் அவளையும் குழந்தைகளையும் பாதிக்காத வண்ணம் பார்த்துக் கொண்டான் அவன்!

தினமும், அருகிலிருந்து குழந்தையை கவனிப்பது... குழந்தைக்கு பால்கரைக்கும் பாட்டில்களை ஸ்டெர்லைஸ் செய்வது... குளிக்க வைப்பது என்று எல்லாவற்றையும் நர்ஸ் மரிய புஷ்பம் பார்த்துக் கொண்டார்.

வேளா வேளைக்கு சாப்பாடு தருவது... பானங்கள் கலந்து கொடுப்பது..... குழந்தை துணிகளை துவைத்து அடுக்குவது... அவளுக்கு பணிவிடைகள் செய்வதெல் லாம் அலமேலுவின் வேலையாயிற்று!

JUN 13 2010

ஒரு லேடி டாக்டர் வந்து வீட்டிற்கே குழந்தைகளை டெஸ்ட் செய்து, சில மருந்துகளை எழுதிக் கொடுத்து விட்டுச் சென்றாள்.

ஜெசிந்தாவிற்கு, எல்லாவற்றையும் மேற்பார்வை இடுவதும் குழந்தைகளை கவனிப்பதுமாய் பொழுது சென்றது.

சிவபார்வதியின் முதல் திவசமும் வர முக்கியமான உறவுகளை அழைத்து திதி செய்தனர்.

எல்லா சடங்குகளிலும், தீரேனுக்கு அருகில் ஒரு உரிமையுள்ள மனைவியாய் நின்று பங்கேற்றாள் அவள்.

* * *

ஏனோ இன்று தீரேனைப் பார்த்தால் பரிதாபமாய்! தாயை இழந்த சிறு கன்றைப் போல் தெரிய, எதிர்த்து வாயாடாமல் அமைதியாகவே எல்லாவற்றையும் செய்தாள்.

பிறகு வந்த பென்னட்டின் முதல் இறந்த நாளிற்கு இருவரும் முறைப்படி எல்லாம் செய்து சர்ச்சிற்குச் சென்று ப்ரேயர் செய்து விட்டு வந்தனர்.

அப்போதுதான் ஒரு நாள் தீரேனை அழைத்தார் அவர்.

''தீரேன்... நான் உன் கூடக் கொஞ்சம் தனியாப் பேசணும்ப்பா! ரோஸ் கழுத்தில் நீ கட்டின தாலி இல்லைன்றது எனக்குத் தெரியும்... நல்லவேளை அவ சாதாரண செயின் போட்டிருந்ததால இந்தக் கேள்வி மத்தவங்க மனசில வரலை!''

''ஒருவேளை கிறிஸ்டியனாச்சேன்னு கூட மரியபுஷ்பம் நினைச்சிருக்கலாம்! ஆனா இதை இப்படியே விட முடியாதே!

''ஒரு நல்ல நாள் பாக்கச் சொல்லி நம்ம குலதெய்வம் கோவில்லே வெச்சி தாலி கட்டிடணும்ப்பா!'' தவிப்புடன் கூறினார்.

''ஓ... எனக்குக் கூட அது மறந்து போச்சு! அந்தத் தாலி இப்ப அம்மாவோட பீரோவிலதான் இருக்கு அத்தை!



நல்லவேளை நீங்களாவது அதுக்கு மதிப்பு குடுக்கணும்னு நினைக்கறீங்களே?'' விரக்தியுடன் நிறுத்தினான்.

''நானும் பிறப்பாலயும் வளர்ப்பாலயும் ஒரு இந்துப் பொண்ணுதானே! இந்த சடங்கு சம்பிரதாயம் எல்லாம் எனக்கும் தெரியுமே! கல்யாணத்துக்கு அப்புறம் தானே ஒரு கிறித்துவரா மாறினேன்!''

''ஆனா நீ சத்யன் பென்னட், ப்ரயன்னா பார்கவின்னப்ப ஏதோ ஒரு மின்னல் மனசுல அன்னிக்கு வந்தது. உடனே எத்தனையோ பேர் அந்தப் பேரில இருப்பாங்களேன்னு விட்டுட்டேன்.

''அதோட நீ அப்படியே உங்க அம்மா வழித் தாத்தா ஜாடையில இருக்கியா... எனக்கு சட்டுன்னு அடையாளம் புரியலை!''

''ரோஸும்தான்! அவ அப்படியே பென்னட் அங்கிள் மாதிரி இருக்காளா... உங்களை மாதிரி இருந்திருந்தா ஒருவேளை எங்கம்மா கண்டு பிடிச்சிருப்பாங்களோ என்னவோ!''

''ஆனா, எங்க அப்பா விரும்பின மாதிரி அவங்க சொந்தத் தங்கையோட பெண்ணே இந்த வீட்டுக்கு மருமகளா வந்திட்டா!''

''ஆனா, என்னை சாகற வரைக்கும் அம்மாவும் அண்ணனும் மன்னிக்கவே இல்லையே!'' வருத்தத்துடன் கண்கலங்கினார் ஜெசிந்தா.

இருவரும் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டபடியே வந்த ரோஸுக்கு, சிறு ஊடலாய்!

இருவரும் தன்னை ஒதுக்கி விட்டு எல்லா விஷயங்களையும் கலந்தாலோசிப்பதும், பகிர்ந்து கொள்வதும், அவளுக்குள் சிறு கோபத்தையே வரவழைத்தன.

''அம்மா! அங்கே குழந்தை அழறான். இங்கே வந்து கதை பேசிட்டிருக்கீங்க... வாங்க'' சலுகையாக அழைத்தாள்.

JUN 13 2010

"ரோஸ்! அத்தை இப்ப மனசொடிஞ்சு போயிருக்காங்க... அவங்களுக்கு ஆறுதலாய் பேசறதை விட்டுட்டு கோபப்படறே! பாவம் அவங்க! குழந்தையைப் பாத்துக்கத்தான் புஷ்பம் இருக்காங்களே..... அப்புறம் என்ன?"

"நீங்க போய் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கங்க அத்தை! நான் குழந்தையப் பாத்துக்கறேன்" என்றபடி அவளுடைய அறைக்கு வந்தான்.

"புஷ்பம்... என் மடியில பார்கவியைப் படுக்க வைங்க" என்றபடி படுக்கையில் அமர்ந்தான்.

பிறகு ஜெசிந்தா 'பென்'னைத் தூக்கிக் கொள்ள சிறிது நேரம் குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருந்தான் அவன்.

இங்கிதத்துடன் புஷ்பம் வெளியே செல்ல ஜெசிந்தாவும் குழந்தையுடன் ஹாலுக்குச் சென்றாள்.

அவன் வசதிக்கென்று அந்த அறையிலேயே ஒரு டி.வி. இருந்ததால் முகத்தை சுருக்கியபடி ரோஸ் புரோகிராம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று அவனுடைய ஆழ்ந்த குரல் அவளை உசுப்பியது!

"குட்டி பார்கவி! நீ அம்மா மாதிரியா? ப்ளீஸ் பாட்டி மாதிரியே இருடா செல்லம்! அப்பதான் நம்ம ஹஸ்பெண்ட்... அப்படின்னு பாசமா இருப்பே...

"கணவரைக் கண்டாலே எரிஞ்சு விழறது... சண்டை போடறது... எதுக்கெடுத்தாலும் தப்பு கண்டு பிடிக்கறதுன்னு உங்கம்மாவை ஃபாலோ பண்ணாதே என்ன?"

கேலியாகப் பேச குழந்தை அரை குறை உறக்கத்தில் 'ங்கா...' என்றது.



உடனே சுள்ளென்று பொங்கிய கோபத்துடன், "குழந்தைங்க கிட்ட போய் இப்படித்தான் பேசுவாங்களா? ஓ... ஜீஸஸ்! அவளுக்கு என்ன புரியும்?" அலுப்புடன் சீறினாள்.

"குழந்தைக்கு புரியாதுன்னு, எனக்கு நல்லாத் தெரியுமே! ஆனா புரியறவங்களுக்குக் கேக்கட்டுமேன்னு தான் அப்பா ஜாடையா சொன்னேன்... இல்லடா?" பார்கவியைக் கொஞ்சுவது போல் கேட்டான்.

"ஹும்... ரொம்ப ஆசைக் கணவன் மாதிரி எல்லார் முன்னாடியும் நடிக்கறது? ஆரம்பத்துலருந்து கடைசி வரைக்கும் எல்லாமே நடிப்பாவே இருக்கு.. சே!"

ஏளனமாக அவள் உரைத்ததும் கண்கள் சிவக்க சட்டென்று பொங்கி விட்டான் அவன்.

"ஏய்! நான் நடிக்கலை! ஆரம்பத்திலிருந்து இது நடிப்பு... நடிப்புன்னு நீதான் உருப் போட்டுட்டே இருந்தே. உண்மையான மனைவியா ஒரு நொடி உணர்ந்திருந்தா அந்தத் தாலியைக் கழட்டித் தந்திருப்பியா? என்னைக் குத்தம் சொல்லாதே!"

அடிக்குரலில் பெரும் கோபத்தைக் காட்டுவது எப்படி என்பது, இன்று புரிந்தது அவளுக்கு!

அவன் கோபம் புரிந்து அவள் அமைதியாகிவிட, 'மரிய புஷ்பம்' என்று வேகமாக அழைத்தான்.

உடனே அவள் உள்ளே வர, "குழந்தைய எடுத்து தொட்டியில படுக்க வைங்க... எனக்கு கொஞ்சம் வேலையிருக்கு" என்றான்.

"என்னைக் கூப்பிட்டு அதைச் செய்யச் சொன்னால் என்னவாம்?" ஊடலுடன் சிணுங்கியது அவள் மனது!

JUN 13 2010

பிறகு அவன் வெளியேறிய உடனே, ஏதோ ஒரு வெற்றிடம் வருவதைப் போல!

ஒரு புறம் மென்பனிக் காற்றின் குளிராய்... மறு பக்கம் எரிமலைக் குழம்பின் தகிப்பாய் சஞ்சலத்துடன் தவித்தது மனது!

## 18

அன்றிரவே, ஜெசிந்தா இது பற்றி அவளிடம் பேசினார்.

சமீப காலமாக இருவரையுமே கவனித்தபடி இருந்தவருக்கு கவலையாய்!

"ரோஸ்! நீ பண்றது ரொம்பத் தப்பு! ரெண்டு பேரும் சேர்ந்து முடிவு பண்ணி நடிச்சீங்க! அப்புறம் ரெண்டு பேருமே தான் இணைஞ்சீங்க! இப்ப உன்னையும் குழந்தைகளையும் அழைச்சிட்டு வந்து மாப்பிள்ளை இவ்வளவு ஆசையா செய்யறப்ப, ஏன் அவர்கிட்டருந்து வீம்பா விலகியே இருக்கே!

"பெண்கள்னா பொறுமை வேணும்! இப்போ, தீரேன் என்னோட அண்ணன் பையன் மட்டுமில்லை... நான் பெறாத ஒரு மகனும் கூட! இப்பதான் என் பிறந்த வீட்டில நான் கொஞ்சம் நிம்மதியா இருக்கேன்.

"அவர் கஷ்டப்படறதை என்னால சகிச்சிக்க முடியாது... இப்படி ஒரு கணவர் கிடைக்கறது ரொம்ப அபூர்வம்... அதனால ஒரு மனைவியா அவருக்கு எப்படி இருக்கணுமோ அந்த மாதிரி நடக்கப் பழகிக்கடா!'' அன்புடன் அறிவுறுத்தினார்.

அவரிடம் மறுக்க முடியாமல் சரியென தலையசைத்தவள்,



''ஏம்மா... அப்பா எவ்வளவு அற்புதமான ஒரு மனுஷர்! அவரை விட உயர்ந்தவர் யாருமே இருக்க முடியாது... தெரியுமா?'' சலுகையுடன் கேட்டாள்.

''ஆமாம்... ஆனா இதையே பார்கவி உன் கிட்ட ஒரு நாள் கேப்பா... அப்ப புரியும் உனக்கு!''

சுட்டு விரலை உயர்த்தி எச்சரித்து விட்டு தொட்டிலில் சிணுங்கும் குழந்தையை எடுத்துத் தோளில் தட்டி உறங்க வைக்க ஆரம்பித்தார் ஜெசிந்தா!

* * *

அடுத்த வாரமே குல தெய்வம் கோவிலுக்குச் சென்று தாலி கட்டிய பிறகு குழந்தைக்கு பெயர் சூட்டும் விழாவும் ஏற்பாடு செய்யலாமென்று முடிவு செய்தனர்.

மூன்றாவது மாதம் என்பதால் குழந்தைகளை அய்யனார் கோவிலுக்கு எடுத்துச் செல்லலாமென்று ஜெசிந்தா கூறினார்.

அப்போதுதான் காத்திருந்தாற்போல் அந்த உரிமைப் போரை ஆரம்பித்தாள் ரோஸ்!

''அம்மா! இதுக்கு நான் ஒத்துக்கணும்னா, என் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் செய்ய அவரும் ஒத்துக்கணும்!'' வீம்புடன் கூறினாள்.

உடனே ஜெசிந்தாவின் குரல் உயர்ந்தது.

''ரோஸ்... அது வேண்டாம்! உன்னை எப்படி உன் அப்பா கிறிஸ்துவருங்கறதால ஒரு கிறிஸ்டியனாவே வளர்க்க நான் ஒத்துக்கிட்டேனோ, அதே மாதிரி தீரேன் ஒரு இந்துங்கறதால அவர் முறைப்படியே குழந்தைகளை வளர்க்க நீயும் ஒத்துக்கணும். இது என் விருப்பம்!

''என் அண்ணனை விட்டுப் பிரிஞ்சி போயி அவருக்கும் எங்கம்மாவுக்கும் நான் குடுத்த மன உளைச்சலுக்கான ப்ராயச்சித்தம் இது?



JUN 13 2010

"எங்கண்ணா விருப்பப்படி அவர் பேரப்பசங்க ஒரு இந்துவாவே வளரட்டுமே.. உங்கப்பா விருப்பத்துக்கு மதிப்பு குடுத்து நான் மதம் மாறலை. உன்னை ரோஸலினா வளர்க்கலை?"

"விட்டுக் கொடுத்தால் தான் வாழ்க்கைடா! உன்னை நான் மாறச் சொல்லலை... பிள்ளைங்களை மாத்த வேண்டாம்னுதான் சொல்றேன்."

உடனே குறுக்கிட்டது தீரேனின் குரல்!

"இல்லத்தை... அவ விருப்பப்படி பார்கவிக்கு ஞானஸ்நானம் செஞ்சுடலாம்! சத்யனுக்கு நம்ம முறைப்படி எல்லாம் செய்வோம்!" என்றான்.

"அதென்ன நம்ம முறைப்படி...? ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்துட்டீங்களா? என்னவோ செய்ங்க... என் குழந்தைகளைப் பத்தி முடிவெடுக்க இந்த வீட்டில எனக்கே உரிமை இல்லை... இதிலே பெரிசா மனைவிங்கற பட்டம் வேற!"

சினத்துடன் கூறிவிட்டு உள்ளே சென்று சப்தமாகக் கதவை சாத்திக் கொண்டாள் அவள்.

* * *

மறுதினமே, அவளுக்கு அரக்கு நிறத்தில் ஜரிகைக் கரைகள் ஓடிய திருமணப் புடவையும், அவனுக்கு பட்டு வேட்டி சட்டையையும் எடுத்து வந்து விட்டான் அவன்.

தன் தாயின் நகைகள் அடங்கிய இரும்புப் பெட்டியின் சாவியையும் ஜெசிந்தாவிடம் கொடுத்து வேண்டிய நகைகளை எடுத்துக் கொள்ளச் சொன்னான்.

அத்துடன் ஜெசிந்தாவிற்குப் பட்டுப் புடவையும், குழந்தைகளுக்கு உடையும் சேர்ந்து வந்தன.



எல்லாவற்றையும் எடுத்து அவர் தன் மகளிடம் காட்ட... அவளோ, அலட்சியமாகத் திரும்பிக் கொண்டாள்.

அவளைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று தீரேன் கூறியிருந்ததால் இந்தப் பெண்ணிற்கு நல்ல புத்தியைக் கொடு இறைவா என்று வேண்டிக் கொண்டார் அவர்.

* * *

மறுவாரம்... அவர்களுடைய திருமண நாளும் வந்துவிட, அவர்களுடன் சிகாமணி மட்டும் துணையாக வர மூவரும் அலமேலுவை மட்டும் அழைத்துக் கொண்டு கிளம்பினர்.

குழந்தை பிறந்து மேலும் மெருகேறியிருந்த ரோஸ், அழகிய அரக்குப் பட்டுச் சேலையில் ஒரு கருவறைச் சிற்பமாய் தயாராகி வந்தாள்.

அவனும் பட்டு வேட்டி சட்டையணிந்து வர ரோஸிற்குத்தான், பழைய ஞாபகங்கள் பேரலையாய்!

அவனுடன் செம்புலம் பெயர்ந்த நீர்போல் இணைந்த தருணங்களை ஏனோ மறக்க முடியவில்லை!

இருவரையும் மணக்கோலத்தில் கண்ட ஜெசிந்தா ஆனந்தத்தில் அழுதே விட்டார்.

வெகு காலம் கழித்து தங்கள் குலதெய்வத்தை தரிசிக்கப் போகின்ற ஆனந்தமும் அதில்!

கோவிலுக்கு, குழந்தைகளுடன் காரில் சென்று இறங்கியபோது, கோவில் பூசாரி எல்லாவற்றையும் தயாராக வைத்திருக்க, ஹோமம் வளர்க்க புரோகிதரும் வந்திருந்தார்.

அய்யனார், செல்லியம்மன் சாமிக்கு முன்னால் இருவரும் மாலை மாற்றிக் கொள்ள, முறைப்படி மஞ்சள்

JUN 13 2010

கயிற்றில் கோர்த்த தாலியை சப்தபதி மந்திரங்கள் ஒத மங்கல நாணாக அணிவித்தான் தீரேன்.

தீரேனுடைய விரல்கள் கழுத்தின் பின்புறம் மெல்லத் தீண்டியதும், உடலும் உள்ளமும் புரியாத ஒரு உணர்வில் சிலிர்க்க விதிர்த்துப் போனாள் ரோஸ்!

அக்னியை வலம் வரும்போது அவனைப் பின் தொடர்ந்து ஏதோ ஒரு மந்திரத்திற்குக் கட்டுண்டவளாய் நடக்க, மனப்பூட்டினைத் திறக்கும் சாவியாய் அவன் பார்வையும் தொடுகையும் வேறு பலமாய் அவளை இம்சை செய்தன.

விரல்களின் பிணைப்பும், அங்கவஸ்திரம், புடவை முந்தானையின் முடிச்சும், அவர்களின் இணைவை உணர்த்தின.

நேச மலர்கள் மேலெழும்பி மாலையாய் அவள் தோளில் கிடப்பது போல்!

திடீரென்று பரவிய நாணத்தில் முகம் சிவந்து இதயம் தடதடக்க மயிலிறகின் வருடலாய்... அவளுக்குள் ஒரு மாயத் தவிப்பு!

நிசப்த ஞாபகங்களில்... இன்ப ரகசியங்கள் பேசிய தருணங்களின் வரவும்!

"என்ன... முகமெல்லாம் சிவந்து போச்சு... யூ ஆர் சோ பியூட்டிஃபுல் தென மை ஏஞ்சல்!" ரசனையுடன் அவள் காதருகில் மொழிந்தான் தீரேன்!

"ஏஞ்சல்..." அவள் தந்தை மட்டுமே அவளை அழைத்த ஒரு செல்லப் பெயர்... அவன் உதடுகளிலும் உல்லாசமாய்க் கசிய, அதுவரை இருந்த இதமும், கிறக்கமும் உடனே தொலைந்து போயின.

"என் பேரு ரோஸ்..." வீம்புடன் உ... எனக்கு ஏஞ்சல்

"நோ! இனிமே... இன்னியிலேருந்து நீ எனக்கு ஏஞ்சல் தான்...!" அவனும் அதே குரலில் முடித்து விட்டான்.

"இப்போ இங்கே எல்லாரும் நம்மையே பாத்திட்டிருக்காங்க. இருங்க... உங்களை அப்புறமா வச்சிக்கிறேன்."

அடிக்குரலில் முணுமுணுத்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"இல்லையே... இப்பவே வெச்சிக்கலாம். எனக்கொண்ணும் அப்ஜெக்ஷன் இல்லை!" குறும்புடன் வந்தது அவன் குரல்!

அவனுடைய சீண்டலும் கேலியும் அவளுக்குள் சிறு ஊடலாய்ப் பரவின.

"ச்சீய்..." அவள் வெறுப்புடன் திரும்ப, "இப்படி ரொமான்டிக்கா 'ச்சீ' யெல்லாம் சொல்லாதே... இது கோவில்!" மீண்டும் ரசனையுடன் அவளைச் சீண்டினான் தீரேன்.

"இது என் அம்மாவுக்காக... அவங்க ஆத்ம திருப்திக்காக..." சுள்ளென்று அவள் உரைக்க, "இதையேதான் நானும் அன்னிக்கு செஞ்சேன்... அதுவும் சாகப் போற என் அம்மாவுக்காக... அவங்க ஆத்ம திருப்திக்காக கடைசி ஆசைக்காக! அப்ப அதை நடிப்பு தப்புன்னு சொன்னே!" வகையாக அவளை மடக்கினான்.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அமர்ந்திருந்தவளுக்குள், எரிமலையின் சீற்றமாய் உணர்வுகள் பொங்கத் தொடங்கின.

## 19

காரில் திரும்பி வரும்போது இருவரையும் நடுவில் அமர வைத்து விட்டு பின் சீட்டில் குழந்தைகளுடன் ஜெசிந்தாவும் அலமேலுவும் அமர்ந்து கொண்டனர்.

முன்புறம் இருந்த சிகாமணி டேப்பைப் போட்டு விட மெல்லிய பாடல் வரிகள் இனிமையாய் கசிந்தன.

ரோஸ்தான் எதையும் ரசிக்கும் மனநிலையில் இல்லை.

திடீரென்று அவளருகில் நெருங்கி அமர்ந்தவனுடைய குரல் அவள் செவியருகில் சீறலாய்!

"தொடத் தொட மலர்ந்ததென்ன....
பூவே... தொட்டவனை மறந்ததென்ன...
பார்வைகள் புதிதா... ஸ்பரிசங்கள் புதிதா...
மழை வர பூமி மறுப்பதென்ன..!"

ஸ்பீக்கரில் ஒலித்த வரிகளை மென் குரலில் அவன் பாட... அவளுக்குத்தான் பெரும் தவிப்பும் தர்ம சங்கடமுமாய்!

முகம் கோபத்தில் சிவக்க, அவனிடமிருந்து விலகும் வழி தெரியாது, மௌனமாக அமர்ந்திருந்தாள் அவள்.

* * *

வீட்டிற்குச் சென்றதுமே, சுமங்கலிகள் ஆரத்தி எடுத்து வரவேற்க, உடனே தன் அறைக்கு உடை மாற்றச் சென்றவளைத் தடுத்தாள் ஜெசிந்தா.

''முதல்லே போய் பூஜையறை... நமஸ்காரம் செஞ்சிடுங்க! அப்புறம்...

''ரோஸ்... ஒரு அஞ்சு நிமிஷம் தீரேனோடப் பேசிப் பேசிட்டிருடா! நீங்க பிரிஞ்சி ஒரு வருஷம் ஆயிடுச்சே!

''புருஷனோட விருப்பங்களைப் புரிஞ்சி நடந்துக்கறவதான் நல்ல பொண்ணு போ!'' என்று, அவளை அவனுடைய அறைக்குள் தள்ளி கதவை மூடி விட்டு வந்தார்.

இரவு நேரம் தவிர மற்ற நேரங்களில் அவனுடைய அறைக் கதவை அவன் தாளிடுவதில்லை!

இன்றும் அதுபோல் சாற்றிவிட்டு லுங்கியை எடுத்தவனை கதவின் ஓசை ஈர்க்கத் திரும்பினால் அங்கு ரோஸ் நின்றிருந்தாள்.

உடலெங்கும் பரவிய ஆண்மை சிலிர்ப்புடன் மெதுவாக முறுவலித்தபடி அவளருகில் சென்றான் அவன்.

''வா ரோஸ்... ஏன் இங்கேயே நிக்கறே?'' தயங்கி நின்றவளைக் கேட்டபோது, அவளிடம் அசைவில்லை.

''இவ்வளவு தூரம் வந்தப்புறம் ஏன் தயக்கம்?''

உல்லாசமாகக் கூறியபடி அவளை இழுத்து அணைத்தவன், அவ்வளவு வேகமாகத் தள்ளி விட்டு அவள் விலகுவாளென்று எதிர்பார்க்கவில்லை.

மென்மையாக அணைத்தவனது மார்பில் கை வைத்து பின்புறம் தள்ளி, ஒரு வித அசுர வேகத்துடன் அவள் விடுபட, அவனும் விடவில்லை!

அதே வேகத்தில் இழுத்து அணைத்து, அவள் இதழ்களில் தன் முத்திரையை ஆழப் பதித்து விட்டான்.

''சே...'' என்றபடி விலகியவள், ''இது பார்பேரிஸம்னு உங்களுக்குத் தெரியலை... நீங்க படிச்சவர் தானே?'' சுடும் விழிகளுடன் கேட்டாள்.

உடனே அவனுக்குள்ளும் கடும் சீற்றம் முகிழ்ப்பதாய்!

''இது காட்டுமிராண்டித்தனம் இல்லை. ஒரு கணவன், தன் மனைவி கிட்டே இயல்பா நடந்துக்கற ஒரு சின்ன ஒன்றுதல் இது! அப்படின்னா ஒருவருக்கொருவர் நன்றாகப் பொருந்தி நெருங்குதல்னு அர்த்தம்!

''எனக்கு இதெல்லாம் பிடிக்காது.''

உடனே தலையைப் பின் தள்ளிச் சிரித்தவன்,

''கலித்தொகையில ஒரு பாட்டு வரும்... எனக்கு தமிழ் சங்க இலக்கியங்கள்லே ஆர்வம் அதிகம்... நிறைய கலெக்ட் பண்ணி வெச்சிருக்கேன்...''

''என்னால மறக்க முடியாத வரிகள் அவை! உன்னை மாதிரியேதான் அந்தத் தலைவியும்! தலைவனோடு கூடித் தழுவ மறுப்பா... அதுக்கு அவன் என்ன சொல்வான் தெரியுமா?

''வேங்கையின் முற்றிய மலரின் நன்மையைக் கொண்ட... சுணங்குகள் அழகு செய்து கொண்டிருக்கும் பூண்கள் பூண்ட... நின் மார்பினைக் கொண்டு பொய்யாக வேனும் என்னைத் தழுவித்தான் சென்றாலென்ன? முத்தின் அழகு தவழும் முறுவலாளே! உன் பசலை நோயெல்லாம் அப்படியே என்னில் ஒற்றி முழுதும் எடுத்து எறிந்து விடலாமே அப்படின்னு கேப்பான்.

''எவ்வளவு அழகான மயக்கம் தர்ற மந்திரச் சொற்கள் தெரியுமா அது? இப்ப அதே நிலையிலதான் நானும் இருக் கேன். இன்னிக்கு நம்ம கல்யாண நாள்... தெரியுமா?''



கண்கள் கனிய மெல்லிய சிருங்காரத்துடன் இ... கேட்க, பதறிப் போனாள் அவள்.

பிறருக்காக, குழந்தைகளுக்காக, அவளிடம் இளை யும் அவன் நிலை வெறுப்பாய்....

''அதெல்லாம் எனக்குத் தெரியாது... பிடிக்கவும் பிடிக்காது! அம்மா சொன்னாங்கன்னு தான் இங்கே வந்தேன்... நான் போறேன்!'' என்றபடிக் கதவைத் திறந்து அவள் வெளியேற, அவனுடைய முகம் கறுத்து இறு கியது.

அன்றிலிருந்து தீரேனிடமிருந்து மேலும் ஒதுங்க ஆரம்பித்தாள் அவள்.

அவனுடன் தனிமையில் கழிக்கின்ற சந்தர்ப்பங்களை யாருடைய துணையுடனாவது தவிர்ப்பதும் வழக்கமா யிற்று!

அவனுக்கும், புது புராஜெக்ட், பேப்பர் பேக்டரி வேலைகள் எனப் பொழுது பிசியாகக் கழிந்தது.

ஆனாலும், தினமும் காலையிலும் இரவிலும் ஒரு மணி நேரமாவது குழந்தைகளுடன் நேரத்தை செலவிடு வதை, வழக்கமாகக் கொண்டிருந்தான்.

* * *

ஒரு நாள் காலையில் தோட்டத்தில் நடக்கலாமென்று அவள் அறையை விட்டு வெளியே வந்தபோதுதான், அவன் யாருடனோ ஹாலில் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

தயங்கி நின்றவளின் காதுகளில், அவனுடைய ஆழ்ந்த குரல் ஸ்பஷ்டமாகக் கேட்டது.

"மணியக்காரய்யா! உங்க பையன் என்ன விரும்பறானோ அதை செஞ்சு குடுங்க... அந்தக் கோர்ஸை படிக்க விடுங்க! நீங்க சொல்ற மாதிரி, அவன் டாக்டருக்குத்தான் படிக்கணும்னு உங்க விருப்பத்தை அவன் மேலத் திணிக்காதீங்க!"

"நீங்க டாக்டருக்குப் படிக்கணும்னு ஆசைப்பட்டப்ப, பண வசதியில்லாம அப்பா டிகிரி மட்டுமே படிக்க வச்சி விவசாயத்தில் இறக்கிட்டதா இப்பதானே வருத்தப்பட்டீங்க!

"உங்கப்பா உங்க விருப்பத்தை மதிச்சி நடக்கலைன்ற கோபம், இந்த வயசலயும் உங்களுக்கு ஆதங்கமா இருக்கே! அதே மாதிரித்தானே பிற்காலத்துல உங்க பையனுக்கும் இருக்கும்!

"அவன் விருப்பப்படி எந்தத் துறையைத் தேர்ந்தெடுக்கிறானோ அதிலேயே அவனைப் போக அனுமதிங்க!

"நமக்குப் பிடிச்ச படிப்பு, தொழில், வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தாத்தான், அதிலே முழு மனசோட ஆழ்ந்து ஈடுபட்டு வெற்றி பெற முடியும்!" என்றவன் மகனிடம் திரும்பினான்.

"நீ எந்தத் துறையில சேர ஆசைப்படறேப்பா?" என்று கேட்டான்.

"சார்! நான் மிலிட்டரியிலே சேர்ந்து, 'ஆர்மி கமாண்டோவா பணிபுரியணும்'னு விரும்பறேன் சார்... அப்பா விட மாட்டேங்கிறாங்க!" வருத்தத்துடன் கூறினான்.

உடனே அவரிடம் திரும்பியவன், "இது எவ்வளவு பெரிய விஷயம் அய்யா! சமீபத்துல மும்பை அட்டாக்குல



பாத்தீங்கள்லே... எத்தனை கமாண்டோஸ் போரா... மக்களைக் காப்பாத்தினாங்க!"

"இதுக்கு தனி மனசு வேணும்! முகமே அறியாத சக மனுஷங்களுக்குப் பாதுகாப்பா எல்லையில இருந்தோ, இது மாதிரி நேரங்கள்லேயோ சுயநலமில்லாம மத்தவங்களோட பாதுகாப்புக்காக உயிரைக் குடுத்து போராடணுங்கிறதோ எல்லாருக்கும் சாத்தியமில்லை!"

"நானே ஆசைப்பட்டு என்னால முடியாமப் போன ஒரு விஷயம் அது! என் ஆசையை அப்பாகிட்ட சொல்றதுக்கு முன்னாடி நான் + 2 படிக்கும்போதே ஹார்ட் அட்டாக்கில் அப்பா இறந்துட்டாங்க!"

"அம்மாவைத் தனியா விட்டுட்டு, பேப்பர் பேக்டரி, அப்பாவோட கன்ஸ்ட்ரக்ஷன் தொழில் எல்லாத்தையும் தலை முழுகிட்டுப் போக என்னால முடியலை!"

"அதான் சிவில் இன்ஜினியரிங் முடிச்சி தொழிலுக்கு வந்துட்டேன்... இப்பவும் மனசோரத்துல நிறைவேறாத ஆசையா அது ஒளிஞ்சிட்டுதான் இருக்கு... எனக்கு மட்டும் ஒரு தம்பி இருந்திருந்தா நிச்சயம் நான் இந்நேரம் கமாண்டோவாகி இருப்பேன்..."

அவன் முடிப்பதற்குள் அந்தப் பையன் குறுக்கிட்டு... "சார்... எனக்கு ரெண்டு தம்பிங்க இருக்காங்க... அப்பா மனசை நீங்கதான் மாத்தணும்!" வேண்டுகோள் விடுத்தான்.

"சரிப்பா! உங்க கிட்ட யோசனை கேட்டா நல்லதா சொல்லுவீங்கன்னுதான் வந்தேன்... நீங்களும் அவன் பக்கம்தான் பேசறீங்க! அப்புறம் இறைவன் விட்ட வழி!" என்றபடி எழுந்தார் அந்த மனிதர்.

JUN 13 2010

"அய்யா! உங்க மகன் ஒரு ராணுவ வீரன்னு சொல்றது எவ்வளவு பெருமை? என்னோட மகன் மட்டும் எதிர்காலத்துல ஒரு கமாண்டோவாகணும்னு விரும்பினா, ரொம்ப சந்தோஷமா அனுப்பி வைப்பேன்... என்னா அதைவிட உயர்ந்த பணி உலகத்துல எதுவுமே இல்லைன்றது என் கருத்து!"

கம்பீரமாக முடித்தவனது குரல் செவியில் விழுந்து அவள் இதயம் நுழைந்தது!

எப்போதோ சிறு வயதில் தன் தந்தையிடம் இதே வார்த்தைகளை அவன் கேட்ட ஞாபகம்!

தனக்கு ஒரு மகன் இருந்தால் நிச்சயமாக அவனை இந்திய ராணுவத்திற்கு அனுப்பி இருப்பேன் என்று, அவனுடைய பள்ளி நாட்களில் அவர் கூறக் கேட்டிருக்கிறான்.

தீரேனுடைய வார்த்தைகள் அவளை அப்படியே நெகிழச் செய்து சரித்து வீழ்த்தின.

அவனைப் பற்றிய முதல் நல்வித்து மனதில் ஆழமாய் பதிந்தது.

எவ்வளவு தேசப்பற்றும் சமூக அக்கறையும் இருந்திருந்தால் அவன் இப்படிக் கூறியிருப்பான் என்ற எண்ணம் பிரமிப்பாய்!

எதிர்காலத்தில் அவன் விரும்பினால் நிச்சயமாக குட்டி பெண்ணட்டை தேசிய பாதுகாப்புப் படைத் தளபதியாக்க வேண்டும்... மனம் உறுதி பூண்டது!

ப்ரியன்னாவிற்கு திடீரென்று உடல்நலக் குறைவு ஏற்பட்டதால், ஐந்தாம் மாதம் பெயர் சூட்டு விழா நடத்தலாமென்று முடிவு செய்தனர்.



## 20

காலம் சிறகு விரித்து விரைய, ஒரு நாள் குழந்தையைக் காணாமல் எழுந்து தேடினால் பார்கவியைத் தன் அறைக்கு தீரேன் அழைத்துச் சென்றிருப்பதாக, ஜெசிந்தா கூறினார்.

அவள் இப்போது முகம் பார்த்து சிரிக்கத் துவங்கி, கவிழத் தொடங்கி இருந்தாள்.

மாலையில் செரிலாக் ஊட்ட வேண்டும் என்பதால் அவளைத் தேடிச் சென்றாள்.

அன்று, சீக்கிரமே வந்திருந்த தீரேன் ரோஸின் உறக்கத்தைக் கலைக்க மனமின்றி தன் அறைக்குத் தூக்கிச் சென்றிருந்தான்.

மனம் முரசு கொட்ட அவன் அறையின் உள்ளே நுழைந்தால், குழந்தை அவன் மார்பில் குப்புறப் படுத்திருக்க, இரு பிஞ்சுக் கைகளையும் தன் கன்னத்தில் வைத்து அழுத்தி கொஞ்சிக் கொண்டிருந்தான் அவன்!

"நீங்க என் அம்மாவா? பார்கவிச் செல்லம்... என்னை நல்லாப் பாத்துப்பீங்களா? உங்களுக்கு என்ன வேணும்... கலர் கலரா வானவில் வேணுமா... வானத்து நட்சத்திரம் வேணுமா... இல்லை பார்கவி மாதிரியே குட்டியா அழகா வானத்துல தெரியற நிலவு வேணுமா?"

குழந்தையின் மூக்கோடு மூக்கு உரசியபடி கொஞ்சியபடி அவன் கேட்டது பார்க்கவே வெகு அழகாய்!

JUN 13 2010

அவர்களையே ரசித்தபடி நின்றிருந்தவளை, அப்போது தான் கவனித்தான் தீரேன்!

"குட்டிம்மா! உங்கம்மா வந்தாச்சு... இனிமே நான் உன்னைக் கொஞ்சினா பாவம் அவங்க ஜெலஸ் ஆயிடுவாங்க...... அதனால உன்னை அப்புறம் கவனிச்சிக்கிறேன்!"

குறும்புடன் கூறியபடி அவளைப் பார்த்து ஒற்றைக் கண் சிமிட்டினான்.

"ப்ச்..." என்றபடி வந்து குழந்தையை அவள் தூக்க முயன்றாள்.

"ஏஞ்சல்! அவ கொஞ்ச நேரம் என் கூடத் தான் இருக்கட்டுமே... இப்படியே அவளுக்கு ஊட்டி விடேன்...

"ப்ளீஸ்!"

அவள் டீப்பாயில் வைத்த செரிலாக் கிண்ணத்தை கவனித்து விட்டுக் கூறினான்.

அவளுக்கும், அவன் விருப்பமும் ஆசையும் புரிய, அருகிலிருந்த ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தாள்.

பார்கவியை அவன் மடியில் வைத்துக் கொள்ள, ஸ்பூனினால் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து ஊட்டி விட ஆரம்பித்தாள்.

அவனுடன் கிடைத்த தனிமை வெகு நாட்களுக்குப் பிறகுதான் என்பதால், அவள் விழிகள் குறுஞ் சிரிப்பிலும் ஏக்கத்திலும் பளபளத்தன.

திடீரென்று, "இது மாதிரி ஊட்டி விடறதெல்லாம் இவளுக்கு மட்டும்தானா? அவங்கப்பாவுக்கெல்லாம் கிடையாதா?" குறுகுறுப்புடன் வினவினான்.



"கொஞ்சம் இடம் குடுத்தா மட... துன்னு அம்மா சொல்வாங்க... அது மாதிரி இரு... போலியாகச் சலித்தாள் அவள்!

"ம்... அதுக்கெல்லாம் அதிர்ஷ்டம் செஞ்சிருக்கணும்... இல்லை பார்கவி? உங்கம்மாவோட கடைக்கண் பார்வை கிடைக்குமான்னு நானே காத்திட்டிருக்கேன்..."

அவன் முடிப்பதற்குள், "இவளுக்குப் பேசத் தெரிஞ்சிருந்தா அவ்வளவுதான்... குழந்தைன்னு தானே இவளை நடுவில வச்சி என்னை வம்பிழுக்கறீங்க!"

சலுகையாய் சிணுங்கினாள்.

"இவளுக்கு மட்டும் பேசறதெல்லாம் புரிஞ்சு, பதில் சொல்றா மாதிரி இருந்தா, என்னை ஆளை விடுங்கப்பா... நீங்களும் அம்மாவுமா பேசி ஒரு முடிவுக்கு வாங்கன்னு எழுந்து ஓடியிருப்பா!" குலுங்கிச் சிரித்தான்.

அவனுடைய இயல்பான... ஆழ் மனதிலிருந்து மேலெழும்பி வந்த அந்த உயிர்ப்பான புன்னகை, அவள் இதயத்தில் ஆழப் புகுந்து தைப்பதாய்!

முதன் முதலாக அவன் இப்படி முழு மனதுடன் ரசித்துச் சிரிப்பதை வியப்புடன் அவள் ரசிக்க, அதை அவன் உடனே கண்டு கொண்டான்.

"என்ன... அப்படிப் பார்க்கறே? அவ்வளவு ஆசையிருந்தா ஏன் இப்படி விலகி விலகிப் போறே?" ஊடலுடன் கேட்டான்.

அவள் நாணத்துடன் தலை குனிய.

"பார்கவி... உனக்கு ஒரு தம்பிப் பாப்பா வேணுமாடா கூட விளையாட! அம்மாகிட்ட ரெகமண்ட் பண்றியா... ப்ளீஸ்!" மென்குரலில் கோரினான்.

JUN 13 2010

அந்த நிமிடம், குழந்தை வீறிட்டு அழ, அந்த மாய வலையிலிருந்து, ரோஸ் சட்டென்று விடுபட்டாள்.

''ம்... அவளுக்கு வேண்டாமாம்... தேங்க்ஸ்டா குட்டி!'' என்றபடி உடனே எழுந்து அங்கிருந்து வெளியேறித் தன் அறைக்குள் சென்றவளுக்கு, பெரும் படபடப்பாய் உதறலெடுத்தது!

தனது பலவீனமான மனப்படகு அவனுடைய மோக அலையைத் தாங்குமா... பெரும் கேள்வி அவளுள்!

அவனுடைய சிரிப்பில் பேச்சில் ஒரு கணம் மயங்கி தன்னை இழக்க இருந்தோமேவென்ற தவிப்புடன் படுக்கையில் சாய்ந்தாள்.

திருமணம், காதல் இதிலெல்லாம் நம்பிக்கையின்றி ஒரு பொய்த் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டவன், இப்போது பிள்ளைகளுக்காகவே மாறியிருந்தாலும், நிஜமான பிரியமும் காதலுமின்றி அவனை ஏற்க முடியாதென்று புரிய, ஒரு பெருமூச்சொன்று கசிந்தது.

முதலில், தாய்க்கென்று திருமணம்... பிறகு குழந்தைகளுக்கென ஒரு வாழ்க்கை என்று அவன் வேண்டுமானால் போலியாக நடிக்கலாம்... ஆனால் தன்னால் முடியாது...

பார்த்த முதல் நாளே, அவனை விரும்பத் துவங்கிய மனதை அடக்கினாலும், சந்தர்ப்ப வசத்தில் மனைவியானாலும், ஆழ் மனதில் இருந்த மாறா நேசத்தினாலேயே தன்னை அவன் வசம் இழந்திருந்தாள்.

தன் மனச்சாலையில் அவன் உதிர்த்த பூக்களாய் அந்த ஒற்றை இரவு!

இன்றும் அதன் நறுமணம் அவளுள் வீச, எதையுமே மறக்க முடியவில்லை!



ஆனால், இன்று வரை அதே
விடக் கூடாதென்பதில் மிகவும் கவனமாக
அவனுடைய பேச்சும் செய்கையும் ஒரு கணம் சல
படுத்திவிட, ஓய்ந்து போனாள் அவள்.

இனி, தனிமையில் அவனுடன் கழிப்பதற்கு உண்டான சந்தர்ப்பங்களை எப்படியாவது தவிர்த்துவிட வேண்டும்... இதயம் உறுதி பூண்டது!

* * *

அந்த வாரத்தில் ஒரு நாள், அவளைத் தேடி வந்தான் தீரேன்.''

''ஏஞ்சல்! அந்த 'எம்.பி.ஏ.' அப்ளிகேஷனை ஏன் நீ ஃபில்லப் பண்ணித் தரலை... டேட் பார் ஆயிடுச்சி! ப்ச்... நானும் மறந்தே போயிட்டேன்'' யோசனையுடன் விசாரித்தான்.

உடனே விதிர்த்து நிமிர்ந்தவள், ''அப்ளிகேஷனா? எப்போ குடுத்தீங்க?'' கூர்மையுடன் கேட்டாள்.

''அத்தைகிட்டே தந்தேனே. நீ மேல படிக்க விருப்பம்னு முன்னே சொன்ன ஞாபகம்... அதான்! ஒரு மாசம் இருக்குன்னு சொன்னேன். அப்புறம் மறந்தே போயிடுச்சி... அதான் கேக்கலாமின்னு வந்தேன்'' என்றான்.

அதற்குள் ஜெசிந்தாவின் குரல் இடையிட்டது...

''நான்தான் தீரேன் அவகிட்ட அதைத் தராம வெச்சிருக்கேன்... ரெண்டு குழந்தைகளை வச்சிக்கிட்டு எப்படி அவளால படிக்க முடியும்... அதெல்லாம் வேண்டாம்ப்பா.''

அவர் குரலில் பெரும் யோசனையும் கரிசனமும் தெரிந்தன.

JUN 13 2010

"அம்மா! என் என்கிட்ட இதைப் பத்தி ஒரு வார்த்தை கூட நீங்க சொல்லலை?" அவள் நம்ப முடியாமல் கேட்டாள்.

"சொன்னா நீ உடனே சேரணும்பே... அதான்டா! குழந்தைகளை யார் பாக்கறது...? எல்லாத்துக்கும் ஆள் இருந்தாலும் நீ வளர்க்கற மாதிரி வருமா?"

அதற்கு பதில் கூற முடியாமல் ரோஸ் வாயடைத்து நிற்க, "அத்தை... அவளுக்குப் படிக்கணும்னு விருப்ப மிருந்தாப் படிக்கட்டுமே! குழந்தைகளை நாம பாத்துப் போம்... என்ன 'கரெஸ்'லதானே படிக்கப் போறா! "எக்ஸாம் டைம்ல, எப்பவாவது வகுப்புகள் நடக்கறப்ப நாம பாத்துக்கலாம்" என்றவன் அவளிடம் திரும்பினான்.

"அத்தைகிட்டே வாங்கி சீக்கிரம் ஃபில்லப் பண் ணிடு... என் ஃப்ரெண்ட் யூனிவர்சிட்டியில இருக்கான். நான் அவனுக்கு அனுப்பிடறேன்."

இயல்பாகக் கூறிவிட்டு குழந்தைகளுடன் அவன் விளையாட, நன்றிப் பெருக்கில் அவள் விழிகள் நிறைந்தன.

அவனுடைய அன்பின் ஆழத்தில் முக்குளித்தது மனது!

"தேங்க்யூ..." பிசிர் தட்டிய குரலில் கூறிவிட்டு வேகமாகத் தாயின் பின்னால் சென்றாள்.

அந்த விழிகள் அவனை உரசியபோது மனதிற்குள் நீரூற்றாய் பொங்கியது ஆனந்தம்!

மறுநாளே அப்ளிகேஷன் அனுப்பப்பட்டாலும் தேதி கடந்து விட்டதால் அடுத்த முறைதான் சேர முடியும் என்கிற நிலை வந்தபோது, நிஜமாகவே வருந்தினான் தீரேன்!



பிறகு தாயிடம் பேசாமல் உம்மென்றிருந்தவ... நாட்களில் இயல்பாகி விட, அவனுக்குத் தான் பெரும் உறுத்தலாய்!

ஒரு நாள் இது பற்றி ஜெசித்தாவிடம் அவன் வருந் தியதை அவளே கேட்டு விட்டாள்.

அடுத்த வருடமாவது அவளை விரும்பியபடி அந்தக் கோர்ஸில் சேர்த்து விட வேண்டுமென்று அவன் கூற, அதற்கு தன் தாயின் சமாதானத்தையும் செவி மடுத்த வளுக்கு, அவன் மீது தனி மரியாதை வருவதாய்!

கூடவே, தாயின் கணிப்பும் புரிய குழந்தைகள் சிறிது பெரியவர்களாகட்டும் என்றே இன்று தோன்றியது!

இப்போதெல்லாம் அவனைத் தொட விருப்பமின்றித் தொழ விரும்புகிறதே இதயம்... ஏன்... புரியவில்லை!

அப்போதுதான் குழந்தைக்கு பெயர் சூட்ட நாள் பார்த்தனர்.

* * *

ஐந்தாம் மாதம் என்பதால் அவர்கள் வீட்டிலேயே, நட்பு வட்டம், உறவுகள் என்று அனைவரும் கூடிப் பெயர் சூட்டினர்.

சத்யன் பென்னட், ப்ரயன்னா பார்கவி... இருவரும் அழகிய பட்டாடைகளில் குட்டி தேவன், தேவதைகளாக ஒளிர எல்லோருக்கும் முன்பே தெரிவித்திருந்ததால் அவர்களுக்கும் திருமணம் பற்றிய கேள்வியும் எழ வில்லை!

ஆனால் அன்றுதான் உறவுப் பெண் ஒருத்தி, குட்டை உடைத்து விட்டாள்.

அவனுடைய சித்தப்பா பெண்ணிற்கு அவளைப் பார்த்ததிலிருந்தே ஒரே புகழாரம்தான்.

"அண்ணி! நீங்க இவ்வளவு அழகா இருக்கறதாலதான் அண்ணன் காத்திட்டுருந்திருக்காங்க...

"பெரியம்மா இறந்தப்ப இங்கே நாங்க வந்திருந்தோமே, அப்பவே நீங்க யாருன்னு அம்மா சிகாமணி அண்ணன் கிட்ட விசாரிச்சாங்களாம்.

"அப்பதான், அவங்க உங்களுக்கும் அண்ணனுக்கும் பெரியம்மா முன்னாடி கல்யாணம் நடந்த விபரத்தை சொல்லியிருக்காங்க.

"அப்புறம் யாருமே எதுவுமே பேசலை... நீங்க திரும்பிப் போயிட்டீங்கன்னப்ப அப்பா வந்து கேட்டாங்களாம்! வேற பொண்ணைப் பாக்கலாமான்னு!

"அண்ணன் மறுத்துட்டாங்களாம்!" படபடவென்று பேசிக் கொண்டே இருந்தாள் அந்தப் பெண்!

அவளுக்குள், ஏனோ பூச்சொரிதலாய் இனிய உணர்வுகள்!

அன்றிலிருந்து, தீரேனிடம் ஓரளவு நட்புணர்வுடன் பழக ஆரம்பித்தாள் அவள்.

அவன் அலுவலகத்திலிருந்து வந்ததுமே, 'பென்' இப்படிச் செய்தான்... பார்கவி இப்படிச் செய்தாள் என்று ஆர்வத்துடன் பகிர்ந்து கொள்ளத் துவங்கினாள்.

அவன் மனமும், மனைவியுடனான அந்தப் பொழுதுகளை ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்தது.

ஜெசிந்தா அந்த நேரங்களில் இங்கிதத்துடன் ஒதுங்கி விடுவார்.



இருவருக்கும் தங்கள் உலகமே குழந்தைகள் தானென்று ஆனது.

* * *

அப்போதுதான் ஒரு நாள் தன் நண்பன் விசுவைத்தைப் பற்றி அவளிடம் வாய் திறந்தான் அவன்.

அன்று தான் ஜானும் மேரியும் தொலைபேசி மூலம் அவளையும், ஜெசிந்தாவையும், குழந்தைகளையும் நலம் விசாரித்தனர்.

அதைப் பற்றி இயல்பாக அவள் கூற அவன் முகம் சுருங்கி சட்டென்று மாறியது!

"ப்ச்... மைக்கேல் பாவம்! ரொம்ப நல்லவர்... கோழைத் தனமா இப்படி ஒரு முடிவை எடுத்திருக்க வேண்டாம்!

"என் ஃப்ரெண்ட் விசுவும் இப்படித்தான்! அவன் ஒரு பொண்ணை ரொம்ப விரும்பிக் கல்யாணம் செஞ்சுக் கிட்டான்!"

"அவளும் ஆரம்பத்துல நல்லாத்தான் இருந்தா... ஆனா திடீர்னு ஒரு நாள் வேற ஒருத்தரோட போயிட்டா!

"ஒருத்தரை விரும்பி அவர் இருக்கும்போதே எப்படி இன்னொருத்தரோட?

"அதைத் தாங்க முடியாம இவன் ரயிலுக்கு முன்னாடி விழுந்து செத்துப் போயிட்டான்!

"என்னால அதை ஜீரணிக்கவே முடியலை!"

அவன் கூறியதும் 'ஓ... பாவம்' என்று அவனுக்காக வருத்தப்பட்டாள் அவள்.

"பரஸ்பரம் ஒருத்தரை ஒருத்தர் விரும்பி மணந்துக் கிட்டவங்களோட வாழ்க்கையே இப்படி கேவலமா, கேள்விக்குறியாப் போயிடுச்[illegible] அம்மா

JUN 13 2010

பார்த்து முடிச்சி வைக்கிற திருமணம் எப்படி இருக்கும்கிற வெறுப்பு வந்தது!''

''அதனாலதான் என் மனசைக் காதல் அது இதுன்னு நான் அலைபாய விட்டதில்லை! கல்யாணம் கூட வேண்டாம்கிற முடிவில் இருந்தேன்'' மெல்ல நிறுத்தினான்.

நண்பனின் நினைவு தந்த வருத்தத்தில் சிறிது நேரம் கண் மூடி மௌனமாக அமர்ந்திருந்தான் அவன்!

உயிரையே கருகச் செய்யும் திராவகத் துளிகளாய் அவன் வேதனையும் வருத்தமும்!

அவனுடைய உணர்வுகள்... மனப் போராட்டம் எல்லாமே இன்று புரிந்தன.

மூடிய கண்களிடையே கசிந்த வலியை இன்று புலன்கள் தவிப்புடன் சேமித்தன.

அவன், காதல், திருமணம் எல்லாவற்றையும் வெறுத்த தன் மூல காரணம் புரிய, கண் மூடி அமர்ந்திருந்தவனைப் பார்த்தால் ஏதோ செய்தது.

உடனே அவனை இயல்பாக்க வேண்டுமென்று மனம் விரும்பியது!

தன் கன்னத்தில் முன்பு அவன் உதடுகள் பரிசளித்த கவிதையை, மீண்டும் திருப்பித் தர வேண்டும் போல்!

அவன் கண் திறந்ததுமே, ''கல்யாணம் வேண்டாம்னு இருந்தீங்க... இப்போ உங்க தவத்தை இந்த குட்டிக் குழந்தைகளே கலைச்சாச்சா...?'' என்றாள் குறும்புடன்.

''ம்... எங்கே... என் தவத்தைக் கலைச்சிட்டு இந்த மேனகா என் பக்கத்திலேயே வரதில்லை! சாமியாராவே நான் அலைஞ்சிட்டிருக்கேன்!''



உள்ளார்ந்த குறும்பில் உதட்டோரம் துடி... வுடன் பதிலளித்தான் அவன்.

அவனுடைய வார்த்தைகள் தாபக் காற்றாய் அவளுடைய இதயப் புல்லாங் குழலுக்குள் நுழைந்து விட... சட்டென்று சிரித்து விட்டாள் அவள்.

''நான் குழந்தைகளைச் சொன்னேன்...''

''ம்... நான் அவங்க அம்மாவைப் பத்தி சொன்னேன். அழகான ராட்சசி அவ! ஒரு நாள் அவளை அப்படியே அலாக்காகத் தூக்கிட்டுப் போயி...''

''தூக்கிட்டுப் போயி...? என்ன செய்வீங்களாம்?''

''என் உள்ளங்கையில் வச்சித் தாங்குவேன்!''

தன்னை அவன் வார்த்தைகள் சிலிர்க்க வைப்பதை அவன் அறிவானா?

''பாவம்! அம்பத்தாறு கிலோ... கை தாங்காது! உடைஞ்சிடும்!'' சட்டென்று கூறிவிட்டாள்.

''இப்படியே வம்பிழுத்திட்டே இரு... ஒரு நாள் இல்லைன்னா ஒரு நாள் என்ன நடக்கப் போவது பாரு.'' போலியாக ஒற்றை விரலைக் காட்டி எச்சரித்தான்!

''என்ன நடக்குமாம்...?''

''நீ எதுக்காக பயந்து இப்படி என்னைக் கண்டாலே விலகி விலகி ஓடறியோ... உன்னையறியாம என் கிட்டே எதை இழந்துடுவேன்னு எதுவுமே பிடிக்காத மாதிரி நடிக்கிறியோ அது நடந்துடும்...

''அப்புறம்...''

''ம்... ஆடு, மாடு, கோழி எல்லாம்கூட நடக்கும்...!'' குறும்புடன் அவன் கூற, அப்போது செல்போன் ஒலித்தது.

JUN 13 2010

உடனே எடுத்துப் பேசியவன், "சைட்டிலே ஏதோ ப்ராப்ளமாம் ரோஸ்... நான் வர லேட்டாகும்! வரேன்" என்றபடி வெளியேறினான்.

அவ்வளவு நேரம் இயல்பாய் அவனுடன் பேசிக் களித்த நிமிடங்களை எண்ணி பெரும் ஏக்கம் முதன் முதலாய் வந்தது!

என்னுள் ஆசை விதைகளைத் தூவிவிட்டு போய் விட்டாயே என்று கேட்க வேண்டும் போல்!

## 21

அன்றிரவு அவன் வர வெகுநேரம் தாமதமாக, உறங்காமல் காத்திருந்தவள், அப்படியும் தன்னையறியாமல் உறங்கி விட்டாள்.

நள்ளிரவில் வந்தவனுக்கு ஜெசிந்தா சாப்பாடு போட, உறங்கச் செல்வதற்கு முன்பு அவளையும் குழந்தைகளையும் பார்த்துவிட்டே படுக்கச் சென்றான்.

மறுநாளும் காலையிலேயே அவன் கிளம்பிச் சென்றுவிட, ரோஸிற்குத்தான் ஏதோ வெற்றிடமாய்!

புராஜெக்ட்டிற்கான வேலைகள் அதிகமிருக்க, அவனுக்கும் நிற்க நேரமின்றிப் போனது!

மூன்றாம் நாளும் இரவு அவன் தாமதமாகவே வர, ஜெசிந்தா முதன் முறையாக அவளிடம் பேசினார்.

"ரோஸ்! மூணு நாளே தீரேன் விடிகாலையில கிளம்பிப் போயிட்டு நடு ராத்திரிதான் வர்றாரு! ஏன் என்னன்னு ஏதாவது கேட்டியா?



"அலுத்து சலிச்சி வீடு வரவங்களுக்கு வே... செய்யணும், சாப்பாடு போடணும்கிற அக்கறையா... உனக்கு இருக்கா? அந்த வயசுலயும் உங்கப்பாவை நான் எப்படி கவனிச்சிப்பேன்... என்மா இப்படி எதிலேயுமே ஒட்டாமத் தனிச்சே இருக்கே!

"தப்பு ரோஸ்! எனக்கென்னவோ, அவனை நீ கண்டுக்காம இருக்கறதாலதான், இப்படி தொழில் தொழில்னு இருக்காரோன்னு ரொம்ப கில்ட்டியா இருக்கு... இனிமே நீதான் அவருக்கு சாப்பாடு போடறதிலிருந்து, எல்லாத்தையும் கவனிச்சிக்கணும்!

"அதான் ஆறாவது மாசம் ஆரம்பிச்சிடுச்சே! குழந்தைங்க ரெண்டையும் நாங்க பாத்துக்கறோம்... நீ முதல்லே தீரேனைக் கவனி!

"நான் என்ன சொல்றேன்னு உனக்குப் புரியும்னு நினைக்கிறேன்!" அழுத்தமான குரலில் ஆணையிட்டார்.

* * *

மறுநாள் காலையில் தான், ஜாகிங் முடிந்து குளித்துவிட்டு வந்த தீரேனைப் பார்க்க முடிந்தது.

"மூணு நாளா மினிஸ்டரோட புது ப்ராஜெக்ட் அது இதுன்னு ரொம்ப அலைச்சல்... இன்னிக்கு நான் வெளியே போகப் போறதில்லை... ரெஸ்ட்தான்!" என்றபடி குழந்தைகளிடம் விளையாட ஆரம்பித்தான்.

அவனுக்கும்... இன்று தான் பெரும் இதமாய்!

கலைந்துபோகா நினைவுச் சுவடுகளாய், அவன் மீது கொண்ட காதல்!

முதன் முதலாகத் தன் தொழிலைப் பற்றி அவன் கூற ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் ரோஸ்!

JUN 13 2010

அத்தனை நாளைய பிரிவின் வலியை உள்ளே உணர்த்திக் கொண்டே இருந்தது... அவர் அருகாமை!

"ரோஸ்! போய் தீரேனுக்கு டிபன் வை... அப்புறம் அவருக்கு ஏதும் தேவைன்னா செய்... நாங்க இங்கே பாத்துக்கறோம்" இருவரையும் எழுப்பினார் ஜெசிந்தா.

டிபன் சாப்பிட்ட பிறகு, "தீரேன் இன்னிக்கு தானே வீட்டுல இருக்காரு... ரூமிலே போய் அவரோட பேசிட்டிரு!" என்று அனுப்பி வைத்தார்.

அவன் அறைக்குள் அவனுடன் தனிமையில் இருப்பது பெரும் தவிப்பையும் சங்கடத்தையும் தர, அவன் அமரும்படி இயல்பாக அழைத்தும், கட்டிலில் ஒரு ஓரத்தில் அமர்ந்திருந்தாள் அவள்.

அதுவரையில் வீம்புடன் இருந்தவள், தன் அம்மா கூறியதாலேயே அறைக்குள் வந்திருப்பதை எண்ணி உள்ளூர நகைத்துக் கொண்டான் அவன்.

"என்ன ஏஞ்சல்... என் ரூமிலே என் கூடத் தனியா இருக்க பயமா இருக்கா?" அடிக்குரலில் சீண்டினான்.

"இல்லியே! எனக்கு என்ன பயம்?"

அவள் கேட்டதுமே, "அப்புறம் ஏன் இப்படி பெட்டோட நுனியில விழுந்திடற மாதிரி உக்காந்திருக்கே! நல்லா உக்காரலாமே!"

இயல்பாக உரைத்தான்.

உடனே சரியாக நகர்ந்து அமர்ந்தவள், என்ன செய்வதென்று புரியாமல் மிரட்சியுடன் விழிக்க, அடக்க மாட்டாமல் சிரித்து விட்டான் அவன்.

"ஈஸி... ஈஸி... ஏன் இவ்வளவு டென்ஷன். நான் என்ன உன்னைக் கடிச்சா முழுங்கிடப் போறேன்... இப்படி பயப்படறே?"



அவள் தன் கைவிரல்களைப் பார்த்தவாறு மௌனமாக அமர்ந்திருக்க, அருகில் சென்று உட்கார்ந்தான் அவன்.

"இப்போ நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன் ஏஞ்சல்! அதை எப்படிச் சொல்றது?

"அம்மா இல்லேன்ற ஒரு வருத்தம் தவிர, இந்த சந்தோஷம் நிம்மதி, நம்ம குழந்தைங்க... அவங்க கூட இருக்கற ரம்யமான தருணங்கள்!"

"நீ என் பக்கத்தில இருக்கும்போது மனசு லேசா... அனுசரணையா நான் உணர்ற நிமிஷங்கள்... அம்மாவுக்கு பதிலா என்னை அன்பா கவனிக்கற அத்தை... நல்லாப் போயிட்டிருக்கற தொழில்...

"ஆனா எல்லாம் இருந்தாலும் மனசுக்குள்ளே ஒரு மூலையில ஏதோ ஒரு வெற்றிடம், பெரும் தேடல் இருக்கே... அது எதனாலன்னு எனக்குப் புரியுது... உன்னால அதை உணர முடியுதா ஏஞ்சல்?"

மென்மையாக அவன் கேட்க விதிர்த்து எழுந்தாள் அவள்.

பழைய ஞாபகங்களின் கருகல் வாசனை இன்னும் மனதிற்குள் எரியும் எண்ணச் சருகுகளாய்!

"நோ! என்னால எதையும் உணர முடியலை... புரியவும் இல்லை!" கிசுகிசுப்பாய் வந்தது அவள் குரல்!

மனம் மத்தளம் கொட்ட, உள்ளே ருத்ர தாண்டவமாய் உணர்வுகள்!

உண்மையான காதலை அவன் உணர்ந்தாலன்றி, தன்னால் இதற்கு சம்மதிக்க முடியாதென்பது புரிவதாய்!

"ப்ளீஸ்... புரிஞ்சுக்க ஏஞ்சல்... நானும் மனுஷன்தான்! இவ்வளவு அழகான ம... பக்கத்தி... இருந்தும்,

JUN 13 2010

எதிர்லே பெரிய விருந்தே இருந்தாலும் விரதமிருக்கற சாதுவோட நிலையில நான் இருக்கேன்..."

ஒரு வெப்ப மூச்சு அவனிடமிருந்து அனலாய் வெளியேறி அவளைத் தீண்ட, உள்ளே குமுறியது நெஞ்சம்!

"நோ... என்னால முடியாது! காதல்... நேசம் எல்லாம் மனசுலருந்து வரணும்... அது இல்லாம ஒரு மிருகம் மாதிரி... என்னால முடியாது!"

சட்டென்று வார்த்தைகளை அவள் சிதற விட, ரௌத்ரமாகிப் போனான் அவன்.

"ஓ... அப்ப நான்... மிருகமா? உனக்காக உன் சம்மதத்துக்காக மாசக்கணக்கா காத்துட்டிருந்து உன் உணர்வுகளுக்கு மதிப்பு குடுத்து விலகி இருக்கிற என்னை... சே..." தன்னையே நொந்தபடி திரும்பிக் கொண்டான்.

"ஆமாம்... உண்மையை சொன்னா சுடும்தான்... முன்னாடி அம்மாவுக்காக... இப்ப குழந்தைகளுக்காக அப்படின்னு வாழற வாழ்க்கை எனக்கு வேண்டாம்! மனசோட அடி ஆழத்திலிருந்து வர்ற நேசம் இருந்தாத்தான் தாம்பத்யம் நல்லாருக்கும்!"

மனம் தர்க்கத்தில் உழன்று கூர் தீட்டிய கத்தியாய் வார்த்தைகளாய் குத்தின.

"ம்... அது... எப்ப வர்றது? எல்லா இடத்துலயும் பெரியவங்க பாத்து நடத்துற கல்யாணங்கள் பின்னாடி சுபமா காதல்லே முடியறதில்லையா?" சீற்றத்துடன் கேட்டான்.

"எனக்கு அதிலே உடன்பாடில்லை. மனசு விரும்பினாதான் எதுவுமே... மரக்கட்டையா வாழ முடியாது! ஐ ஹேட் தட் திங்!"

அவனுக்குள், தாங்க முடியாக் கோபமும் அடக்க இயலாத் தாபமும் பேரலையாய் பரவின.



"சரி... வாழ வேண்டாம்... போ... என் கண் மு
நிக்காத... போயிடு... கெட் அவுட்!"

உயர்ந்த குரலில் கர்ஜித்தான்.

கந்தகமிட்ட காகிதமாய் வெந்து உலர்ந்தது... அவள் நெஞ்சம்.

* * *

ஹாலில் இருந்த ஜெசிந்தாவிற்கோ உள்ளே ஏதோ பிரளயம் நிகழ்வது போலிருக்க, பயத்துடன் அங்கு ஓடி வந்தார்.

அதற்குள் அறைக்கதவைத் திறந்து ஒரு விம்மலுடன் ரோஸ் வெளியேறித் தன் அறைக்கு விரைய, உள்ளே கடும் சினத்துடன் தீரேன் நின்றிருப்பது தெரிந்தது.

உடனே, தன் மகளைத் தொடர்ந்தவர், புஷ்பத்தை குழந்தையை அழைத்துக் கொண்டு சிறிது நேரம் வெளியே இருக்கும்படிப் பணித்தார்.

அறைக் கதவை மூடிவிட்டு மகளிடம் சென்றவருக்கு உருக்குலைந்து அழுது கொண்டிருக்கும் மகளைப் பார்த்தால் பரிதாபமாய்!

மெல்ல அவளுடைய தலையைக் கோதியவர், அவளுடைய விசும்பல்கள் சிறிது குறையும் வரை காத்திருந்தார்.

ஊமை மலர்களின் மௌன விசிப்பாய் மெல்ல மெல்ல அது அடங்க ஆரம்பித்த பிறகு, "ரோஸ்... உங்களுக்குள்ளே என்ன ப்ரச்னை... என்கிட்டே சொல்லுடா!" பரிவுடன் விசாரித்தார்.

"அம்மா..."வென்று அழைத்தபடி அவர் மடியில் தன் முகம் புதைத்தவள், சிறு கேவல்களுடன் தங்களுக்குள் நிகழ்ந்ததைக் கூற, அவர் இதயமே உடைந்து போனது.

JUN 13 2010

"ரோஸ்... எனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சுக்கணும்... நீ தீரேனை விரும்பறியா... இல்லையா?" நேராகவே கேட்டு விட்டார்.

"ஆமாம்" என்று அவள் தலையசைக்க, பெரும் நிம்மதி வந்தது அவரிடம்!

"அப்புறம் ஏன்டா மாப்பிள்ளை கூட சேர்ந்து வாழ மறுக்கறே?" ஆதங்கத்துடன் கேட்டார்.

"அம்மா! உங்களுக்கும் புரியலை! முதல்லே தீரேனைப் பாத்த உடனே என் மனசு அவரை நேசிக்க ஆரம்பிச்சிடுச்சி! அதனால தான் அப்படி நடிக்கவே நான் ஒத்துக் கிட்டேன்.

"அன்னிக்கு தாலி கட்டினப்புறம், அப்புறம்... தீரேன் வருத்தப்பட்ட ராத்திரியும்கூட அப்படித்தான்!

"ஆனா அப்பவும் இப்பவும் சரி.... அவருக்கு என் மேல காதல் இல்லை."

"அதெப்படி உனக்கு தெரியும்?"

"அப்போ... தன் அம்மாவுக்காக... அவங்க கடைசி விருப்பத்துக்காக என்னை ஏத்துக்கிட்டாரு! அப்புறம் அவங்க இறந்தவுடனே தப்பு செஞ்சிட்டமேன்னு அதை எப்படி சரி செய்யறதுன்னு வாசுகி அப்பா கிட்டே வருத்தப்பட்டிருக்காரு.

"அம்மாவுக்காக நாடகமாடினேன்னு சொல்லியிருக் காரு... குடும்பப் பழக்க வழக்கம் பாரம்பரியம் எல்லாமே புரிஞ்சிக்காம வேற மதத்து பெண்ணை மணந்திட் டேனோன்னு கவலைப் பட்டாராம்!"

"இந்தக் கல்யாணம் சரி வராதுன்னு தாமதமாப் புரிஞ்சிக்கிட்டேன்னுருக்காரு! அம்மாவுக்காகத்தான் இந்தத் தப்பை செஞ்சிட்டேன்னு புலம்பியும் இருக்காரு!



"இந்தத் தாலியை எப்படித் திருப்பிக் கேக்கறதுன்னு தவிச்சாராம்! அந்த தர்ம சங்கடம் அவருக்கு வேண்டாம்னு தான், நானே அந்தத் தாலியை வாசுகி கழட்டினப்ப சரின்னு குடுத்துட்டுப் போனேன்!

"இப்பவும், இந்தக் குழந்தைங்க, இந்த ஊர்... இதுக்காக வெல்லாம் தான் மறுபடியும் என்னை அழைச்சிட்டு வந்தாரு!

"மத்தவங்களுக்காக வாழற வாழ்க்கை எனக்கு வேணா டாம்மா! அலுத்துப் போச்சு!

என்னை எனக்காகவே நேசிக்கிற ஒருத்தரா அவர் மாறட்டும்... அப்ப சந்தோஷமா இந்த வாழ்க்கைய நான் ஏத்துக்கறேன்" கூறி விட்டு குலுங்கிக் குலுங்கி அழ ஆரம் பித்தாள்.

* * *

தன் பெண்ணின் வாழ்க்கையைப் பற்றிய கனாக்கள் ஓரமாய் ஒதுங்கி வர்ணமிழப்பதைப் போல் உணர்ந்தார் அவர்.

"தீரேன் எவ்வளவு நல்ல மனுஷன் தெரியுமா? அந்த அற்புதமான மனசை நோக விடாதேம்மா! பெரியவங்க பாத்து முடிவு செய்யற திருமணத்தில் எல்லாம், காதல் எங்கே வருது! ம்...?"

அவளுடைய காதல், கண் முன்னே கேலிக் கூச்சலிட...

அவர் தொடர்ந்தார்.

"உடைச்சே சொல்றேன்! உடல் பொருத்தம் முடிஞ்சப் புறம் தான் மனப் பொருத்தமே வரும்! மஞ்சள் கயிறு மேஜிக் மாதிரி கடைசி வரைக்கும் ஒத்துமையா வாழ்ந்த வங்க தான் அதிகம்! அது மாதிரி நினைச்சிக்கடா!"

சட்டென்று நிமிர்ந்தவள், "முடியாதும்மா! நீங்களும் அப்பாவும் எப்படிக் காதலிச்சீங்க... எவ்வளவு அன்பாக

குடித்தனம் நடத்துவளீங்க... அது மாதிரி ஒரு வாழ்க்கையை நான் வாழணும்னு எதிர்பார்க்கறது தப்பா?'' வீம்பாகக் கேட்டாள்.

உடனே, துக்கம் கரை புரண்டது ஜெசிந்தாவிற்குள்!

''ம்... தப்புதான்! அந்த மாதிரி ஒரு வாழ்க்கை உனக்கு வேண்டாம்!''

எங்கோ பார்த்தபடி கலங்கிய விழிகளுடன் அவர் நிறுத்த, விதிர்த்து எழுந்தாள் ரோஸ்!

''ஏம்மா அப்படிச் சொல்றீங்க? அப்பா எவ்வளவு நல்லவங்க?'' ஏக்கத்துடன் கேட்டாள்.

''ஹூம்... உன்னைப் பொறுத்த வரைக்கும் உங்கப்பா ரொம்ப நல்லவரு... நல்ல அப்பா... ஆனா... வேண்டாம் ரோஸ்... விடு!

''என்னை பலவீனப்படுத்தி உடைச்சிப் போட்ட அந்த வாழ்க்கை உனக்கு தெரிய வேண்டாம்!''

வேகமாக எழுந்தவரை அமர்த்தியவள், ''இல்லை... என்னவோ என்கிட்டே மறைக்கறீங்க... ப்ளீஸ் சொல்லுங்கம்மா!'' பதைப்புடன் வினவினாள்.

''வேண்டாம்... கேட்டா அதை உன்னாலத் தாங்க முடியாது...'' பிடிவாதமாக மறுத்தார் அவர்.

''இல்லை... என்னால முடியும்... இவ்வளவு கஷ்டத்தைத் தாங்கலியா என்ன? எனக்கு உண்மை தெரிஞ்சாகணும்... சொல்லுங்கம்மா! இதுவரைக்கும் இந்த அளவு விரக்தியோட உங்களை நான் பார்த்ததில்லை!''

தன் பிரச்னை மறந்து அவரை வற்புறுத்தியவளுக்குள், ஏதோ ஒரு புதிரின் விடையை எதிர் நோக்கும் படபடப்பு!



## 22

''உங்கப்பா ஏன் இறந்தாருன்னு உனக்குத் தெரியுமா? அதிகப்படியான மன உளைச்சல் ஹார்ட் அட்டாக்கா மாறினதுதான் காரணம்!''

''ஆமாம்... வேலை போயிடுச்சி... பேங்க்லே இருந்த பணமெல்லாம் திவாலாயிடுச்சி... ஷேர்ஸ் எல்லாம் சரிஞ்சி போய் வீடு மட்டுமே பாக்கி இருந்தது... அதானே!''

''ம்... அதுவும் ஒரு காரணம்... ஆனா முக்கியமான காரணம் அது இல்லை!

''உங்கப்பாவுக்கு... நீ அங்கேருந்து இந்தியா கிளம்பினியே... அப்பவே வேலை போயிடுச்சி'' அவர், ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

''அம்மா... நிஜமாவா?'' வியப்புடன் கேட்டாள் அவள்.

''ஆமாம்! உங்கப்பாவுக்கு வேலை போய்... ஷேர்ஸ் எல்லாம் சரிஞ்சி... பேங்க் திவாலாகி எல்லாமே நடந்திட்டிருக்கப்பதான் உனக்கு எதுவும் தெரிய வேண்டாம்னு இந்தியா அனுப்பினோம்!''

''ஆனா இந்தக் காரணங்களுக்காக உங்கப்பா இறந்திருக்கணும்னா, அப்பவே ஹார்ட் அட்டாக் வந்திருக்கணும்.''

''அவரோட பாங்க்கிலே கூட வேலை பாக்கற ரேச்சலை உனக்குத் தெரியுமில்லியா?''

அவர் கேட்டதும் யோசனையுடன் மெல்லத் தலையசைத்தாள் அவள்.



JUN 13 2010

''அவனோட... உங்கப்பாவுக்கு ரொம்ப நாளாவே அஃபேர் இருந்தது!''

அவர் முடிப்பதற்குள், ''நோ... நான் நம்ப மாட்டேன். தீரேனை நல்லவராக் காட்ட, என் அப்பாவைத் தப்பாப் பேசாதீங்க!'' கோபத்துடன் வீறிட்டாள்.

''ப்ச்... எனக்கு அந்த அவசியமில்லை ரோஸ்... உங்கம்மாவை நீ புரிஞ்சிக்கிட்டது இவ்வளவுதானா?

''இறந்து போன ஒருத்தரைப் பத்தி... அதுவும் அவர் என் கணவர் அப்படின்றப்ப எப்படிப் பொய் சொல்லுவேன்!

''ஹூம்... உனக்கு அவர் ஒரு நல்ல அப்பாவா இருந் திருக்கலாம்... ஆனா எனக்கு ஒரு நல்ல கணவரா இல் லைன்றது தான் நிஜம்'' உடைந்த குரலுடன் நிறுத்தினார்.

''அம்மா... இது உண்மையா?'' நம்ப முடியாமல் கேட்ட வளுக்குள், பாசத்தின் மறு உருவாய் வாழ்ந்து மறைந்த தந்தையின் நினைவு!

ஒரு பெருமூச்சுடன் விழிநீரை துடைத்தபடி, ''ஆமாம்... நீ அப்ப சின்னப் பொண்ணு! எனக்கு அவங்க ரெண்டு பேருக்கும் நடுவில இருந்த தொடர்பு தெரிஞ்சப்ப, இப்படித்தான் நானும் நம்ப முடியாம அதிர்ந்து உடைஞ்சு போனேன்...''

''அவர்கிட்டே கேட்டப்ப உண்மையை ஒத்துக்கிட் டாரு! உன் டெலிவரியப்ப எனக்கு நிறைய ப்ராப்ளம்ஸ்! அப்புறம் எல்லாம் சரியாகி தான் நான் அங்கே போனேன்...

அவருக்கு ஒரு நல்ல மனைவியாத்தான் இருந்தேன்... ஆனா எங்கே அவரைத் தொலைச்சேன்னு தான் தெரி யலை!'' வாய் பொத்தி விம்ம ஆரம்பித்தார்.

அவருடைய உணர்வுகள் புரிந்து ஆறுதலாக அணைத்துக் கொண்டவளுக்குள், தங்கள் ப்ரச்னையில்



ஆரம்பித்துத் தன் தந்தையின் ரிஷி மூலத்தை அறிகின்ற ஒரு நிலை!

* * *

பிறகு, தன்னையே தேற்றிக் கொண்ட ஜெசிந்தா, கம்மிய குரலில் பேச ஆரம்பித்தார்.

''என்னால அவரை மாத்த முடியலை... ஆனா உனக்கு ஒரு நல்ல அப்பாவா அவர் இருந்தாரு! இங்கேயும் என் குடும்பத்துல என்னைத் தலை முழுகிட்டாங்க! படிப்பும் பாதியில நின்னுடிச்சி!

''எதை நம்பி நான் உன்னைத் தூக்கிட்டு வெளியே வர முடியும்?

''தோத்துப் போயி என் குடும்பத்துக்கு முன்னாடி நிற்கவும் சுய கௌரவம் தடுத்தது... உன்னை விட்டுட்டு செத்துடலாம்னா பாசம் தடுத்தது.

''என்னை மரக்கட்டையாக்கிட்டுப் பொய்யான வாழ்க்கைய வாழ்ந்தேன்... எல்லாமே உனக்காகத்தான்!''

''எங்கம்மாவையும் அண்ணனையும் தவிக்க விட் டுட்டு ஓடி வந்ததுக்கு எனக்கு இது தேவையான ஒரு தண்டனை அப்படின்னு ஏத்துக்கிட்டேன்.

''எனக்கு மோசமான ஒரு கணவரா அவர் இருந்திருக் கலாம்! ஆனா, சாகற வரைக்கும் ஒரு நல்ல அப்பாவாதான் அவர் வாழ்ந்தாரு!''

''கடைசியில... அவர்கிட்ட இந்த வீட்டைத் தவிர எதுவுமே இல்லைன்னு தெரிஞ்சப்புறம் இந்த வீடும் லோனிலதான் இருக்குன்னப்புறம், ரேச்சல் அவரை விட்டு விலகிட்டா...

'அதை அவராலத் தாங்க முடியலை! தான் சம்பாதிச்ச பணத்துல முக்கால் வாசி அவளுக்கு தான் அவர் செலவு செஞ்சாரு. அது எனக்குத் தெரியும்!''

''எதையுமே என்னாலக் கேக்க முடியாது... உனக்கு முன்னாடி சந்தோஷமா இருக்கற மாதிரி ரெண்டு பேருமே நடிப்போம்.

''கட்டின மனைவி கூட இருக்கும்போதே உங்கப்பா இந்தத் தவறை செய்யத் துணிஞ்சாரே!''

''இவ்வளவு சின்ன வயசுல... தாலி கட்டிப் பிரிஞ்ச மனைவிகூட இல்லாம இருந்தபோது கூட ஒழுக்கமா வாழ்ந்து... இப்பவும் வாழ்ந்திட்டிருக்கற தீரேன் ரொம்ப அற்புதமானவருன்னு நீ எப்ப புரிஞ்சிப்பே ரோஸ்?''

அவர் கேட்டதும் அவளுடைய உணர்வுகள் தூசாய் உடைந்து சிதறின.

அதை கவனிக்காமலே தொடர்ந்தார் ஜெசிந்தா!

''ஹும்..! உங்கப்பா இறந்து போறதுக்கு முதல் நாள் தான் எல்லாத் தப்பையும் உணர்ந்து என் கைப்பிடிச்சி அழுதாரு!

''எதுவுமே பக்கத்துல இருக்கறப்ப அதோட அருமை தெரியறதில்லை... பிரியறப்ப தான் தெரியும் போலருக்கு!

''ரேச்சல் பிரிந்த அதிர்ச்சியும், எனக்கு அவர் செஞ்ச துரோகத்தால வந்த குற்றவுணர்ச்சியும்தான் அவரைக்... கொன்னிருக்கணும்!

''லவ் பண்ற எல்லாருக்கும் இப்படி நடக்கும்னு சொல்லலை... என் வாழ்க்கை இப்படி சிதைஞ்சு போச்சு!'' முடித்து விட்டுக் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தார்.

உண்மை... தன் திரையை விலக்கும் போது, சில நேரங்களில் அங்கு ஊனப்படுவது மனதுதான்!



இதயமே சுக்கு நூறாய் வெடித்துச் சிதறிய உண... அமர்ந்திருந்தவள், தேற்றுவாரின்றி அழுத தாயை ஆறுதல் படுத்தினாள்.

இப்போது புரிந்தது... அவ்வளவு வருடங்கள் வாழ்ந்த ஊரையும், வீட்டையும் விட்டு வருவதற்கு முனைப்புடன் நின்ற தாயின் நிலை!

இப்படி ஒரு அவலம் தன் வாழ்வில் ஒளிந்திருப்பதையே வெளிக்காட்டாது வாழ்ந்தவரை நினைத்தால் பெரும் பிரமிப்பாய்.

தன் ஒருத்திக்காகவே, தியாகச் சுடராய்... தன் சுயமுகம் தொலைத்து ஒரு அடிமையாய் அவர் வாழ்ந்த தருணங்கள், பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

தன் தந்தையா இப்படி... நம்ப முடியாமல் தவித்து ஓங்கிக் கூக்குரலிட்டு அழுது, நொந்து போனது நெஞ்சம்!

ஜெசிந்தா, தனக்காக செய்த தியாகங்களும், விட்டுக் கொடுத்தலும், மரத்த உணர்வுகளுடன் ஒரு ஜடமாய் வாழ்ந்து வந்ததும் புரிவதாய்!

அவருக்காக வருந்தி அழ ஆரம்பித்தவளின் சோகம் முடிவற்றதாய்!

இனியும் அவரை நோகடிக்கக் கூடாதென்று உள்ளுணர்வுகள் உறுதி பூண்டன.

## 23

அன்று முழுவதும் அறையிலேயே அடைந்திருந்தாள் ரோஸ்!

JUN 13 2010

ஜெசிந்தாவும் பெரிதும் ஓய்ந்து படுத்திருக்க உலகமே இருண்டு உணர்வுகள் மரத்த நிலையிலிருந்தாள்.

புஷ்பமும் அலமேலுவும் ஏதோ ப்ரச்னை என்பதைப் புரிந்து, குழந்தைகளை கவனிப்பதும், வேளா வேளைக்கு சாப்பாடு தருவதுமென, இருவரையும் கவனித்துக் கொண்டனர்.

தீரேன், காலையில் கிளம்பி வெளியே சென்றவன் நள்ளிரவு தாண்டித்தான் வீட்டிற்கே வந்தான்.

அவன் வார்த்தைகளால் அந்த நிமிடமே மூடப்பட்டது அவனுடைய மனக்கதவு.

அன்றிலிருந்து, அவன் அவளுடைய அறைக்கே வருவதில்லை!

குழந்தைகளை, புஷ்பத்திடமோ அல்லது ஜெசிந்தாவிடமோ கேட்டு தன் அறைக்குத் தூக்கி வரச் சொல்லிக் கொஞ்சுவது வாடிக்கையாயிற்று!

அவள் தன்னை மறுத்துவிட்டுச் சென்ற அன்று வெளியே சென்றவனுக்குள், பெரும் தகிப்பாய் உணர்வுகள் பற்றியெரிய எதிலுமே கவனம் செலுத்த முடியாத ஒரு நிலை!

நேரே வெள்ளியங்கிரி மலைச் சாரலுக்குச் சென்று தியான லிங்கத்தின் முன்பு அமர்ந்து தியானம் செய்த போது, மனம் சிறிது சமனப்பட்டு லேசானது!

பிறகு அலுவலகத்திற்குச் சென்று ரெஸ்ட் ரூமில் ஓய்வெடுத்தவன், கிளம்பியபோது நள்ளிரவாகி விட்டது.

வீட்டில் ஜெசிந்தாதான் கவலையுடன் ஹாலிலேயே அவனுக்காகக் காத்திருந்தார்.



அவரிடம் என்ன பேசுவதென்று புரியாமல் மன கனத்துப் போக, வேகமாக உள்ளே சென்று கதவை சாத்திக் கொண்டான் அவன்.

* * *

மறுநாளிலிருந்து அவளுடைய அறைக்கே செல்லாமல், அவளைப் பார்ப்பதையே தவிர்த்தான்.

குழந்தைகளை தன் அறைக்கு தூக்கி வரச் செய்து விளையாடுவதை வழக்கமாக்கிக் கொண்டான்!

தன்னை விரும்பாத ஒருத்தியை மேலும் மேலும் நோகடித்து வற்புறுத்தி சங்கடப்படுத்த அவன் விரும்பவில்லை!

தண்டவாளத்தின் இரு துண்டுகளாகத் தாங்களிருப்பது புரிந்தது.

தான் கட்டிய தாலியையே கழட்டிக் கொடுத்து விட்டுச் சென்றவள், தன்னுடன் இணைந்து இல்லறம் நடத்துவாள் என்று எதிர்பார்த்தது, தன் தவறுதானென்பதை அன்று உணர்ந்தான் அவன்!

ஒரு நடிப்புத் திருமணத்தை வாழ்க்கை முழுவதும் சுமக்க விரும்பாதவள், தன் குழந்தைகளை சுமந்து மட்டும் பெற்றதுதான் ஏனென்று புரியவில்லை.

ஜெசிந்தா தான் அவளைத் தடுத்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

நல்லவேளையாக தன் தந்தை விரும்பியதைப் போல் அவள் தன் அத்தை பெண்ணாக விட்டாளே என்று மகிழ்ந்திருந்தவனுக்கு, அவளுடைய வார்த்தைகள் சாட்டை அடியாய்!

உள்ளே தென்னம்பாளையாய் வெடித்துச் சிதறி ஏளனம் செய்தன உணர்வுகள்!

இனி அவளாகப் பேசினாலன்றி ஒரு வார்த்தை கூட பேசக்கூடாதென்பதில் பெரும் உறுதியாக இருந்தான் அவன்.

தான் எவ்வளவு இறங்கி வந்து பேசியும், உன்னுடன் வாழ விருப்பமில்லை என்று முகத்திலடித்தாற் போலக் கூறி விட்டாளே என்ற கோபம் தணலாய்க் கனன்றது.

அவளை எண்ணிக் காத்திருப்பதா... இல்லை அவள் விரும்புகிற மண விடுதலையைக் கொடுத்து விடலாமா... வெகு நேரம் யோசித்தான்.

பிறகு எதுவாக இருந்தாலும் குழந்தைகளுக்கு ஒரு வயதாவது ஆகட்டும்... பிறகு ஜெசிந்தாவிடம் கலந்து பேசி ஒரு முடிவெடுக்கலாம் என்று தீர்க்கமான முடிவெடுத்தான்!

* * *

ஒரு முடிவு செய்து விட்டால் அதை செயல்படுத்துவது எளிதென்பது அவனுடைய கருத்து!

அதனால், தான் எடுத்த முடிவில் உறுதியாக இருந்தான்.

இப்போதெல்லாம் வீட்டில் ரோஸ் இருக்கின்ற திசையில் கூடத் திரும்புவதில்லை!

எப்போதும், எஃகிரும்பில் வார்க்கப்பட்ட சிலையாய், முகமும் உடலும் விறைத்த நிலையிலேயே இருந்தவனைப் பார்த்தால், அவளுக்குத்தான் அடி வயிறு சில்லிட்டது.



ஜெசிந்தாவிற்கோ, என்ன செய்வதென்றே

ஒரு பரிதவிப்பு!'

அவனிடம் பேசிப் பார்க்கலாமென்றால், ரோஸ் முட்டாள் தனமாக இப்படி நடந்து கொண்டு விட்டாளே என்ற கவலை வேறு அவரைச் செல்லரித்தது!

அவள், தன் முகத்திலிருந்த சிரிப்பும், துள்ளலும் மறைந்து வெற்றுப் பார்வையும், உயிர்ப்பைத் தொலைத்த முகமுமாயிருந்தாள்.

அப்போதுதான் ரோஸின் பிறந்த நாள் வந்தது.

முதல் நாள் காலையில் தீரேனைத் தேடிச் சென்ற ஜெசிந்தா, நாளை ரோஸின் பிறந்த நாள் என்பதைத் தெரிவித்தார்.

ஒரு கணம் இளகிய அவன் முகம் மறு நொடியே கடின முற ஒரு வித இயலாமையுடன் திரும்பினார் அவர்.

"அத்தை! ஒரு நிமிஷம்... என் பிறந்த நாளுக்கு, நான் பேக்டரிக்குப் பக்கத்துல இருக்கற கருணை இல்லத்துக்கு மதியம் லன்ச்சுக்கு பணம் குடுத்துடுவேன்... அதே மாதிரி செஞ்சிடலாம்!"

"சாயந்திரம் வேணா நீங்க அவளை அழைச்சிட்டு கோவிலுக்குப் போயிட்டு வந்துடுங்க. வீட்டிலே அன்னம்மாவை விட்டு ஸ்பெஷல் மெனு பண்ணிடச் சொல்லலாம்!" என்றபடி உள்ளே சென்று விட்டான்.

* * *

மறுநாள் அதிகாலையில் எழுந்ததுமே அவளுடைய செல்லில் பிறந்த நாள் வாழ்த்துக்களை எஸ்.எம்.எஸ். செய்துவிட்டு, தீரேன் அலுவலகம் கிளம்பி விட்டான்.

காலை டிபன், மதிய சாப்பாடு என்று அமர்க்களமான மெனுவையும் அன்னம்மாவிடம் கூறிச் சென்றிருந்தான்!

காலையில், தாயின் வாழ்த்துக்களுடன் எழுந்து குளித்து விட்டு வந்தவளுக்கு, தீரேன் இன்னும் தன்னை வாழ்த்தவே இல்லையே என்ற ஏக்கமும் தவிப்பும்!

"அம்மா! கேக் ஆர்டர் பண்ணியிருந்தீங்களாமே... வந்திருக்கு!" அலமேலுதான் ஜெசிந்தாவை அழைத்தார்.

வெளியே வந்து கேக்கை மேசை மேல் வைத்து விட்டு தீரேனைத் தேடிச் சென்றால் அவன் இல்லை... காலையிலேயே கிளம்பி அலுவலகம் சென்றிருந்தான்.

"இது என்ன கண்ணா மூச்சி விளையாட்டு... கடவுளே!" மனதிற்குள் அரற்றியபடி ஜெசிந்தா சமையலறைக்குச் சென்றார்.

"எல்லாமே ரெடிம்மா! பூரி சன்னா, இட்லி சாம்பார், பொங்கல், வடை, சட்னி, ஸ்வீட் எல்லாம் ஐயா செய்யச் சொன்னாங்க! தயாரா இருக்கு... கேக் வெட்டிட்டா சாப்பிடலாம்!" என்றார் அன்னம்மா!

எல்லா ஏற்பாடுகளையும் செய்யச் சொல்லி விட்டு தீரேன் வெளியில் சென்று விட்டானே என்ற கவலை அவரை வெகுவாய் ஆக்ரமித்தது.

ஸ்வீட்டை எடுத்து பூஜையறையில் வைத்து படைத்து விட்டு ரோஸின் அறைக்கு வந்தார் அவர்.

அப்போதுதான், செல்லை உயிர்ப்பித்தவள் அது சப்தமிட மெசேஜை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

தீரேன் அனுப்பிய பிறந்த நாள் வாழ்த்துதான் வந்திருந்தது.



சட்டென்று மனம் கசங்கி விட நிமிர்ந்தால் ஜெசிந்தாதான் வந்து கொண்டிருந்தார்.

"அம்மா! வீட்டில இருந்துக்கிட்டே எனக்கு பர்த்டே விஷஸ் அனுப்பி இருக்காரு பாருங்கம்மா!" சலுகையுடன் சிணுங்கினாள்.

"தீரேன் வீட்டில் இல்லைம்மா! காலையிலேயே போயிட்டாரு! ஆனா எல்லா ஏற்பாடும் செஞ்சு வச்சிட்டுத்தான் போயிருக்காரு... விருந்து ரெடி! கேக் வந்தாச்சு. கட் பண்ணிட்டு சாப்பிட வேண்டியதுதான்!"

"அம்மா... அவர் இல்லாம எப்படி?" ரோஸ் தடுமாறிப் போனாள்.

"அப்போ போன் பண்ணிக் கூப்பிட்டுப் பாரு! வந்தாப் பாக்கலாம்!" அமைதியாகக் கூறினார் அவர்.

உடனே அவனுடைய செல்லுக்கு தொடர்பு கொண்ட போது வெகு நேரம் கழித்தே எடுத்தவன் "ஹலோ..." என்ற ஒற்றை வார்த்தையுடன் நிறுத்தி விட்டான்.

"ஹலோ! என் பர்த்டேக்கு நீங்க இல்லாம எப்படி? கேக் வந்திருக்கு... கட் பண்ணணும்... வீட்டுக்கு வரீங்களா?" தவிப்புடன் அழைத்தாள்.

"ம்... எனக்கு வேலை இருக்கு! நீங்க கட் பண்ணிடுங்க... சாப்பிடல்லாம் வர முடியாது!" ஆழ்ந்த குரலில் மறுத்தான்.

"இல்லை... எனக்கு பர்த்டே விஷ் கூட சொல்ல மாட்டீங்களா?"

"காலையிலயே எஸ்.எம்.எஸ். அனுப்பியிருந்தேனே! நான் கொஞ்சம் பிசியா இருக்கேன்...!"

சிறு கடுமையுடன் வந்த அவன் குரலில் விழியோரங்களில் கண்ணீர் ஜனித்துவிட ''ஏன் இப்படி கோபமாய் பேசறீங்க... நான் இங்கே இருக்கறது பிடிக்கலைன்னா சொல்லிடுங்க!'' சிறு நடுக்கத்துடன் வந்தது அவள் குரல்!

''நான் எதுவுமே சொல்லலையே... நீதான் பிடிக்கலைன்னு சொன்னே... வெறுப்பா இருக்குன்னு சொன்னே... பொய்யா வாழ முடியாதுன்னும் சொன்னே... பிடிக்காத ஒரு இடத்துக்குப் போறது... நம்மளை விரும்பாதவங்க கிட்டே பேசறதெல்லாம் நான் எப்பவுமே அவாய்ட் பண்ணிடுவேன்... பை!''

உடனே அவன் செல்லைத் துண்டித்து விட, அன்று தான் சிதற விட்ட வார்த்தைகளின் தீவிரம் இன்று புரிவதாய்!

உன்னை நினைக்கும் போதெல்லாம் இனம் புரியா மாய வலையில் சிக்கித் தவிக்கிறதே என் இதயம்!

சட்டென்று பொங்கிய கண்ணீருடன் தொப்பென்று படுக்கையில் அமர்ந்தாள் அவள்.

வெளியே, வானமும் அவளைப் போலவே கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தது.

## 24

அவள் திடீரென்று அழுவதைக் கண்டதும் ஓடி வந்து அணைத்துக் கொண்ட ஜெசிந்தா, தானே முன்னின்று கேக் வெட்டச் செய்து, அவளை வற்புறுத்தி சாப்பிட வைத்தார்.



உடனே ஒரு யோசனை தோன்ற தீரேனுக்கு போன் செய்தார்.

அவன் எடுத்ததும், ''தீரேன்! மதியம் கருணை இல்லத்துக்கு நாங்களும் வரலாமா? அங்கேயே சாப்பிட்டுடலாம்! குழந்தைகளை விட்டுட்டு வந்திடறோம்... டிரைவருக்கு வழி தெரியுமா? நீங்க அங்கே வருவீங்கதானே!''

அவர் கேட்டதும், ''டிரைவரோட நீங்க வந்துடுங்க... பன்னெண்டு மணிக்கு அங்கே இருக்கற மாதிரி வாங்க! நான் முடிஞ்சா வரேன்'' என்று வைத்தான்.

பிறகு சமையல் காரம்மாவிடம், வேலைக்காரர்களுக்கு மட்டும் சமைக்கும்படிக் கூறிவிட்டு ரோஸிடம் வந்து விபரம் கூறினார் அவர்.

அவளும் உற்சாகத்துடன் சரியென்று சொல்ல, மதியம் கிளம்பி அந்தக் கருணை இல்லத்திற்குச் சென்றனர்.

தீரேனுக்காகக் காத்திருந்து அவன் வரத் தாமதமாகுமென்று தெரிந்ததும், ப்ரேயர் முடிந்து அவனை வாழ்த்திவிட்டு பிள்ளைகள் சாப்பிட ஆரம்பித்தனர்.

இருவரும் அவர்கள் கையாலேயே பரிமாறி முடித்து தாங்களும் சாப்பிட்டு முடித்த பிறகே தீரேன் வந்தான்.

* * *

சாப்பாட்டு அறையிலிருந்து வெளியே வரும்போது தான், மதருடன் அவன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

உற்சாகத்தில் துள்ளிக் குதித்த மனதை அடக்கியபடி ரோஸ் ஆவலுடன் அவனை எதிர்கொண்டாள்.

நெஞ்சின் எதிர்பார்ப்பும் ஏக்கமும் ஒன்றை ஒன்று புறம் தள்ள, அவனை நோக்கிச் சென்றது இதயம்!

அதற்குள், அங்கிருந்த பிள்ளைகள் அண்ணாவென்றழைத்தபடி ஓடிச் சென்று அவனைச் சூழ்ந்து கொண்டனர்.

அவனும் அவர்களுக்கு ஈடு கொடுத்தபடி பேசிக்கொண்டிருந்ததைக் கண்டவளுக்கோ பெரும் பிரமிப்பாய்!

''என்ன மிஸஸ் தீரேந்தர்... அப்படிப் பாக்கறீங்க? தீரேன் சார் இங்கே ரொம்ப பிரபலம்! அவங்க அப்பா காலத்திலிருந்தே பிறந்த நாள், திருமண நாள் 'பேக்டரி ஆனிவர்சரி டே'னு எல்லா விசேஷங்களையும் இவங்களோட கொண்டாடறதுதான் வழக்கம்!''

''அதோ அந்த லைப்ரரி பில்டிங் கூட சார் இலவசமாகக் கட்டித் தந்ததுதான்! அதுக்கு புத்தகமெல்லாம் கூட சார்தான் வாங்கித் தந்தாங்க!''

உளமாரப் பாராட்டினார் மதர்.

தன் கணவனின் வேறு ஒரு பரிணாமம் அப்போது தான் புரிவது போல்!

அந்தப் பிள்ளைகளுடன் இயல்பான பிரியத்துடன் உரையாடிக் கொண்டிருந்தவனை, ஏக்கத்துடன் படம் பிடித்து இதயத்தில் பதித்துக் கொண்டன விழிகள்!

வறண்ட பாலையில் விழும் நீராய் காதல் உணர்வுகள் அவன் உருவத்தை உறிஞ்சிக் கொண்டன!

அங்கும், சம்பிரதாயத்திற்கென்று கூட, அவளிடம் அவன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

இல்லத்துப் பிள்ளைகளிடம் பேசிவிட்டு அவர்களிடம் திரும்பியவன், ''அப்ப நான் கிளம்பறேன்'' பொதுவாக உரைத்துவிட்டுக் கிளம்பினான்.

''சாப்பிட்டுட்டுப் போகலாமே சார்?''



மதர் கேட்க, ''தொழில் முறையில ஒரு கிளையண்ட்டோட இன்னிக்கு லஞ்ச் இருக்கு மதர்... தப்பா நினைச்சிக்காதீங்க...'' என்று விடை பெற அவளுக்குத் தான் விழியோரம் கரித்தது.

தன் பிறந்த நாளுக்கு அவன் அளித்த உயர்ந்த பரிசு இதுதானென்று தோன்றினாலும், அவனுடைய ஒதுக்கமும் பாராமுகமும் அவள் உயிரை உருக்கின!

அன்றிரவும், தாமதமாகவே வந்தாலும், மாலையில் எதிர்பாராத ஒரு இன்ப அதிர்ச்சியாய் ஒரு பெரிய ஜவுளிக் கடையின் வேனே அவர்களைத் தேடி வந்திருந்தது.

ஊர்ப் பெரிய மனிதர்களின் வீட்டிற்கெல்லாம் இவ்வாறு செல்வது பழக்கமென்றும், சிவ பார்வதி நன்றாக இருக்கும் போதே வந்து செல்வார்களென்றும் அலமேலு தான் கூறினார்.

ஜெசிந்தாவிற்கோ பழைய ஞாபகங்கள்... அலையலையாய் பரவின.

அந்தக் கடையின் கணக்குப் பிள்ளை, பட்டுப் புடவைகளை எடுத்து ஹாலில் கடை விரிக்க, ரோஸை அழைத்தார் ஜெசிந்தா.

''மாப்பிள்ளை அனுப்பிச்சாராம்.. தேவைப்பட்டதை எடுத்துக்கச் சொன்னாராம்! வந்து பாரும்மா!'' வாஞ்சையுடன் அழைத்தார்.

''இல்லைம்மா! அவங்க வந்ததுக்கு நீங்க ஒரு புடவை எடுத்துக்கங்க! எனக்கு வேண்டாம்! அவரா எப்ப என்னை கடைக்கு அழைச்சிட்டுப் போறாரோ, அப்ப பார்க்கலாம்!'' உறுதியுடன் மறுத்து விட்டாள் அவள்.

பிறகு, தீரேனுடைய மனம் கஷ்டப்படக்கூடாதென்பதற்காகவே, சிறிய கரையிட்ட ஒரு புடவையும், ஒரு

JUN 13 2010

பேன்சி பட்டுப் புடவையும் எடுத்துக் கொண்டு அவர்களை அனுப்பி வைத்தார் ஜெசிந்தா!

## 25

நாட்கள் காற்றெனக் கடுகி விரைந்தன!

ஒரு நாள் குழந்தை சத்யனுக்கு திடீரென்று காய்ச்சல் அதிகமாகி உடலில் சிவப்புப் புள்ளிகள் தோன்ற ஆரம்பித்தன.

இப்போதெல்லாம் அவள் 'சத்யா...' என்றுதான் குழந்தையை அழைக்கிறாள்.

திடீரென்று அவன் உடல் அனலாய் கொதிக்க உடனே பயந்து போய் தீரேனுக்கு போன் செய்தாள் அவள்.

அவன் எடுத்ததும், 'சத்யனுக்கு ஹைஃபீவர். உடம்பு அனலாக் கொதிக்குது! உடம்பெல்லாம் சிவந்திருக்கு எனக்கு பயமாருக்கு!'' கண்ணீருடன் கூறினாள்.

''நான் இப்ப டவுனிலேதான் இருக்கேன். நீங்க உடனே கிளம்பி டிரைவரோட ஹாஸ்பிடலுக்கு வந்துருங்க... எந்த ஹாஸ்பிடல்னு அவருக்குத் தெரியும்... நான் அங்கே வர்றேன்'' என்று கூறி வைத்தான்.

உடனே, இருவரும் கிளம்பிக் குழந்தையை எடுத்துக் கொண்டு சென்றனர்.

செல்லும் வழியெல்லாம் அழுது கொண்டே வந்தவளை ஜெசிந்தாவால் சமாதானப் படுத்தவே இயலாது போயிற்று!

* * *



மருத்துவமனையின் வாசலிலேயே பதட்டத்துடன் காத்திருந்த தீரேனைக் கண்டதும் தான், அவளால் இயல்பாகவே மூச்செடுக்க முடிந்தது.

கொழு கொம்பில் சுற்றிய கொடியாய் அவனில் படர்ந்த மனது பாரத்தை அவனிடமே ஒப்படைத்தது.

பிறகு, குழந்தையை மருத்துவமனையில் சேர்த்த போது, அனைவரும் பயந்து போயினர்.

வீட்டில் வேறு, பார்கவி தனியே இருப்பது நினைவு வந்தாலும் புஷ்பமும் அலமேலுவும் அவளை கவனித்துக் கொள்வார்களென்ற நிம்மதி வந்தது!

சத்யனை முழுவதுமாகப் பரிசோதித்த டாக்டர் பயமில்லை என்றார்.

சாதாரண வைரஸ் காய்ச்சல்தானென்றும், வீட்டிலும் குழந்தையிருப்பதால் ஒரு வாரத்திற்கு மருத்துவமனையிலேயே இருக்கட்டும் என்றும் கூறிவிட்டார்.

தீரேன்தான் உடனே முடிவெடுத்து ஜெசிந்தாவிடம் பேசினான்.

''அத்தை! உங்க பொண்ணை வீட்டுக்குப் போயி பார்கவியை கவனிச்சிக்கச் சொல்லுங்க... இங்கே சத்யனுக்கு டிரிப்ஸ்தான் போட்டிருக்காங்களே! அதோட பவுடர் பால் கலந்து குடுக்கலாம்!

''ஆனா பார்கவிக்கு 'மதர்ஃபீடிங்' இல்லைன்னா கஷ்டம்! நாம ரெண்டு பேரும் இங்கே பாத்துக்கலாம்! வீட்டில அவளுக்கும் ஒட்டிக் கிட்டா கஷ்டம்! புஷ்பம் மட்டும் இங்கே வந்திடட்டும்!'' என்றான் யோசனையுடன்.

அவருக்கும் புரிந்தாலும், ரோஸுக்குப் புரிய வைப்பது தான் பெரும் கஷ்டமாய்!



JUN 13 2010

பிறகு டாக்டரே அவளிடம் அறிவுறுத்த, அரை மனதுடன் தீரேனுடன் வீட்டிற்குக் கிளம்பினாள்.

அப்போது அவளைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருந்தாலும் அவன் ஒரு வார்த்தை கூட அவளிடம் பேசவில்லை!

அமைதியாகவே மௌனத் துளிகளாய்க் கடந்த அந்த நிமிடங்கள்... இருவருக்குமே பெரும் தவிப்பைத் தருவ தாய்!

வீட்டிற்கு வந்ததுமே, "அலமேலும்மா! குளிச்சிட்டு வந்தப்புறம், குழந்தையைக் குடுங்க! அம்மா வாரம் நீங்கதான் பார்கவியை பத்திரமாப் பாத்துக்கனும்! ஒரு "புஷ்பத்தை ரெடியாகச் சொல்லுங்க... தேவை யானதை எடுத்து வச்சிக்கங்க... ப்ளாஸ்க், டயாபர் எல்லாம்! நான் திரும்பவும் ஹாஸ்பிடல் போவேன். அப்ப விட்டுடறேன்!"

வேகமாக ஆணைகள் பிறப்பித்து விட்டுத் தன் அறைக்குள் சென்றான்.

தன்னிடம், அவன் ஒரு வார்த்தை கூடப் பேச மறுப் பதும், மற்றவர்களிடமே பேசுவதும், அவன் கோபத்தின் அளவைப் புரிய வைத்தன.

நான் என்ன நீ உருட்டி விளையாடும் பகடைக் காயா வென்று கேட்க வேண்டும் போல்!

தன் மீதே கோபம் வர, வேகமாக உள்ளே சென்ற வளுக்கு, சத்யனின் கவலை மனதைத் துண்டாடியது!

அவன் கிளம்பும்போது, எல்லாவற்றையும் எடுத்துச் சென்று கொடுத்தவள், "ஹாஸ்பிடல்லேருந்து சத்யன் எப்படி இருக்கிறான்னு அம்மாவை போன் பண்ணச் சொல்லுங்க!" கவலையுடன் கோரினாள்.



மெல்லத் தலையசைத்தபடிக் காரில் ஏறியவனது பார்வை, கண்ணீர் சுமந்த அவள் முகத்தில் ஒரே நொடி பதிந்து விலகியது!

குளத்து மீன்களாய் எங்கு சுற்றினாலும் உனக்குள் ளேயே தான் நானிருக்கிறேன் என்று கூற வேண்டும் போல்!

பிறகு வேகமாகக் காரைக் கிளப்பிச் சென்றவன், மருத்துவமனையிலேயே அன்றிரவு தங்கி விட்டான்.

இரவு, ரோஸிடம் பேசி விபரம் கூறும்படி ஜெசிந்தா விடம் கூறியவன், காட்டேஜ் போலிருந்த அந்தப் பகுதியில் சோபாவிலேயே முன் அறையில் படுத்துக் கொண்டான்.

* * *

இரண்டே நாட்களில் சத்யனின் உடல்நிலை சற்று சீராக, பெண்கள் இருவரும் பகலில் கவனித்துக் கொண் டனர்.

இரவில் மட்டும் தீரேன் துணையிருக்க, மாலை நேரங்களில் மட்டும் அவனுடன் வந்து குழந்தையைப் பார்த்துச் சென்றாள் ரோஸ்!

ஒருவித இறுக்கத்துடன் ஒதுங்கியே இருப்பவனிடம் பேசவே அவளுக்கு பயமாய்!

ஒரு தாயாய், குழந்தையைப் பார்த்துக் கொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கத்துடன் வந்தவளுக்கு, ஓய்ந்திருந்த சத்யனைப் பார்த்ததும் அழுகையே வந்து விட்டது.

அவளைக் கண்டதும் தாவிய குழந்தையை ஏந்தி அணைத்தபடி வெகு நேரம் இருந்தவளை, ஜெசிந்தா தான் கிளப்பி அனுப்பி வைத்தார்.

JUN 13 2010

காரில் திரும்பும் போது, இரவும் பகலும் சரியாக உறங்காது, தொழிலையும் கவனிக்கும் கணவனைப் பார்த்தால் அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

அவனிடம் திரும்பியவள், ''தேங்க்யூ தீரேன்... குழந்தையால நீங்களும் பாவம்... ரொம்ப கஷ்டப்பட்டீங்க... எனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை!'' கவலையுடன் பார்த்தாள்.

உடனே சீற்றத்துடன் அவள் புறம் திரும்பியவன், ''சத்யன் எனக்கும் குழந்தைதான்... அதை மறந்துட வேண்டாம்! அவன் என் பையன்!''

அழுத்தமான குரலில் கூறிவிட்டு எதிர்ப்புறம் தெரிந்த சாலையை சீற்றத்துடன் வெறித்தபடி ஓட்ட ஆரம்பித்தான்.

வெகு நாட்களுக்குப் பிறகு தன்னிடம் பேசியவன், எரிந்து விழுந்தது நெஞ்சை உலுக்க அமைதியாய் திரும்பி வெளிப்புறம் வெறிக்க ஆரம்பித்தாள் அவள்.

அவளை நொறுங்க வைத்தன... அந்த விலகலும், உதாசீனமும், முகம் திருப்பலும்!

''நான் உன்னை விரும்புகிறேன்'' என்று அவன் எப்போது தன்னிடம் சொல்லப் போகிறானென்ற தவிப்பும் எதிர்பார்ப்பும் உள்ளே விரவிப் பரவின.

'அவன் மாறாவிட்டால்.. தன் மேல் நேசம் கொள்ளாமலே போய்விட்டால்... என்ன செய்வது? ஆண்டாள் நாச்சியாரைப் போல் காத்திருப்பதுதான் வழியா?' இதயம் கேள்வியெழுப்பியது.

''கடவுளே... என் உயிரினும் மேலாய் அவனை நான் விரும்புவதை யாரை விட்டுத் தூது விடுப்பேன்...''



''ஏன்... தூது விடுவது தானே பெண்ணே?'' மனம் இடித்துரைத்தது.

அவன்தான் காதல், திருமணம் எல்லாவற்றையும் வெறுத்தவனாயிற்றே! இப்போது குழந்தைகளுக்காகவே அவளை ஏற்றிருப்பவன்...

''அதற்காக ஒரு கடமையைப் போல் என்னை சகித்துக் கொள்ள முயன்றால், என்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது!

'அவனுடைய நேசமும் பிரியமும் எனக்கே சொந்தமாக வேண்டும்... நான் விரும்புவது போல் அவனும் என்னை உயிராய் நேசிக்க வேண்டும்...' ஏக்கத்துடன் மறுகியது உள்ளம்!

அதற்குள் வீடு வந்து விட்டிருக்க, உடைந்த மனதுடன் உள்ளே சென்றாள் ரோஸ்!

''ஏஞ்சல்...'' என்ற அவனது அழைப்பிற்காக செவியும், புலன்களும் ஏக்கம் மிகக் கொண்டு தவமிருந்தன.

## 26

ஒரு வாரம் கழித்து அன்றுதான் சத்யன் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்பட்டான்.

உடல் சரியாகி விட்டாலும் அவனை மேலும் சில தினங்கள் பார்கவியை விட்டுத் தனியாகவே வைக்கும்படிக் கூறியிருந்தார் டாக்டர்.

அதனால், ஜெசிந்தாவே ஒரு யோசனையைக் கூறினார்.

தீரேனின் அறையில் சத்யனையும் அவனையும் தங்கும்படிக் கூறினார்.

மருமகனையும் மகளையும் இணைத்து வைக்கச் சரியான வழியையும் கண்டு பிடித்தது அவர் மனது!

ஆனால், தீரேன் எடுத்த முடிவை இருவருமே எதிர்பார்க்கவில்லை!

ஏற்கெனவே தாமரை இலைத் தண்ணீராய் ஒட்டாதிருந்தவன் விலகியே போனான்.

உடனே தன் உடைமைகளை தாயின் அறைக்கு மாற்றிக் கொண்டவன், அங்கேயே தாங்கிக் கொள்ள, ரோஸுக்குத்தான் பெரும் ஏமாற்றமாய்!

தனக்குள் பொங்கும் உணர்வுகளுக்கு ஏன் அவன் மட்டுமே காரணமாகிறான் என்ற கேள்விக்கு தான் விடை அவளிடம் இல்லை.

தன்னை அவன் தவிர்ப்பது புரிய, இதை எப்படிச் சீர் செய்வதென்ற கவலை மட்டுமே அவளிடம் அதிகமாய்!

அப்போதுதான் ஒரு நாள் எதிர்பாராத விருந்தாளியாய் வந்து சேர்ந்தார் வாசுகியின் தாய் கற்பகம்!

* * *

ஒரு நாள் மதியம் அனைவரும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நேரத்தில்தான், அலமேலு வந்து ஜெசிந்தாவை எழுப்பினாள்.

''அம்மா! பெரிய்ய்யாவோட ஒன்னு விட்ட தங்கச்சி வந்திருக்காங்க... கற்பகம்னு பேரு! வந்ததுமே உங்களைத்தான் கேட்டாங்க! அதான் எழுப்பினேன்'' என்றதும் உற்சாகத்துடன் எழுந்து வெளியே வந்தார் ஜெசிந்தா!



''வா... கற்பகம்...'' வாஞ்சையுடன் அழைத்தபடி வந்தவரை, ஓடி வந்து அணைத்துக் கொண்டாள் கற்பகம்.

பிறகு இருவருமாகப் பேசியபடி உள்ளே சென்றனர்.

''மல்லிகா... உன்னை எந்த முகத்தை வெச்சிட்டுப் பாக்கறதுன்னுதான் இத்தனை நாளா வரலை! இப்பதான் தெரிஞ்சுது.. குழந்தை உடம்பு சரியில்லாம ஆஸ்பத்திரியிலே இருந்த விஷயம்! இப்ப எப்படி இருக்கான்?'' ஆர்வத்துடன் விசாரித்தார்.

''நல்லாருக்கான் கற்பகம்! பழசை எல்லாம் மறக்கவே முடியலை... எனக்கு உதவப் போயித்தானே உங்க குடும்பத்துக்கும் அண்ணனுக்கும் பகையாச்சு... நான் தான் சாரி சொல்லணும்!'' குற்றவுணர்வுடன் வந்தது அவர் குரல்!

''இல்லை! மன்னிப்பு கேக்க வேண்டியது நான்தான்! மாப்பிள்ளையும் ரோசும் பிரிஞ்சதுக்கு முக்கியக் காரணமே என் பொண்ணு வாசுகிதான்!

''அப்ப எனக்கு ரோஸ் உன் பொண்ணு அப்படின்னு தெரியாது மல்லிகா... தெரிஞ்சிருந்தா இப்படி ஒரு தப்பு நடந்திருக்காது.

''ஆனாலும் இதை நாம தானே சரி பண்ணணும்னு மனசு கிடந்து அடிச்சிக்கிச்சு!

''அதான்... மனசு கேக்காம ஓடி வந்தேன்... எல்லாம் இந்த வாசுகி பண்ணின குளறுபடி... போ!'' குற்றவுணர்வுடன் குனிந்து கொண்டாள்.

''என்ன பண்றது கற்பகம்? மைக்கேல் பாவம்... ரொம்ப நல்ல பையன்னு ரோஸ் சொல்லுவா! நான் பாத்திருக்கேன் தவிர அவனோட பழகினதில்லை. நான் விரும்பின

பொண்ணு இன்னொருத்தரைக் கல்யாணம் செஞ்சிக்கப் போறதை அவனாலத் தாங்க முடியலை! பாவம்'' பெருமூச்சுடன் முடித்தார்.

''நான் அதைச் சொல்லை! இங்கே நடந்ததைச் சொல்றேன்... வாசுகி இங்கே வந்ததுமே இந்த வசதி வாய்ப்பெல்லாம் பாத்ததும், உடனே மனசு மாறிட்டா!''

''மைக்கேலை விட்டுட்டு தீரேனைக் கல்யாணம் செஞ்சிக்க சம்மதிச்சிட்டா... எங்களுக்கும் அப்ப ரொம்ப சந்தோஷம்... எப்படியாவது ரெண்டு குடும்பமும் சேர்ந்தாப் போதும்கிற தவிப்பு!''

''அதனாலேயே, அவ சொன்னதுக்கெல்லாம் நான் தலையாட்டினேன்... வந்ததுமே சிகாமணி அண்ணன் இங்கே நடந்ததெல்லாம் சொல்லிட்டாங்க!

''எனக்கு, உன் கல்யாணத்தால பிரிஞ்ச நம்ம குடும்பம், இந்தக் கல்யாணத்துல சேரணும்கிற ஆவல்!

''சிகாமணி அண்ணன் சொன்னதை வெச்சு எல்லாத்தையும் தப்பாவே முடிவு பண்ணி, வாசுகி தனக்கு சாதகமா இந்த கல்யாணத்துல இஷ்டமில்லைன்னு தீரேன் சொன்ன மாதிரி ரோஸ்கிட்டே சொல்லிட்டா!

''அவளும் அதை நம்பி தாலியைக் கழட்டிக் குடுத்துட்டுப் போயிட்டா!''

''நானும் அதுக்கு உடந்தையா இருந்தேன்னு நினைச்சா, இப்ப என் மேலயே எனக்கு வெறுப்பா இருக்கு!''

அவர் முடிப்பதற்குள், ''ஓ... ஜீஸஸ்'' என்ற சப்தத்துடன், ஏதோ தொப்பென்று விழும் ஒலி கேட்டு இருவரும் திரும்பினர்.



அறை வாசலில், கையிலிருந்த குழந்தையின் துணிகள் அடங்கிய கூடையை நழுவ விட்டபடி. அங்கு ரோஸ்தான் உறைந்து நின்றிருந்தாள்.

உடனே, எழுந்து ''என்னை மன்னிச்சிடும்மா ரோஸ்!'' என்றபடி ஓடிச் சென்று அவளுடைய கைகளைப் பிடித்து கண்ணீருடன் மன்னிப்புக் கேட்டார் கற்பகம்!

''முதலில் வாசுகி தீரேனை மணக்க மறுத்தது... மைக்கேலைத் தான் விரும்புவதாகப் பிடிவாதம் பிடித்தது... தன்னுடைய அண்ணன் விருப்பப்படி தன் மகளை அவர் மகனுக்கு திருமணம் செய்து பிரிந்திருந்த இரு குடும்பங்களையும் இணைக்க முடியாதோவென்று அவர் தவித்தது... சிவ பார்வதியின் திடீர் மறைவு...

''மூவரும் அங்கு வந்ததும் வாசுகிக்கு அந்த வீட்டின் செழுமையும், பணச்செருக்கும், பேராசையாய் கண்ணை மறைத்தது... சிகாமணி, முதல் நாள் நடந்த திருமணம் பற்றிக் கூறியது...

''வாசுகி திடீரென மனம் மாறித் தாயிடம் பேச, அவர் ஒப்புக் கொண்டது... தீரேன் பேசியது போலவே திரித்துக் கூறி ரோஸிடமே சாமர்த்தியமாகத் தாலியைக் கழட்டி வாங்கியது.

பிறகு மைக்கேலையும் அவளையும் தீரேனிடம் தனிமையில் பேசவும் விடாமல் சாமர்த்தியமாகத் திருப்பி அனுப்பியது.''

எல்லாவற்றையும் அவர் கூறிய போதுதான், அவளுக்கு எல்லாமே வாசுகியின் சதிதான் என்பதும், இதில் தீரேனின் பங்கோ, தவறோ ஏதுமில்லை என்பதும் புரிந்தன.

JUN 13 2010

தீரேனைப் பற்றி தவறாகவே கணித்திருந்த ரோஸுக்கு இது ஒரு சம்மட்டி அடியாய்... யாரோ தன்னைத் துண்டு துண்டாய் கூறு போட்டது போல்...!

* * *

உள்ளே, சிதைந்து போயிருந்த நெஞ்சம் தீரேனுக்காகப் பதறி அழ ஆரம்பிக்க... தான் அவனுக்கு செய்த கொடுமையின் அளவு இமயமாய்த் தெரிவதாய்!

சூறையாடும் புயலாய்... தேய்பிறை நிலவாய்... ரணப் பட்டது மனது!

''ஓ... ஜீஸஸ்! என்ன செய்து இந்தப் பாவத்தைக் கழுவப் போகிறேன்! ஏன் என்னை இப்படி ஒரு பாவியாக மாற்றினாய்...?'' ஓவென்று கூக்குரலிட்டு அழுதது இதயம்!

''தன் வாயையும் நாவையும் காப்பவர் இடுக்கண் வராமல் தம்மைக் காத்துக் கொள்வார்! மலைகளை இடம் பெயரச் செய்யும் அளவுக்கு நம்பிக்கை இருந்தாலும், அன்பு இல்லையேல் ஒன்றுமில்லை'' பைபிளின் வரிகள்தான் உடனே நினைவிற்கு வந்தன.

அவளுடைய நினைவுகளைக் கலைத்தது கற்பகத்தின் குரல்!

''நீயும் மைக்கேலும் இங்கிருந்து போனப்ப எனக்கு உங்க ரெண்டு பேரையும் பாத்தா பாவமா இருந்தது...

''ஆனாலும் என் பொண்ணு எங்க விருப்பப்படி தீரேனைக் கல்யாணம் செஞ்சுக்க சம்மதிச்சதுக்கு முன்னாடி... மத்ததெல்லாம் அப்ப பெரிசாத் தெரியலை.''

''அண்ணி காரியம் முடிஞ்சது... அப்பதான் நாங்க மாப்பிள்ளை கிட்டப் பேச முடிவு செஞ்சோம்... நாங்க மூணு பேருமே இங்கேதான் தங்கியிருந்தோம்!''



''அதுக்குள்ளேயே வாசுகியும் நானும் சேர்ந்து ஒரு திட்டம் போட்டு மாதிரிக் கல்யாணப் பத்திரிகை ஒண்ணு அடிக்கச் சொல்லி, டவுனிலே அடிச்சி எடுத்து வந்து மைக்கேலுக்கு அதை அனுப்பிட்டோம்!''

''அப்பதான் தனக்கு கல்யாணமானது தெரிஞ்சு, தனக்காகக் காத்திருக்காம, வேற ஒரு துணையை மைக்கேல் வாழ்க்கையில தேர்ந்தெடுத்துப்பாருன்னு வாசுகி சொன்னா... அதுவும் சரின்னுதான் எனக்குப் பட்டுது!''

''இது எதுவுமே வாசுகியோட அப்பாவுக்குத் தெரியாது!

''ஆனா, அதோட விளைவு இவ்வளவு பயங்கரமா இருக்குமின்னு சத்தியமா நானோ வாசுகியோ எதிர்பார்க்கலை!''

## 27

''முப்பது கும்பிட்டு முடிஞ்சி இதுபத்தி நானும் என் கணவரும் தீரேன்கிட்டப் பேசினப்ப அவர் சொன்ன பதில் எங்களை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கிடுச்சி!''

''மாமா... அத்தை! என்னை மன்னிச்சிடுங்க. எனக்குக் கல்யாணம் முடிஞ்சிடுச்சி... என்னைப் பொறுத்தவரைக்கும் ரோஸ்தான் என் ஒய்ஃப்!''

''அவ என்னை விட்டுப் பிரிஞ்சி போயிருந்தாலும் என்னிக்காவது ஒரு நாள், தன் தப்பை உணர்ந்து தேடி வருவா! எங்கம்மா விருப்பத்தோட நடந்த திருமணம் இது!

JUN 13 2010

''அவங்க ஆசீர்வாதம் எங்களை நிச்சயமா சேத்து வைக்கும்... வாசுகிக்கு பொருத்தமானவரு மைக்கேல் தான்... அவங்க காதலை சேத்து வைங்க.''

''நாங்க செஞ்ச தில்லுமுல்லு பொய் பிரட்டு எதுவுமே தெரியாம உறுதியா தன் முடிவை அவர் சொல்லிட்டாரு!''

உடனே ''தீரேன்...'' என்றலறியபடி அழ ஆரம்பித்த ரோஸை இருவருமாக சமாதானம் செய்ய, கற்பகம் தொடர்ந்தார்.

''வாசுகி கிட்ட வந்து சொன்னவுடனே அவளும் போய் பேசிப் பாத்தா... தாலியைக் கழட்டிக் குடுத்துட்டுப் போன நீ எங்கே திரும்பியா வரப் போறேன்னும், தன்னைத் தானே சிவ பார்வதி அத்தை இந்த வீட்டுக்கு மருமகளாக்க விரும்பினாங்கன்னும் அவர் கிட்டே வாதம் செஞ் சிருக்கா.''

''அவர் உடனே சொன்னாராம்... நான் உறவுல மணக்க ணும்னு அப்பா விரும்பினாங்க... உன்னைப் பாக்காம அம்மா எடுத்த முடிவு அது!

''ஆனா ரோஸைப் பார்த்தப்புறம் இவதான் உன் மனை வின்னு அம்மா கல்யாணமே பண்ணி வச்சிட்டாங்களே... என்னால அதை மாத்த முடியாது..... ரோஸை மறக்கவும் முடியாதுன்னு தீர்மானமா சொல்லி அனுப்பிட்டாரு!''

''அப்புறம் தான் எல்லாமே புரிஞ்சிருக்கு வாசுகிக்கு! தான், உனக்கும் மைக்கேலுக்கும் செஞ்ச பெரிய தப்பு உரைக்க, உடனே அழுதிட்டே வந்து மைக்கேலைப் பாக்கணும்னா!''

''அப்பதான் வாசுகி அப்பாகிட்ட எல்லாம் சொன் னோம். அவருக்கு பயங்கர அதிர்ச்சி. எங்களைத் திட்ட,

நாங்களும் கிளம்பி...

இன்னொரு அதிர்ச்சியும் காத்...

''பத்திரிகையைப் பாத்த அதிர்ச்சியில ... னாடியே மைக்கேல் தற்கொலை பண்ணிக்கிட்ட... தெரிஞ்சிக்கிட்டோம்! நீயும் திரும்பி அமெரிக்கா போயிட்டதாவும், உங்கப்பா இறந்திட்டதாவும் அவங்க சொன்னாங்க!''

''துக்கம் விசாரிக்க வந்தவங்க மாதிரிப் பேசிட்டு, வாசுகி யும் மைக்கேலும் நண்பர்கள்னு சொல்லிட்டு அங் கேருந்து கிளம்பினோம்!''

''ஒரு மரக்கட்டை மாதிரி வாசுகி ஓய்ஞ்சு போயிருந்தா! நாங்க நாகர்கோவிலுக்குத் திரும்பிப் போனப்புறம்தான் உடைஞ்சு அழவே ஆரம்பிச்சா!

''தான் பண்ணின தப்பால ஒரு உயிர் போனதை அவ ளால் தாங்கிக்க முடியலை... ரொம்ப துடிச்சா... அப்புறம் பிரமை பிடிச்ச மாதிரி இருந்தா... பிறகு நல்லா யோசிச்சி ஒரே வாரத்துல அந்த முடிவை எடுத்துட்டா!''

''அய்யோ... வாசுகியும் ஏதாவது பண்ணிக்கிட்டாளா?'' கண்ணீருடன் பதறினாள் ரோஸ்!

''இல்லடா! மைக்கேலுக்கு தான் செஞ்ச துரோகத்துக்கு சாகற வரைக்கும் கர்த்தர் திருச்சபையில தொண்டு செஞ்சு தன்னையே அர்ப்பணிக்கிறேன்னு போய் மடத்துல சேர்ந்து கன்யாஸ்திரி ஆயிட்டா!''

முகத்திலறைந்து கொண்டு அழ ஆரம்பித்த கற பகத்தை இழுத்து அணைத்துக் கொண்ட ஜெசிந்தா ''கடவுளே...'' வேதனையுடன் வருந்தி தங்கைக்கு ஆறுதல் கூறினார்.

JUN 13 2010

தெரியாமல் தவறு செய்தாலும், அதற்கு தன் வாழ்க்கையையே அர்ப்பணித்த வாசுகியின் தொண்டுள்ளம் புரிய, சிலிர்த்துப் போனாள் ரோஸ்!

''இப்போ வாசுகி எங்கே இருக்கா?'' தவிப்புடன் விசாரித்தாள்.

''இங்கே பக்கத்துல ஒரு கருணை இல்லம் இருக்கே... அங்கேதான் வந்திருக்கா! நாகர் கோவில்லதான் இருந்தா... போன மாசம் தான் இங்கே வந்தா!

''அப்போதான் உன்னையும், தீரேனையும் குழந்தைகளையும் பாத்திருக்கா! உன்னோட பிறந்தநாளுக்கு அங்கே போனீங்களாமே!''

''உடனே எனக்கு போன் பண்ணி நீ குழந்தைகளோட தீரேனோட சேர்ந்து வாழறதா சொல்லி ரொம்ப சந்தோஷப் பட்டா!''

''அப்பதான் நான் சிகாமணி அண்ணனுக்கு போன் பண்ணினேன்! அவர்தான் எல்லாம் சொன்னாரு... மல்லிகா அம்மா பொண்ணு ரோஸ்தாம்மா நம்ம சின்னய்யா கல்யாணம் பண்ணிக்கிட்ட பொண்ணுன்னு சந்தோஷப் பட்டாரு!''

''நம்ம மல்லிகாவோட பொண்ணுக்கா நாம துரோகம் செய்ய நினைச்சோம்னு உறுத்திச்சி. உடனே வரணும்னு தோணினாலும் எந்த முகத்தோட வருவேன்!

''இப்பதான் எல்லாம் சரியாயிடுச்சேன்னு விட்டுட்டாலும் சாரானவை... ம்... வாசுகியைப் பாக்க நேத்து வந்தப்பதான் அவ உங்களைப் பாத்து வரச் சொல்லி கட்டாயப்படுத்தி அனுப்பி வைச்சா! அவங்கப்பா வர மாட்டேன்னுட்டாரு!



''இன்னிக்கு ராத்திரிக்கு ட்ரெயின்லே புக் பண்ணி இருக்கோம்... நாங்க கிளம்பணும்!'' கவலையுடன் முடித்தார் கற்பகம்!

''இல்லை! என் கூட நீ ஒரு மாசமாவது தங்கிட்டுத் தான் போகணும்! உனக்கு இங்கே ஒரு வேலை இருக்கு! இவங்க ரெண்டு பேரும் சந்தோஷமா இல்லை கற்பகம்!'' வென்று குமுறலுடன் முடிப்பதற்குள், ''அம்மா...'' வென்று எச்சரிக்கைக் குரலெழுப்பினாள் ரோஸ்!

''நீ சும்மாயிரு ரோஸ்... இவ என் தங்கை! அவளுக்குத் தெரியணும்... அவதான் இதை சரி செய்யணும்... நான் உடனே தீரேனைக் கிளம்பி வரச் சொல்றேன்.

''நீ முதல்லே குளிச்சிட்டு, உன் கல்யாண நாளுக்கு தீரேன் வாங்கித்தந்த பட்டுப் புடவையைக் கட்டிட்டு தயாராயிரு! நாங்க போய்ப் பேசறோம்!''

அவர் கூறியதும் கற்பகம் புரியாமல் சகோதரியை ஏறிட்டார்.

''கற்பகம்! இவளுக்கு ஈகோ... வாசுகி சொன்னதை வச்சிட்டு தீரேனைத் தப்பாவே நினைச்சிட்டு இன்னும் விலகியே இருக்கா.

''மாப்பிள்ளையும் மனசு விட்டுப் பேசலை! அவருக்கு இதெல்லாம் தெரியாது போலருக்கே! அவரும் இவளைத் தப்பா நினைச்சிட்டிருக்காரு! நாம தான் தெளிய வைக்கணும்... வா!

கற்பகத்துடன் அவர் ஹாலுக்குச் செல்ல, ரோஸுக்கோ வானத்தில் பறப்பதைப் போல்!

உண்மையை உணர்ந்த ஏகாந்தப் பறவையாய் இதயம் சடசடத்தது!

JUN 13 2010

"தீரேன் மேல் எந்தத் தவறுமில்லை... இது பிறர் செய்த சூழ்ச்சி... நான் தான் அவனைத் தவறாக கணித்திருக்கிறேன்! இனி எல்லாம் சுகமே!'' உள்ளம் துள்ளிச் சிறகடித்தது.

வேகமாகக் குளித்து விட்டு வந்து பார்கவிக்குப் பாலூட்டி விட்டு, புஷ்பத்தின் உதவியுடன் இளம் ரோஜா நிறப் பட்டுப் புடவையை அணிந்தபோது, என்னவோ அவன் ஸ்பரிசமே தன்னில் நிறைவது போல்!

பிரிதல்... காதலைச் சொல்ல, மௌனமெனும் பூட்டை உடைத்தது மோகம்!

அவனுடைய காரின் ஓசை கேட்டும், தன்னை அழைக்கத் தவமிருந்த அந்த நிமிடங்கள் கொடுமையான தாய்!

பசலை நோய் படர்ந்த சங்க இலக்கியத் தலைவியின் நிலையில் அமர்ந்திருந்தாள் அவள்.

இப்போது, ஒரு வாரமாக அவள் அவனுடைய அறையிலிருப்பதால், மெல்ல எழுந்து சென்று அவன் அலமாரியில், அந்தப் போர்வையில், வெள்ளை தலையணையில் அவன் வாசமும் சுவாசமும் தேட ஆரம்பித்தது மனது!

**இன்று...**
**ஒற்றைப் பார்வையால்**
**என் உயிரைத் தீண்டு!**
**மயிலிறகின் வருடலாய்...**
**சொர்க்கத்தின் தீர்ப்பாய்...**
**ஏற்கிறேன் நான்!**
**சிறகில்லாமல் பறந்த அந்த**



*சின்னஞ்சிறு ஊஞ்சலின்*
*சத்திய வார்த்தைகள்*
*சப்தமின்றி*
*சத்தம் படிக்கின்றன!*
*அவன்...*
*சம்மதம் கிடைக்க*
*காத்திருந்த நிமிடங்கள்*
*கவிதையாய்க் கரைகின்றன!*
*நான்...*
*உனக்காக மலர்ந்த*
*காதல் மலர்!*
*உன் நேசத்தில் மட்டுமே*
*நம்பிக்கை வைத்திருக்கிறேன்*
*நான்!*
*மௌனத் தவிப்புடன்...*
*மகிழ்ச்சி மத்தாப்பாய்...*
*மழைக்கால மின்மினியாய்...*
*மறுகித் தவித்திருக்கிறது*
*இந்த தேவ ரோஜா!*

## 28

அலுவலகத்திலிருந்து பேக்டரிக்குக் கிளம்பிய தீரேனை செல் அழைக்க எடுத்தால், ஜெசிந்தாதான் பரபரப்புடன் பேசினார்.



JUN 13 2010

"மாப்பிள்ளை! உடனே கிளம்பி வீட்டுக்கு வாங்களேன்... முக்கியமான விஷயம் பேசணும்... ஊரிலிருந்து ஒருத்தர் வந்திருக்காங்க! வரீங்களா? ஆவலுடன் கேட்டார்.

"ம்... பேக்டரிக்கு கிளம்பிட்டிருந்தேன்... வரேன் அத்தை!" என்றபடி வீட்டுக்குக் கிளம்பினான்.

வீட்டிற்கு வந்ததும், கற்பகத்தைப் பார்த்து வியந்து வரவேற்றவன், உள்ளே சென்று முகம் கழுவித் தயாராகி வரும் வரை, இருவருமே காத்திருந்தனர்.

பிறகு அவனுடைய அறைக்கே சென்று தவிப்பும் குற்றவுணர்வுமாக, அவனிடம் எல்லா உண்மைகளையும் கற்பகம் கூற, அதிர்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருந்த தீரேனுடைய உடல் நாணேற்றிய வில்லாய் விறைத்தது.

அவனுடைய முகம் பலவித உணர்ச்சிகளைப் பிரதிபலிக்க, ஜெசிந்தா அமைதியாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

இறுதியாகக் கற்பகம் கண்ணீருடன் மன்னிப்பை வேண்டியபடி கைகூப்பி அவன் முன் நின்றாள்!

எல்லாவற்றையும் கேட்டவுடன் விழிகள் செவ்வரியோடி சிவக்க, அவரிடம் திரும்பியவன் ஒரேயொரு கேள்விதான் கேட்டான்!

"இதை ஏன் நீங்க முன்னாடியே வந்து சொல்லலை! சொல்லியிருந்தா எவ்வளவோ பிரச்னைகளைத் தவிர்த்திருக்கலாமே?" கூர்மையுடன் வினவினான்.

உடனே வாயைப் பொத்தி குலுங்கி அழத் துவங்கியவர், சோர்வுடன் நிமிர்ந்து.

"எனக்கு உங்க முகத்தில முழிக்கவே கஷ்டமா வெக்கமா இருந்தது! ரோஸும் அமெரிக்கவுக்குப் போயிட்டதா கேள்விப்பட்டேன்!



"சிகாமணி அண்ணனுக்குப் போன் செஞ்சு இடையில விசாரிச்சப்பதான் நீங்க அதைப் பத்திக் கவலைப்படாம தொழில்லே கவனத்தை செலுத்தறது தெரிஞ்சுது!

"நாளடைவிலே மனசு மாறி உங்களுக்குன்னு ஒரு வாழ்க்கையை அமைச்சிப்பீங்கன்னு நினைச்சிதான் எங்க பழசைக் கிளற வேண்டாமேன்னு விட்டுட்டோம்! எங்களை மன்னிச்சிடுங்கப்பா!" கண்ணீருடன் இறைஞ்சினார்.

அப்போதுதான் வாய் திறந்தார் ஜெசிந்தா.

"தீரேன்... இப்பப் புரியுதா? ரோஸ் ஏன் உங்களை விட்டு விலகிப் போனா அப்படின்னு!"

"அவ... உங்களை உயிரா நேசிக்கிறாப்பா! இதெல்லாம் தெரிஞ்சதும் ரொம்ப அதிர்ந்து போயிட்டா! உங்க அறையிலதான் இருக்கா... இங்கே வரச் சொல்லவா?" மெல்லக் கேட்டார்.

அவன் மெதுவாகத் தலையசைத்ததும், இருவரும் எழுந்து வெளியேறினர்.

இப்போது, சத்யனுக்கு உடல் நிலை சரியில்லாததிலிருந்து, சிவபார்வதி இருந்த அறையில் தான் அவன் தங்கி இருந்தான்.

அந்த அறைக்குள்ளேயே கூண்டுப் புலியாய் நடந்து கொண்டிருந்தவனுடைய இதயம், சில்லுகளாய் சிதறியிருந்தது.

அவன் வாழ்க்கையில்... ஒரு பெண், அவனை சுலபமாக முட்டாளடித்திருக்கிறாள்... இன்னொருத்தி அதை நம்பி அவனை வெறுத்திருக்கிறாள்... எப்படி ஏமாற்றப் பட்டிருக்கிறேன் நான்... ம[illegible]

JUN 13 2010

ஆனால், சிறு ஆறுதல்... வாசுகியின் பேச்சைக் கேட்ட பிறகே ரோஸ் பிரிந்து சென்றிருக்கிறாள் என்ற உண்மை அறிந்ததும்!

அதுவே அவனுடைய சீற்றம் அதிகரிக்கவும் காரணமாய்... என்னை நம்பாமல் என்னிடம் ஒரு வார்த்தை கூட விளக்கம் கேட்காமல் சென்றிருக்கிறாளே என்ற கோபம் நீறு பூத்த நெருப்பாய்!

* * *

அதே நேரம் அறைக் கதவு திறக்கத் திரும்பினால், திருமண நாளன்று பார்த்த அதே கோலத்துடன் நின்றிருந்தாள் ரோஸ்!

இதயத்தின் ஆழத்திலிருந்து பொங்கிய நேச உணர்வை உடனே அடக்கியவன், அவளையே கூர்ந்தபடி அமைதியாக நின்றிருந்தான்.

எல்லா உண்மைகளும் தெரிந்ததும், அவன் தன் மீது குற்றமில்லை என்பது புரிந்தது. ஆவலுடன் ஓடி வந்து தன்னை அணைத்துக் கொள்வானென்ற ரோஸின் எதிர்பார்ப்பு பொய்த்துப் போனது!

வார்த்த சிலை போல் இறுகி நின்றிருந்தவனைப் பார்த்தாலே, அடி வயிற்றில் சில்லிட்டது!

விழிகளில் மையலும், காதலுமாய் வந்தவளின் முகமே மாறிவிட மிரட்சியும் பயமும் அவளுள் விரவிப் பரவின.

நெஞ்சிற்குள் நெருப்பாய் ஒரு உணர்வு தகிக்க, நொறுங்கிப் போனாள்.

என்ன செய்வதென்று புரியாமல் சிறிது நேரம் அவனையே பார்த்திருந்தவள், மெதுவாகத் தன் நிலை உரைக்க ஆரம்பித்தாள்.



“தீரேன்... உங்களுக்கு எல்லா உண்மையும்... நான் ஏன் அன்னிக்கு விலகிப் போனேன்னு புரிஞ்சிருக்குமே...” மெல்ல நிறுத்தினாள்.

அதற்கு பதிலே சொல்லாமல் அமைதியாக ஜன்னல் புறம் திரும்பி நின்றிருந்த அவனது தோற்றம் விதிர்க்கச் செய்ய, மெதுவாகத் தொடர்ந்தாள்.

“வாசுகி சொன்னதைக் கேட்டப்புறம் என்னால தாலியைக் கழட்டிக் குடுத்துட்டுப் போறதைத் தவிர வேற வழி தெரியலை!” கலக்கத்துடன் முடித்தாள்.

திடீரென்று திரும்பியவனுடைய முகம், கடும் சீற்றமாய்!

அவளுடைய இதயம் படபடக்க, உடலும் உள்ளமும் அப்படியே தொய்ந்தன!

மழை வரக் காத்திருக்கும் வறண்ட பாலையாய், விழிகள் அவனையே ஏக்கமும் எதிர்பார்ப்புமாய் நோக்கின!

“அப்போ... வாசுகி சொன்னதை அப்படியே நம்பியிருக்கே! என் மேல உனக்கு நம்பிக்கை இல்லை! அப்படித்தானே? உனக்கு தாலி கட்டினவன் நான்... உன்னை முதல் நாளிரவு மனைவியா ஏத்துக்கிட்டவன் நான்!”

“என்கிட்டே என்ன ஏதுன்னு விளக்கம் கேட்கக் கூட உனக்கு நேரமில்லை... மனசில்லை இல்லை...? அந்த அளவுக்கு என் மேல நம்பிக்கை பாசம்... ஹும்.. அப்படி நம்பிக்கை இல்லாம சந்தேகப்படறவ எப்படி என் கூட... சே!” தனக்குள்ளேயே பொங்கிக் குமுறினான் அவன்!

தன்னை அவள் நம்பவில்லையே என்று அவன் கொதித்திருப்பது புரிய, ஒரு கணம் துவண்டவளுக்கு, உடனே தன்னிலை விளக்கம் அளிப்பது தான் தீர்வென்பது புரிந்தது!

JUN 13 2010

## 29

''தீரேன்... நான் ஏன் அவளை நம்பினேன்றதை சொல்றேன்... அப்புறம்... உங்க இஷ்டம்!'' என்று பேச ஆரம்பித்தாள்.

''முதல்லே அவ சொன்னதே எனக்குள்ளே பயம் வரக் காரணமாயிடுச்சி! மதம் விட்டு மதம் மாறி கல்யாணம் செஞ்சுக்கிட்டா ஊர்க்காரங்களே சேர்ந்து மைக்கேலை கொன்னாலும் கொன்னுடுவாங்கன்னப்ப எனக்கு அப்படியே நடுங்கிப் போயிடுச்சு.''

''வாசுகியோட அப்பா கிட்டே நீங்க இதெல்லாம் சரி வராதுன்னு... இப்பதான் புரிஞ்சிக்கிட்டேன்... அம்மா வோட நிலைமைக்காகத்தான் இப்படி ஒரு நாடகமாட வேண்டியதாப் போச்சு... குடும்பப் பழக்க வழக்கம் பாரம் பரியம் எல்லாம் புரிஞ்சிக்காம இப்படி நடந்திட்டே னேன்னு வருத்தப்பட்டதா அவ சொன்னா!''

''நம்ம கல்யாணத்தைப் பத்தி தனக்குத் தெரியும்... உங்கம்மாவுக்காகத்தான் இப்படி ஒரு தப்பை செஞ்சிட் டேன்னு நீங்க அவ அப்பாகிட்டே புலம்பினதா வாசுகி சொன்னப்ப, என் உயிரே போன மாதிரி இருந்தது எனக்கு!''

''அப்பதான் காதல், கல்யாணம் இதிலெல்லாம் நம் பிக்கையில்லாத... விருப்பமில்லாத உங்க பேச்சு ஞாபகம் வந்தது!

''ஆனா, முதல் நாள் ராத்திரி நடந்தது... நம்ம ரெண்டு பேருக்கும் மட்டும்தானே தெரியும்... அதை உங்களால



மறுக்க முடியுமா இல்லை மறக்கத்தான் முடியுமான்னு யோசிச்சப்ப. செத்துடலாம்னு இருந்தது.''

''அப்பதான் வாசுகி சொன்னா... நான் ஒரு கிறிஸ்டி யன்கிறதால தாலி சென்ட்டிமெண்ட் எல்லாம் எதுக் குன்னு கேட்டா!

''தீரேனே இந்தத் தாலியை மதிக்கலை... எப்படி அதைத் திருப்பிக் கேக்கறதுன்னு சொல்லி அவங்க அம்மாகிட்டே வருத்தப்பட்டதாவும் உங்களுக்கு இந்தக் கமிட்மெண்ட்டிலே இஷ்டமில்லைன்னும் சொன்னப்ப நான் சிதைஞ்சு சிதறிப் போனேன்!''

''அப்போதான் வாசுகி அந்தக் காரியத்தை செஞ்சா! என் கழுத்தில இருந்த தாலியை அவளே சட்டுன்னு கழட் டிட்டா! என்னை யோசிக்கவும் விடலை... பேசவும் விடலை... இது வெறும் நடிப்புதானேன்னு சொல்லிட்டு வேகமா வெளியே போயிட்டா!

சட்டென்று அவன் முகம் மேலும் இறுகிவிட... உதடுகள் ''அடிப்பாவி'' என்று முணுமுணுத்தன!

ஆனாலும் விடாமல் தொடர்ந்தாள் அவள்.

''என் மனசுல பல குழப்பங்கள்... இது தப்பில்லை யான்னு ஒரு பக்கம் மனசு துடிக்க, மறுபக்கம் இது சந்தர்ப்பத்துக்காக நடந்த பொய்யான ஒரு சடங்கு தானே? புரியாம தவிச்சுப் போய் அழுதிட்டே இருந்த நான் விடியறப்ப தான் தூங்கவே ஆரம்பிச்சேன்.

''ஒன்பது மணிக்கு மேல யாரோ கதவைத் தட்டினாங்க... பாத்தா மைக்தான்! கீழே அத்தையோட ஃப்பூநெரல் ஆரம்பிக்கப் போவுதுன்னான்!''

''உங்களை விட்டுட்டு எப்படிப் போறது... என் மனசும் உடம்பும் பதறிப் போச்சு!''

JUN 13 2010

''கீழே வந்தா, நிறைய சடங்குகள்.. அப்புறம் எல்லாரும் க்ரேவ்யார்டுக்குப் போனீங்க! அப்பதான் கற்பகம் ஆன்ட்டி என்னை அழைச்சிட்டுப் போய் தனியாப் பேசினாங்க!''

''எங்க உறவுக்காரங்கள்லாம் முரட்டு மனுஷங்க... மைக்கேலோட உயிருக்கே ஆபத்துன்னாங்க!''

''இதெல்லாம் உங்க குடும்பத்துக்கு ஒத்து வராதுன்னாங்க... எனக்கு உடனே முன்னாடி பார்த்த சில தமிழ் சினிமாக்கள் தான் ஞாபகம் வந்தது!

''அவங்க குடும்பம் ரொம்ப வருஷம் கழிச்சி ஒப்புக்கொண்ணா சேரலாமின்னு பாத்தா இப்படி ஒரு தடையான்னு வருத்தப் பட்டாங்க!

''எங்களை உடனே கிளம்பி ஊருக்குப் போகச் சொன்னாங்க... அதையும் மீறி நாங்க. இங்கே இருந்தா, மைக்கேலுக்குத்தான் நல்லதில்லைன்னாங்க...

''உங்க ரெண்டு பேருக்கும் கூடிய சீக்கிரமே கல்யாணம் நடக்கப் போறதுன்னும், உங்ககிட்டே பேசியாச்சு, நீங்க சம்மதிச்சிட்டீங்கன்னும் சொன்னப்ப, ஒய்ஞ்சு போனேன் நான். எனக்கு வேற வழி தெரியலை... கிளம்பினேன்!''

''ஆனா அதுக்கு முன்னாடி உங்களோடப் பேசணும்னு தோணுச்சி! அதான் உங்க ரூமுக்கு வந்தேன்! நான் பேச ஆரம்பிக்கறதுக்கு முன்னாடியே தாலியை எடுத்து வாசுகி உங்ககிட்ட குடுத்துட்டா!''

''ஒரு நிமிஷம் நீங்க தயங்கின மாதிரித் தெரிஞ்சுது... ஆனா உடனே அது மாறி, ''உனக்கு எந்த வருத்தமுமில்லையான்னு கேட்டீங்க! இன்னொருத்தியை கல்யாணம் செஞ்சுக்க சம்மதிச்சவர்கிட்ட நான் என்ன எதிர்பார்க்க முடியும்?''



''அதான் 'இல்லை'ன்னு சொல்லிட்டுக் கிளம்பி டேன்... ஆனா நான் காரிலே வெடிச்சிச் சிதறி அழுதது மைக்கேலுக்கு மட்டும் தான் தெரியும்! அவன் கூட இப்ப சாட்சிக்கு நம்ம கூட இல்லை!'' ஒரு பெருமூச்சுடன் முடித்தாள்.

''எப்படியும்... என்னை நீ நம்பலை... இது மாதிரி நான் செய்ய மாட்டேன்னு உனக்கும் தோணலை... இல்லை...?'' தீரேன் ஒரு மாதிரிக் குரலில் கேட்டான்.

''என்னால எப்படி நம்ப முடியும் தீரேன்... உங்களைப் பத்தி எனக்கு என்ன தெரியும்? ஒரு வாரம் கூட இல்லை நாம பழகினது! அதிலே எந்த அளவுக்கு புரிஞ்சிக்க முடியும்?'' விழிகள் கண்ணீரில் நீந்தத் தவிப்புடன் கேட்டாள்.

''எந்த நம்பிக்கையும் இல்லை... என்னைப் புரிஞ்சுக்கவும் இல்லை! ஆனா, என்னைப் பிரியணும்னப்ப உடைஞ்சி போயிட்டேன்னு சொல்றே... நான் இந்தக் கல்யாணம் தப்புன்னு வருத்தப்பட்டப்ப செத்துடலாமான்னு இருந்ததுன்றே!

''இந்த கமிட்மெண்ட்டைத் தொடர எனக்கு இஷ்டமில்லைன்னு தெரிஞ்சதும் சிதைஞ்சு சிதறிப் போனேன்றியே! ஏன்?

''எல்லாத்துக்கும் மேல அவ்வளவு நம்பிக்கையில்லாதவ உன்னையே எனக்கு எப்படித் தந்தே... ஏன் ரோஸ்லின்?'' ஆழந்த குரலில் கூர்மையும் சீற்றமுமாய்க் கேட்டான்.

''ஏன்னா... ஏன்னா... நான் முதன் முதலாப் பாத்தப்பவே என் மனசை உங்ககிட்டே பறி கொடுத்திட்டேன் தீரேன்... உங்களை என் உயிரா விரும்ப ஆரம்பிச்சிட்டேன்!''

அதான் அன்னிக்கு கல்யாணத்துக்கு உடனே ஒத்துக்கிட்டேன்.''

திக்கித் திணறி முடித்து விட்டு சரிந்து அமர்ந்து கைகளில் முகம் புதைத்து விம்ம ஆரம்பித்தாள்.

## 30

நம்ப முடியாத ஒரு அதிசயம் நிகழ்ந்தது போலவும், வெகு நாளையப் புதிரின் முடிச்சு அவிழ்ந்ததைப் போலவும் ஒரு மின்னல் கண்களில் தெறிக்க அவளையே பார்த்திருந்தவன், வேகமாக அருகில் வந்து அவளைத் தூக்கி நிறுத்தினான்!

''இப்போ நீ சொன்னது உண்மையா? இல்லை... நான் ஏதாவது தப்பாக் கேட்டுட்டேனா? நான் விரும்பின மாதிரியே நீயும் என்னை நேசிச்சியா?'' தவிப்புடன் வினவினான்.

கண்ணீருடன் நிமிர்ந்தவளின் முகம் குழப்பமாய்!

அவன் உதிர்த்த வார்த்தைகளின் அர்த்தம் புரிந்த தவிப்பு!

''நான்... உண்மையைத்தான் சொன்னேன்... அப்படி உங்களை விரும்பலைன்னா, எப்படி உங்க விருப்பத்துக்கு மட்டும் அன்னிக்கு சம்மதிச்சிருப்பேன்? ஆனா நீங்க என்னை நேசிச்சேன்னது எனக்காக சொன்ன பொய்யில்லையே?''

அவள் சிணுங்கலாகக் கேட்டதும், வேகமாக இழுத்து அணைத்து அவளை முத்தமிட ஆரம்பித்தான் தீரேன்.



நெஞ்சிற்குள் பெரும் பூ மழையாய் அவளுள் காதல் பரவ, தேகமும் இதயமும் இணைந்து சிலிர்த்தன.

இதை அவன் சத்தியமாக எதிர்பார்த்திருக்கவில்லை.

மார்கழிப் பனிச் சாரலாய்... பூஞ்சோலையே பெண்ணானதைப் போல்... ஒரு இனிய கவிதைத் தொகுப்பாய்... அவனுடைய மார்பில் தஞ்சம் புகுந்திருந்தாள் அவள்!

யுகங்கள்... அங்கு நொடிகளாவதைப் போல்!

சிறிது நேரம் கழித்து மெதுவாக விலகியவள், ''இந்தக் கேள்விகள்... குற்றச்சாட்டுகள் எல்லாம் எனக்கு மட்டும் தானா? எனக்கும் சில உண்மைகள் தெரிஞ்சாகணும்'' தவிப்புடன் வினவினாள்.

''ஓ! கேளுங்க மைலார்ட்... பதில் சொல்றேன்!

''ஆனா அதுக்கு முன்னாடி ஒரு சின்ன சந்தேகம்... எனக்கும் ஒரு உண்மை தெரிஞ்சாகணும் இன்னிக்கும் புடவை கட்டத் தெரியாம உள்ளே பைஜாமாதானா?''

ஒற்றைக் கண் சிமிட்டியபடி அவன் வினவ,

''ச்சீச்சீ... போங்க'' என்றபடி நாணத்துடன் விழிகளைத் தழைத்தாள் அவள்.

''ஏய்... என்ன வெக்கமா? எங்கே போறது நான்? அப்புறம்... ஒரு சின்ன ரிக்வெஸ்ட்... என்னவாயிருந்தாலும் அதை இங்கேருந்து தான் கேக்கணும்!'' என்றபடி அவளை இழுத்துத் தன் கை வளைவில் நிறுத்திக் கொண்டான்.

''காதல், கல்யாணம் இதிலெல்லாம் நம்பிக்கை இல்லாத நீங்க எப்படி...?'' சிணுங்கலாகக் கேட்டாள் அவள்.

''முதல்லே உன்னைப் பாத்தவுடனே காதல்னு நான் சொல்ல மாட்டேன்... இங்கே வந்தப்புறம் கூட அழகான ஒரு பொண்ணுங்கற அபிப்ராயம் மட்டும்தான்!''

JUN 13 2010

அதான் அன்னிக்கு கல்யாணத்துக்கு உடனே ஒத்துக்கிட்டேன்.''

திக்கித் திணறி முடித்து விட்டு சரிந்து அமர்ந்து கைகளில் முகம் புதைத்து விம்ம ஆரம்பித்தாள்.

## 30

நம்ப முடியாத ஒரு அதிசயம் நிகழ்ந்தது போலவும், வெகு நாளையப் புதிரின் முடிச்சு அவிழ்ந்ததைப் போலவும் ஒரு மின்னல் கண்களில் தெறிக்க அவளையே பார்த்திருந்தவன், வேகமாக அருகில் வந்து அவளைத் தூக்கி நிறுத்தினான்!

''இப்போ நீ சொன்னது உண்மையா? இல்லை... நான் ஏதாவது தப்பாக் கேட்டுட்டேனா? நான் விரும்பின மாதிரியே நீயும் என்னை நேசிச்சியா?'' தவிப்புடன் வினவினான்.

கண்ணீருடன் நிமிர்ந்தவளின் முகம் குழப்பமாய்!

அவன் உதிர்த்த வார்த்தைகளின் அர்த்தம் புரிந்த தவிப்பு!

''நான்... உண்மையைத்தான் சொன்னேன்... அப்படி உங்களை விரும்பலைன்னா, எப்படி உங்க விருப்பத்துக்கு மட்டும் அன்னிக்கு சம்மதிச்சிருப்பேன்? ஆனா நீங்க என்னை நேசிச்சேன்னது எனக்காக சொன்ன பொய்யில்லையே?''

அவள் சிணுங்கலாகக் கேட்டதும், வேகமாக இழுத்து அணைத்து அவளை முத்தமிட ஆரம்பித்தான் தீரேன்.



நெஞ்சிற்குள் பெரும் பூ மழையாய்
காதல் பரவ, தேகமும் இதயமும் இணைந்து சிலிர்த்த
இதை அவன் சத்தியமாக எதிர்பார்த்திருக்கவில்லை.

மார்கழிப் பனிச் சாரலாய்... பூஞ்சோலையே பெண்ணானதைப் போல்... ஒரு இனிய கவிதைத் தொகுப்பாய்... அவனுடைய மார்பில் தஞ்சம் புகுந்திருந்தாள் அவள்!

யுகங்கள்... அங்கு நொடிகளானதைப் போல்!

சிறிது நேரம் கழித்து மெதுவாக விலகியவள், ''இந்தக் கேள்விகள்... குற்றச்சாட்டுகள் எல்லாம் எனக்கு மட்டும் தானா? எனக்கும் சில உண்மைகள் தெரிஞ்சாகணும்'' தவிப்புடன் வினவினாள்.

''ஓ! கேளுங்க மைலார்ட்... பதில் சொல்றேன்!

''ஆனா அதுக்கு முன்னாடி ஒரு சின்ன சந்தேகம்...
எனக்கும் ஒரு உண்மை தெரிஞ்சாகணும் இன்னிக்கும்
புடவை கட்டத் தெரியாம உள்ளே பைஜாமாதானா?''

ஒற்றைக் கண் சிமிட்டியபடி அவன் வினவ,

''சீச்சீ... போங்க'' என்றபடி நாணத்துடன் விழிகளைத்
தழைத்தாள் அவள்.

''ஏய்... என்ன வெக்கமா? எங்கே போறது நான்? அ
புறம்... ஒரு சின்ன ரிக்வெஸ்ட்... என்னவாயிருந்தாலு
அதை இங்கேருந்து தான் கேக்கணும்!'' என்றபடி அவளை
இழுத்துத் தன் கை வளைவில் நிறுத்திக் கொண்டான்.

''காதல், கல்யாணம் இதிலெல்லாம் நம்பிக்கை
இல்லாத நீங்க எப்படி...?'' சிணுங்கலாகக் கேட்டாள் அவ

''முதல்லே உன்னைப் பாத்தவுடனே காதல்னு நா
சொல்ல மாட்டேன்... இங்கே வந்தப்புறம் கூட அழகா
ஒரு பொண்ணுங்கற அபிப்ராயம் மட்டும்தான்!''

JUN 13 2010

''ஆனா, அம்மா நீதான் என் மனைவின்னு சொன்னப்ப... உன் கழுத்தில நான் தாலி கட்டின அந்த மந்திரத் தருணத்திலதான் உன்னை நேசிக்கவே ஆரம்பிச்சேன்!''

''அது என்னவோ புரியலை! அந்த நிமிஷத்திலிருந்து இனிமே நீதான் என் மனைவி. என்னில் பாதி... என் உயிர்... என் துணை... உன்னை என் உயிராப் பாத்துக்கணும்னு முடிவு பண்ணினேன்!''

''அதனாலதான் அன்னிக்கு நீ எனக்கு ஆறுதல் சொன்னப்ப, என்னையே மறந்து உன்னை என்னுடையவளாக் கிட்டேன்!''

''ஆனா, அதுக்கப்புறம் நீ டயர்டாத் தூங்கிட்டே... உன்னைப் பாத்துக்கிட்டே ரசிச்சிட்டே இருந்ததிலே நேரம் போனதே தெரியலை.. அப்புறம்தான் நான் என் ரூமுக்குப் போனேன்!''

''உன் நினைவுல தூக்கமே வரலை! சும்மாப் படுத்து யோசிச்சிட்டிருந்தேன்... அப்பதான், சிகாமணி அண்ணனும் நர்ஸும் வந்து எழுப்பினாங்க!''

''அம்மா ரொம்ப க்ரிட்டிகலா இருக்கறதா சொன்னாங்க. பதறிப்போய் பார்த்தா அம்மா...! அப்புறம் பல சடங்குகள்.

''விடிகாலையிலே உன் கிட்ட சொல்லி எழுப்பலாமின்னு மாடிக்கு வந்தா, மைக்கேலோட தோள்லே சாய்ஞ்சு நீ அழுதிட்டிருந்தே!''

''உனக்கும் விஷயம் தெரிஞ்சுடுச்சின்னு உணர்ந்து திரும்பும் போதே. மனசுல ஒரு வலி!

''இப்பவும்... நேத்து நமக்குள்ளே இவ்வளவு நடந்தப்புறமும், நீ சாய்ஞ்சு அழ என் தோள் தேவைப்படலையே உனக்கு... அப்ப எந்த அளவுக்கு நான் உன்னை பாதிச்சிருக்கேன்னு புரிஞ்சுது!



''எல்லாரும் வந்தாங்க... ஆறுதல் சொன்னாங்க! ஆனா நீ மட்டும் என் பக்கத்திலக் கூட வரலை!

''அப்பதான் எனக்குப் புரிஞ்சுது... ராத்திரி நடந்தது உனக்குப் பிடிக்கலைங்கிறதை உணர்ந்தேன்... அதனால என்னை நீ வெறுத்திட்டியோன்னுகூட பயம் வந்தது!

''அம்மாவோட இழப்பு... உன் பாராமுகம் எல்லாம் சேர்ந்து என்னை ரொம்ப பாதிச்சது! அம்மாவோட இறுதிச் சடங்கு முடிஞ்சு வந்து குளிச்சிட்டு ஓய்வெடுத்தபடி யோசிச்சப்பதான், நீங்க மூணு பேரும் வந்தீங்க!''

''நீ கிளம்பத் தயாரா இருந்தே! தாலியையும் முதல் நாள் நைட்டே கழட்டித் தந்ததா சொல்லி உன் முன்னாடியே தான் வாசுகி குடுத்தா! அப்படியே உடைஞ்சு போனேன் நான்!''

''என் காதலையும், உரிமையையும் மனசுக்குள்ளேயே புதைச்சிக்கிட்டேன்... உனக்கு எந்த பாதிப்புமில்லையான்னப்ப, இது பொய்க் கல்யாணம் தானே... எல்லாமே எங்கம்மாவுக்காக நடத்தின நாடகம்தானே... வருத்தமில்லைன்னு சொல்லிட்டு நீ கிளம்பிட்டே!''

''அப்பதான் புரிஞ்சுது! நீ ஒரு கிறிஸ்டியன்கிறதாலயும், வெளிநாட்டில வளர்ந்தவன்றதாலயும் தான் உனக்கு இந்தத் தாலி, கல்யாணம் இதோட மதிப்பு எல்லாம் தெரியலைன்னு முடிவு பண்ணினேன்!''

* * *

இன்றும் அவன் விழிகளில் அந்த வலியும், வேதனையும் கசிய, மெல்ல அவன் மார்பில் முத்தமிட்டாள் ரோஸ்.

''ஆனா, நீதான் என் மனைவின்றது மட்டும் ஒரு கணம் கண்களை மூடிய என் மனசுக்குள்ளே உறுதியாச்சு!

JUN 13 2010

ஒரு வாரம் கழிச்சி மைக்கேலுக்கு போன் செஞ்சேன். அப்பதான் தெரிஞ்சது! உங்கப்பா இறந்தது... திரும்பவும் நீ அமெரிக்கா போனது எல்லாமே!''

''இனிமே நீ வரமாட்டேன்னு அவன் சொன்னான்... அப்பதான் புரிஞ்சது... வெளி நாட்டில வளர்ந்த உனக்கு இது சாதாரணம்னு.

''அந்தக் கலாச்சாரப்படி, நீ டேட்டிங், பாய் ஃபிரண்ட்ஸ்ன்னு இருந்திருப்பே... அதனாலதான் இந்துக் களின் புனிதமான சடங்கு உன்னை பாதிக்கலைன்னு நினைச்சேன்!

''உன் வாழ்க்கையில நீ கடந்து வந்த பலரிலே நானும் ஒருத்தனோன்னு நினைக்கும் போதே மனசு ரணமாச்சு...

''ஆனா உன்னை என்னால மறக்கவும் முடியலை...

''வாசகியோட அப்பாவும் அம்மாவும் கல்யாணத்தைப் பத்திப் பேசினப்ப, மறுத்தேன்... நீதான் என் மனை வின்னு சொன்னேன், ஆனா அவங்க செஞ்ச தில்லு முல்லெல்லாம் சத்தியமா எனக்குத் தெரியாது!

''உன்னை மறக்கவும் முடியாம, வேற ஒருத்தியை மணக்கவும் முடியாம நான் தொழில்லே என்னை முழு மனசா ஈடுபடுத்திட்டிருந்தப்ப தான், ஒரு நாள் தன்ராஜ் போன் பண்ணினான்!''

''அப்புறம்தான் கிளம்பி வந்தேன்... குழந்தைகளோடத் திரும்பி உன்னை சந்திச்சது மறக்க முடியாத ஒரு அனுபவம்!''

''மனசுக்குள்ளே நிறைய கேள்விகள்...

''ஏன் என்னையே வேண்டாம்னு போன நீ குழந்தைங் களை சுமந்தே ஏஞ்சல்?'' மென்குரலில் வினவினான்.



ஒரு கணம் அந்த அழைப்பில் ... அமெரிக்கா சென்றதிலிருந்து ... அவள் திரும்பவும் அமெரிக்கா நடந்ததெல்லாம் கூற அவனுக்கோ சந்திக்கும் வரை நடந்ததெல்லாம் தவமிருந்தன பெரும் திகைப்பாய்!

என் கனவுகள் கூட உனக்காய் இதுவரை தவமிருந்தன என்று கூறவேண்டும் போல்!

தன் மேல் வைத்திருந்த நேசத்தாலேயே குழந்தையை அழிக்க அவள் சம்மதிக்காததும் புரிய நெகிழ்ந்து போன வன், ''இங்கே வந்தும் நீ எவ்வளவு என்னை பாதிச்சே தெரியுமா? என்னை அடக்க எவ்வளவு கஷ்டப்பட் டிருக்கேன்... எனக்குதான் அது தெரியும்!'' கிசுகிசுப்பாய் மொழிந்தான்.

''நான் மட்டும் என்னவாம்? உங்களை மறக்கவும் முடியாம... என்னை உங்களுக்குப் பிடிக்கலைன்றதையும் ஜீரணிக்க முடியாம... உண்மையான நேசமில்லாம நீங்க என்னை மனைவியா ஏத்துக்கறதையும் ஒத்துக்க முடியாமத் தவிச்சிட்டிருந்தேன்...''

ஊடலுடன் சிணுங்கியபடி அவன் மார்பில் செல்ல மாகக் குத்தினாள்.

''நான் உன்னை விரும்பலைன்னு நீ நினைச்சிட் டிருக்கே... நீ என்னை விரும்பலைன்னு நான் கோபமா இருந்தேன்! மனசு விட்டுப் பேசியிருந்தா எல்லாம் சரியாகியிருக்கும்... ம்!

''அதான்.. அன்னிக்கு நான் ஆசையா உன்னை நெருங்கி வந்தப்ப வார்த்தைகள்லே திராவகத்தை வீசினியா ஏஞ்சல்?'' பொய்க் கோபத்துடன் கேட்டான்.

JUN 13 2010

''அப்போ நீங்களும் என்னை நேசிக்கறது எனக்குத் தெரியாதே. தீரேன்... அதுக்குத்தான், பேசாமலே இருந்து என்னைத் துடிதுடிக்க வச்சி, அழ வச்சித் தவிக்க வெச்சிட்டீங்களோ!''

''நீங்க சொன்ன மாதிரி ரெண்டு பேரும் ஈகோவை விட்டுட்டு ஒப்பனாய் பேசியிருந்தோம்னா, இவ்வளவு நாள் வீணாகியிருக்காது! இப்பதானே புரியுது!''

''ம்... இப்ப புரிஞ்சிடுச்சா என்னைப் பத்தி... இனிமே ஒண்ணும் அப்ஜெக்‌ஷன் இல்லையே மை டியர் ஏஞ்சல்?'' சீண்டலாகக் கேட்டான் தீரேன்.

''ஊஹூம்...'' வெட்கத்துடன் தலையசைத்தபடி கிறக்கமாய் இமைகள் மூடி அந்த மான் விழி மயங்க, மெதுவாகக் குனிந்து தேன் சுமந்த அந்த இதழ்களில் கவிதை எழுத ஆரம்பித்தான் தீரேன்!

தன்னைத் தவிப்புடன் சிலிர்க்க வைத்த அந்த முத்த யுத்தத்தில் மூழ்கி, முற்றிலும் கரைந்து போனாள் அந்த ஏஞ்சல்!

அவள் கூந்தல் மல்லிகையை அவன் தாபத்துடன் நுகர்ந்தபோது, வெட்கம் தழுவி பழைய நினைவுகள் அவளுள் அணி வகுக்க, கன்னங்கள் மருதாணிச் சுவடாய் சிவந்து போயின!

அந்த ரோஜாவின் இதழ்கள், இரவுச் சூரியனாய் வந்த தீரேனின் நேசக் கிரணங்களால் விரிந்து, மலர்ந்த நேசப் பூவாய்!

வீட்டின் பின்புறமிருந்த ஏரிக்கரையோரத்துப் பனை மரங்கள் மெல்லத் தலையசைத்து நிலவை வரவேற்க ஆயத்தமாகின!

இரவின் தேவதைகளாய்... வானில் நட்சத்திரங்கள் ஒளிச் சிறகுகளுடன் கண் சிமிட்டின.

JUN 13 2010